
மோடி குறித்து அவதூறு: கெஜ்ரிவால் மீது வழக்கு
பக். 06


அணு உலைக்கு தயாரித்து அசத்திய இளம் விஞ்ஞானி
பக். 07


கிண்ணம் சுவீகரித்தனர் கார்மேல் போப்ஸ் வி.க.
பக். 24


யுவராஜ் இல்லாத அணியா?
பக். 25


# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

பக்கம் : 26

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.20
கொழும்பு : ரூபா.30

சுடர்: 29 கதிர்: 104 வள்ளுவர் ஆண்டு: 2045 மாசி 26, திங்கள் 10.03.2014


10 MAR 2014

இன்றைய காலநிலை



கூடிய வெப்பநிலை 33 °c
குறைந்த வெப்பநிலை 27 °c
வெப்பமான காலநிலை

## யாழ். மாநகர வீதிகளுக்கு பெயர்ப்பலகை

யாழ்ப்பாணம். மார்ச் 10
யாழ். மாநகர சபை எல்லைக்கு உட்பட்ட வீதிகளுக்கு பெயர்ப் பலகை பொருத்துதல் மற்றும் ஆதனங்களுக்கு இலக்கமிடுதல் என்பனவற்றுக்காக 4 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.
இதற்கான வேலைத்திட்டங்களை ஆரம்பிப்பது தொடர்பில் கடந்த மாதம் நடைபெற்ற சபைக்கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டுள்ளது.
இதன்படி யாழ். மாநகர சபை எல்லைக்கு உட்பட்ட 320 வீதிகளுக்கு பெயர்ப்பலகை அமைக்கப்படவுள்ளது. அத்துடன்

23 ஆம் பக்கம் பார்க்க

# நலன்புரி நிலையத்திலுள்ள வலி. வடக்கு மக்களை வளலாயில் குடியேற்றத் திட்டம்

### சம்மதத்தைப் பெறுமாறு இராணுவம் அரச அதிபருக்கு கறாராகத் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 10
வலி. வடக்கிலிருந்து இடம் பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களை வளலாயில் குடியேற்றவுள்ளதாக யாழ். மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் உதய பெரேரா தெரிவித்துள்ளார்.
இதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமை நாயகத்திடம் அவர் கேட்டுள்ளார்.
வலி. வடக்கு மக்களின் மீள் குடியமர்வு தொடர்பில் யாழ். மாவட்ட அரச அதிபர் மற்றும் மாவட்டச் செயலக அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள், திணைக்களத் தலைவர்களுடன் பலாலியில் நேற்றுச் சந்திப்பு இடம்பெற்றது. இந்தச் சந்திப்பில் பேசிய யாழ். மாவட்டக் கட்டளைத் தளபதி, தற்காலிக முகாம்களில் உள்ள மக்களை வளலாயில் குடியேற்றும் திட்டம் பற்றி எடுத்துரைத்துள்ளார்.

23 ஆம் பக்கம் பார்க்க

# யானை மிதித்து விசுவமடுவில் ஏ.எல். மாணவன் பரிதாபச் சாவு

### நேற்றுக் காலை தருமபுரத்திலும் யானை தாக்கி ஒருவர் காயம்

முல்லைத்தீவு, மார்ச் 10
விசுவமடுவில் கிராமங்களுக்குள் புகுந்து அட்டகாசம் செய்த யானையை விரட்டிச் சென்ற மாணவனை அந்த யானை தூக்கி எறிந்து மிதித்துத் துவம்சம் செய்ததில் தலை நசுங்கிப் பரிதாபகரமாக உயிரிழந்தார்.
நேற்றிரவு அவரது சடலத்தை காட்டில் இருந்து மீட்ட பொலிஸார் அதனை கிளிநொச்சி வைத்தியசாலையில் ஒப்படைத்தனர்.
இதற்கிடையே நேற்றுக் காலை விசுவமடுவை அண்டிய தருமபுரத்தில் யானை தாக்கியதில் மற்றொருவர் காயமடைந்தார். தேங்காய் வியாபாரத்துக்குச் சென்று கொண்டிருந்த அவரை கொலைவெறியுடன் யானை துரத்திய போதும் சயோசிதமாக ஒடித் தப்பிய அவர் பின்னர் கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்ப்பிக்கப்பட்டார்.
கடந்த இருபது வருடங்களில் விசுவமடு கிராமங்களுக்குள் புகுந்து யானை அட்டகாசம் செய்து ஒருவரைக் கொன்று போட்டிருப்பது இதுவே முதல் தடவை என்று மக்கள் கூறுகின்றனர்.
முல்லைத்தீவு மாவட்டத்தில் அமைந்துள்ளது விசுவமடு மற்றும் தருமபுரம் பகுதிகள்.
விசுவமடுவின் நாச்சிக்குடா கிராமத்தில் நேற்றுப் புகுந்த யானை கொலைவெறியாட்டம் போட்டது. ஊர்மனைக்குள் பயிர்களை அழித்து கண்ணில் பட்டதை எல்லாம் புடுங்கி எறிந்து அட்டகாசம் பண்ணியது. இதனால் மக்கள் பெரும் அச்சமடைந்தனர்.
உடனே ஊரவர்கள் திரண்டு அதனைக் காட்டுக்குள் விரட்டினர். எனினும் அது திரும்பி வந்து கிராமத்தில் அழிச்சாட்டியம் செய்தது.
சாவு வீடு ஒன்றில் கலந்து கொண்டிருந்த சில இளைஞர்கள் ஊருக்குள் யானை புகுந்


யானை தாக்கி உயிரிழந்த மாணவன்

23 ஆம் பக்கம் பார்க்க


ஒதியமலை கோயிலை ரவிகரன் பார்வையிட்டார்

## வழிபாடு செய்யச் சென்ற மக்கள் இராணுவத்தினர் விரட்டியடிப்பு

### ஒதியமலை வைரவர் ஆலயத்தில்

கொழும்பு, மார்ச் 10
ஒதியமலையில் அமைந்துள்ள வரலாற்று சிறப்பு மிக்க வைரவர் கோயில் வளாகத்தை இராணுவத்தினரிடமிருந்து மீட்டுத் தருமாறு அந்தப் பகுதி வடமாகாண சபை உறுப்பினர் து.ரவிகரனிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.
பாரம்பரிய நம்பிக்கைகளைக் கொண்ட வரலாற்று சிறப்பு மிக்க ஒதியமலை வைரவர் கோயில் மலையடி வாரத்தில் இயற்கை அழகுடன் காணப்படுகிறது. இந்தப் பகுதியை இராணுவத்தினர். தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ளனர். இதனால் அங்கு சென்று

23 ஆம் பக்கம் பார்க்க

# மனித உரிமைகளை பாதுகாக்க இலங்கை அரசு தவறியுள்ளது

### அமெரிக்கப் பிரேரணையின் தேவை குறித்து மொரீஷியஸ் கருத்து

கொழும்பு, மார்ச் 10
மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்காக நாம் எப்போதும் குரல்கொடுப்போம். இதற்காகவே இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வரும் பிரேரணைக்கு நாம் ஆதரவு வழங்கியுள்ளோம். இவ்வாறு தெரிவித்துள்ளார் மொரீஷியஸ் நாட்டின் வெளியுறவு அமைச்சர் அர்வின் பூலெல்.
இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,
ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவிப்பிள்ளையின் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிலையிலும், கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் முடிவுகளின் படியும் பொது நலவாய மாநாட்டின் இறுதி முடிகளின் அடிப்படையிலுமே நாங்கள் இந்த பிரேரணைக்கு அனுசரணை வழங்குகிறோம்.

23 ஆம் பக்கம் பார்க்க

## ஈழத் தமிழருக்கு ஆதரவுகோரி நாம் தமிழர் கட்சி ஆர்ப்பாட்டம்

சென்னை, மார்ச் 10
ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நடைபெற்றுவரும் 25 ஆவது கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராக அமெ

23 ஆம் பக்கம் பார்க்க

## அமெ. தீர்மான வரைவை ஆராய்கிறது கூட்டமைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 10
ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பில் அமெரிக்காவினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மூன்றாவது தீர்மானத்துக்கான வரைவு குறித்து தாம் அவதானமாக கவனத்தில் எடுத்துள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேற்றிரவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
அமெரிக்கத் தீர்மான வரைவு குறித்து தமிழ்த் தேசியக் கூட்

23 ஆம் பக்கம் பார்க்க

## இலங்கை குறித்து யஸ்வந்த் சின்ஹா இன்று உரை

டில்லி, மார்ச் 10
இலங்கையின் மனித உரிமை நிலைமை தொடர்பில், இந்தியாவின் முன்னாள் வெளிவிவகார அமைச்சரும், பா.ஜ.க. மூத்த தலைவருமான யஸ்வந்த் சின்ஹா சென்னையில் இன்று மாலை கருத்துரை நிழ்த்தவுள்ளதாக த ஹிந்து நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.
ம.தி.மு.க பொதுச் செயலாளர் வை.கோ தலைமையில் சென்னை எழும்பூரிலுள்ள சிராஜ் அரங்கத்தில் இன்று மாலை 6 மணிக்கு இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது.
இதில் சிறப்புரையை இலங்கையின் மனித உரிமை நிலைமை என்னும் தலைப்பில் இந்தியாவின் முன்னாள் வெளிவிவகார அமைச்சரும்,

23 ஆம் பக்கம் பார்க்க

# இலங்கை நிலைமைகளை ஆராய ஜெனிவாவில் இன்று பக்க அமர்வுகள்

ஜெனிவா.மார்ச்.10

இலங்கைக்கு எதிராக ஐ.நா. மனித உரிமைகள் சபையில், தொடர் கலந்துரையாடல்கள் நடத்தப்படவுள்ளன. பிரதான அமர்வுக்கு புறம்பாக இந்தப் பக்க அமர்வுகள் இன்று நடைபெறும் என தெரிவிக்கப்படுகிறது.

இலங்கைக்கு எதிராக சமர்ப்பிக்கப்பட்டுள்ள தீர்மான வரைபு, மற்றும் இலங்கையின் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஆராயம் நோக்கில் இந்த பக்க அமர்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

**தீர்மான வரைவுக் கலந்துரையாடல்**

அமெரிக்கா தலைமையில் தீர்மானத்தை முன்வைத்துள்ள நாடுகளால், மற்றொரு முறைசாராக் கலந்துரையாடல் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. ஜெனிவா மனித உரிமைகள் சபையின், எட்டாவது இலக்க அறையில் ஜெனிவாநேரப்படி இன்றுபி.ப 2.30 மணி தொடக்கம், 4.30 மணி வரை இந்தக் கலந்துரையாடல் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

**மனித உரிமை மீறல் கலந்துரையாடல்**

அதேவேளை, இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் விடயங்கள் தொடர்பில் ஆராயவென விசேட கலந்துரையாடல் ஒன்று இன்று ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. எல்லா வகையான பாகுபாடுகள் மற்றும் இனவாதத்துக்கு எதிரான அனைத்துலக அமைப்பினால் இந்தக் கலந்துரையாடல் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இலங்கையின் மனித உரிமைகள் என்ற தலைப்பில் பி.ப 3.30 மணி தொடக்கம், பி.ப. 5.30 மணி வரை 24 ஆவது அறையில் இந்தக் கலந்துரையாடல் நடக்கவுள்ளது.

**நடந்தேறிய கலந்துரையாடல்**

இதேவேளை, இலங்கைக்கு எதிரான தீர்மானத்தைக் கொண்டுவந்துள்ள அமெரிக்கா, பிரிட்டன், மொன்ரனிக்ரோ, மொறிசியஸ், மசிடோனியா ஆகிய நாடுகள் சார்பில், கடந்த வெள்ளிக்கிழமை பகிரங்க முறைசாரா விவாதம் நடத்தப்பட்டுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில், அமெரிக்கத் தீர்மானத்தை ஆதரிக்கும் நாடுகளும் இலங்கைக்கு ஆதரவான நாடுகளும் பல்வேறு அனைத்துலக அமைப்புகளும் கலந்து கொண்டிருந்தன. தீர்மான வரைவில் இடம்பெற்றுள்ள வாசகங்கள் குறித்து இந்தக் கூட்டத்தில் பல்வேறு நாடுகளின் பிரதிநிதிகளும் உரையாற்றியுள்ளதாகத் தெரியவருகிறது.

கனடா, பிரிட்டன், மற்றும் ஐரோப்பிய நாடுகள் அனைத்தும் அமெரிக்கத் தீர்மானத்துக்கு ஆதரவாக வாதிட்டுள்ளன. பாகிஸ்தான், சீனா, ரஷ்யா, வெனிசுலா உள்ளிட்ட நாடுகள் இலங்கையை ஆதரித்து கருத்து வெளியிட்டுள்ளன.

போர் முடிந்து நான்கரை ஆண்டுகளாகியும் மனித உரிமைமீறல்களுக்குப் பொறுப்புக்கூறும் விடயத்தில் இலங்கை அரசு எந்தவித முன்னேற்றத்தையும் காட்டவில்லை என்று தீர்மானத்துக்கு ஆதரவான நாடுகள் தெரிவித்தன.

ஆனால், இலங்கைக்கு இன்னும் கால அவகாசம் கொடுக்க வேண்டும் என்று பாகிஸ்தான், சீனா, ரஷ்யா உள்ளிட்ட நாடுகள் வாதிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

**இந்தியா மௌனம்**

ஆனால், இந்த கலந்துரையாடலில் இந்தியத் தரப்பில் கீழ்நிலை அதிகாரி ஒருவரே பங்கேற்றிருந்தார் என்றும் அவர், அமெரிக்காவின் தீர்மானம் தொடர்பாக எந்தக் கருத்துக்களையும் வெளியிடவில்லை எனவும் தெரியவருகிறது.

வெள்ளிக்கிழமை நடந்த கலந்துரையாடலில், பாகிஸ்தானும் கியூபாவும் மட்டுமே, இலங்கைக்கு ஆதரவாக கருத்துகளை வெளியிட்டதாகவும் ர்ஷ்யாவும், சீனாவும், ஓரளவுக்கே இலங்கைக்கு ஆதரவாகக் குரல் கொடுத்ததாகவும் ஏனைய பெரும்பாலான நாடுகள் இலங்கை தொடர்பில் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியதாகவும் தெரியவருகிறது. (ஐ-5)

## மதில் இடிந்து வீழ்ந்ததில் சிறுவன் படுகாயம்


புதிதாகக் கட்டிய மதிலில் சிறார்கள் ஏறியபோது மதில் சரிந்து விழுந்ததில் அதனுள் அகப்பட்டு 3 வயதுச் சிறுவன் ஆபத்தான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளான். இந்தச் சம்பவம் நாவற்குழி 300 வீட்டுத் திட்டத்தில் நேற்று மதியம் இடம்பெற்றது. சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த ஜெயசுகிர் தன் ஜெயடினோஜன் என்ற சிறுவனே காயத்துடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளான்.

அந்தப் பகுதியில் ரயில் பாதை அமைக்கும் பணி இடம்பெற்று வருகிறது. மிக சிலநாள்களுக்கு முன்னரே குறித்த வீட்டுக்கு மதில் சுவர் அமைக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் அந்த மதில் ஓரமாக சிறுவன் நின்று வெளியே ரயில் பாதை அமைக்கும் பணிகளை பார்வையிட்டுக்கொண்டிருந்துள்ளான். குறித்த சிறுவனது மூத்த சகோதரர்கள் இருவர் மதிலில் ஏறியுள்ளனர். இதன்போது மதில் சரிந்து சிறுவனுக்கு மேல் சரிந்துள்ளது.

இதன்போது சிறுவன் பலத்த காயங்களுக்கு உள்ளானான். அயலவர்களின் உதவியோடு சிறுவனை மீட்ட பெற்றோர் உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்த்தனர். (ஐ-4)

## கிராம சேவகர் பணிமனைகளுக்கு வருக

வலி. வடக்கு பிரதேச செயலர் பிரிவிலிருந்து இடம்பெயர்ந்து கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் தற்காலிகமாக வசிப்பவர்கள் தத்தமது கிராம சேவையாளர் பணிமனைகளுக்கு இன்று காலை 9.30 மணிக்கு குடும்ப அட்டைகளுடன் சமூகமளிக்குமாறு கோப்பாய் பிரதேச செயலர் கேட்டுள்ளார். (400)




இலங்கைக்கான பிரான்ஸ் தூதுவர் ஜோன் போல் மொன்ஞ்சு யாழ்ப்பாணத்துக்கு நேற்று பயணம் மேற்கொண்டார். இதன்போது உதயன் அலுவலகத்துக்கு வருகைதந்த அவர் உதயன் குழுமத்தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஈ.சரவணபவன் மற்றும் உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ம.வ.கானமயில்நாதன் ஆகியோரை சந்தித்து கலந்துரையாடினார். (ஐ - 23)

# அமெரிக்க பிரேரணை குறித்து இந்தியா விரிவாக ஆராய்கிறது

புதுடில்லி,மார்ச்.10

இலங்கைக்கு எதிரான அமெரிக்கத் தீர்மான வரைபு தொடர்பில், கடந்த ஆண்டுகளைப் போன்றே, இந்த ஆண்டும் அமெரிக்க அதிகாரிகளுடன் ஜெனிவாவிலுள்ள இந்திய அதிகாரிகள் பேச்சு நடத்துவர் என இந்திய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் சையட் அக்பருதீன், கொழும்பு ஆங்கில ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ளார். அமெரிக்காவின் தீர்மான வரைவு மூன்று நாள்களுக்கு முன்னர் ஜெனிவாவில் உள்ள இந்தியத் தூதரகத்துக்கு கிடைத்தது. அது கவனமாகப் பரிசீலனை செய்யப்பட்டு வருகின்றது. தேவைப்பட்டால், அங்குள்ள இந்திய அதிகாரிகள், முன்னைய சந்தர்ப்பங்களைப்போன்றே, இந்த முறையும் தீர்மானத்தை முன்வைத்துள்ள அமெரிக்காவுடன் பேச்சு நடத்துவர்.

கடந்த இரண்டு சந்தர்ப்பங்களிலும், நாம் தீவிரமான பேச்சுக்களில் ஈடுபட்டிருந்தோம். இந்த முறை இதுவரை எந்தவொரு பேச்சுக்களையும் பற்றிச் சிந்திக்க முன்னர், தீர்மான வரைவை கவனமாக ஆராய வேண்டியுள்ளது. இது ஆரம்பக்கட்டம் என்பதால் வேறெதையும் சொல்ல முடியாது.

அனுசரணை நாடுகளுடன் வரைவின் உள்ளடக்கம் குறித்து தீவிரமான பேச்சுக்களில் ஈடுபட முன்னர், தீர்மான வரைவு குறித்து ஆராய, இந்தியாவுக்கு இன்னும் கொஞ்சக் காலம் தேவைப்படுகிறது. குடந்த இரண்டு ஆண்டுகளிலும் தீர்மானத்தை இந்தியா நீர்த்துப் போகச் செய்யவில்லை.

ஆனால், செயற்படு பொறிமுறைக்காக இந்தியா பணியாற்றியது. இலங்கைக்கு எதிராக இந்தியா வாக்களிக்குமா என்று இப்போது கூற முடியாது. எமது நிலைப்பாட்டை உறுதிப்படுத்துவதற்கு இன்னும் காலம் உள்ளது - என்றார். (ஐ-5)

# அமெரிக்காவின் தீர்மான வரைவை காத்திரமாக்கி நிறைவேற்ற வேண்டும்

## *அதுவே எம்முன் உள்ள முதல் கடமை என்கிறார் சுமந்திரன் எம்.பி.*

எமக்குள் பிரிவுகள் வேண்டாம். ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் தற்போது முன்வைக்கப்பட்டுள்ள தீர்மானத்துக்கான வரைவை மேலும் காத்திரமானதாக்கி நிறைவேற்ற வைக்க வேண்டும். அதுவே எம்முன் இப்போது உள்ள கடமை.

இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன். ஜெனிவாவில் மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடரில் இலங்கை தொடர்பான தீர்மானத்தை நிறைவேற்றுவது தொடர்பான பணிகளில் இருந்த அவர் நேற்றுமுன்தினம் நாடு திரும்பியிருந்தார்.

இந்த நிலையில் ஜெனிவாவில் சர்வதேச விசாரணை ஒன்றைத் தான் கோரவில்லை என்று தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டுத் தொடர்பில் உதயன் பத்திரிகைக்குக் கருத்துத் தெரிவித்தார் அவர்.

ஜெனிவா சென்ற தன்னை பேசுவதற்குச் சுமந்திரன் இடமளிக்கவில்லை என்றும் போர்க் குற்ற விசாரணை ஒன்று தொடர்பில் தீர்மானம் ஒன்று கொண்டுவரப்பட வேண்டும் என்று சுமந்திரன் ஜெனிவாவில் வலியுறுத்தவே இல்லை என்றும் வடக்கு மாகாணசபை கூட்டமைப்பு உறுப்பினர் அனந்தி சசிதரன் தெரிவித்திருந்தார் என ஊடகங்களில் செய்திகள் வெளியாகி இருந்தன.

இது குறித்து சுமந்திரன் தெரிவித்ததாவது:

இந்தக் குற்றச்சாட்டுக்களுக்குப் பதிலளிப்பதில்லை என்றே நினைத்திருந்தேன். ஆனால் ஜெனிவாவில் இத்தகைய கருத்துக்கள் பெரும் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. அமெரிக்கா முன்வைத்துள்ள தீர்மான வரைவை இன்னும் காத்திரமாக்கி அதை நிறைவேற்றி வைக்க பாடுபடும் அனைவருக்கும் இத்தகைய கருத்துக்களால் அசௌகரியங்களும் தடங்கலும் ஏற்படுகின்றன.

பெப்ரவரி 12, 13, 14 திகதிகளில் நானும் அனந்தியும் ஜெனிவாவில் இருந்தோம். அங்கிருக்கும் போதும் நாடு திரும்பியதும் இந்தப் பயணம் குறித்து அனந்தி தெரிவித்த கருத்துக்களைக் கொண்டு செய்திகள் வெளியாகி இருந்தன. தான் பலரையும் அங்கு சந்தித்தார் என்றும் உண்மையான நிலைமையை அவர்களுக்கு விளக்கினார் என்றும் சர்வதேச விசாரணை ஒன்றே அவசியம் என்று கூறினார் என்றும் அவர் தெரிவித்த கருத்துக்கள் ஊடகங்களில் பிரசுரமாகி இருந்தன.

பத்திரிகை ஒன்றுக்கு அவர் அளித்த முழுப் பக்கப் பேட்டியில் கனேடிய தூதரக அதிகாரிகளுடனும் அமெரிக்க அதிகாரிகளுடனும் நடந்த சந்திப்புக்களில் சுமந்திரன் தனதுகதையையைமயப்படுத்தியும்சர்வதேச விசாரணையை மையப்படுத்தியும் கருத்துக்களைத் தெரிவித்தார் என்றும் மனித உரிமைகள் சபையில் இந்த முறையும் காத்திரமான தீர்மானம் ஒன்று வராது என்பதைத் தான் அறிந்திருந்தார். ஏனெனில் மென் போக்கான தீர்மானம் ஒன்று தான் அங்கு வெற்றிபெறும் என்று தான் கருதுகிறார் என்றும் அவர் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் அவர் திடீரென இவ்வாறான கருத்துக்களைத் தெரிவித்திருப்பது எனக்கு வியப்பளிக்கிறது. அரசியல் சுயலாபத்துக்காக இப்போது அவர் தனது கதையை முழுமையாக மாற்றி, தன்னைச் சுமந்திரன் பேச விடவில்லை என்றும் போர்க் குற்ற விசாரணை ஒன்றுக்கு வலியுறுத்தவில்லை என்றும் கூறியிருப்பது வியப்பளிக்கிறது.

அதைவிட, அனந்தியின் கருத்துக்களை ஏற்கனவே பிரசுரித்திருந்த ஊடகங்களின் செய்தியாளர்களும் அது பற்றி அவரிடம் கேள்வி எதுவும் கேட்காமல் இருந்தமை எனக்கு அதிகம் வியப்பளிக்கிறது.


அனந்தியின் கருத்துக்கள் குறித்து நான் அதிகம் பேச விரும்பவில்லை. எமக்கு இந்த நேரத்தல் பிரிவுகள் வேண்டாம். தீவிரவாதக் கருத்துக்களைத் தெரிவிப்பதாக நினைப்பவர்கள் அரசுக்குச் சார்பாகவே நடக்கிறார்கள் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

மனித உரிமைகள் சபையில் அமெரிக்கா தற்போது முன்வைத்துள்ள தீர்மானம் இலங்கையின் ஆட்சிமாற்றத்துக்கானதே அன்றி, தமிழ் மக்களின் நலன் சார்ந்ததோ இனப்பிரச்சினைக்கான தீர்வை முன்வைப்பதாகவோ அமையவில்லை என்று கூறுகின்றார்கள். இதையேதான் அரசும் கூறுகின்றது. எனவே சுயலாப அரசிலை விடுத்து தமிழ் மக்களின் நலன் கருதி அனைவரும் இந்தத் தருணத்தில் ஒன்றுபட்டுச் செயற்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு சுமந்திரன் தெரிவித்தார். (உ)

## பளையில் நேற்று மருத்துவ முகாம் திரண்டு வந்தனர் பலநூறு பேர்

பளை, மார்ச் 10

பச்சிலைப்பள்ளி அபிவிருத்திச் சங்கத்தினால் பளை மத்திய கல்லூரியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடத்தப்பட்ட இலவச மருத்துவ பரிசோதனை முகாமில் சுமார் 700 பேர் வரை கலந்துகொண்டனர்.



சாவகச்சேரி லயன்ஸ் கழக பொருளாளர் பயனாளி ஒருவருக்கு மூக்குக் கண்ணாடி அணிவிக்கிறார்

பளை சுகாதார வைத்திய அதிகாரி தலைமையிலான மருத்துவக் குழுவினர் கண், நீரிழிவு, இரத்த அமுக்கம், வாய்ப் புற்றுநோய், பெண் நோயியல் பொது மருத்துவம் ஆகிய மருத்துவ பரிசோதனைகளை நடத்தினர்.

சாவகச்சேரி லயன்ஸ் கழகம், உரும்பிராய் லயன்ஸ் கழகம், சாவகச்சேரி ஆதார மருத்துவ மனை, நீரிழிவு சிகிச்சை நிலையம் ஆகியவை பச்சிலைப் பள்ளி அபிவிருத்திச் சங்கத்துடன் இணைந்து நடத்தினர். சங்கத்தினர் ஒலிபெருக்கி மூலம் பிரதேசத்தின் அனைத்துப் பகுதியிலும் அறிவித்ததால் காலை 7 மணி தொடக்கம் மக்கள்வந்தவண்ணம்இருந்தனர்.

கண் சிகிச்சைப் பிரிவில் பரிசோதனையின்போது பார்வையில் குறைபாடு காணப்பட்ட வறுமைக் கோட்டின் கீழ் உள்ளவர்களுக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட விருந்தன.

அத்துடன் பரிசோதனையில் கலந்து கொண்ட கர்ப்பிணிகளுக்கும் பாலூட்டும் தாய்மாருக்கும் சத்துணவுப் பொதிகளும் வழங்கப்பட்டன. சங்கத் தலைவர் கு.ந.பாலசந்திரன் தலைமையில் நடைபெற்ற முகாமில் சங்கத்தின் மத்திய குழுத் தலைவரும், வடமாகாண சபை உறுப்பினருமான ப.அரியரத்தினம், பளை பிரதேச சபை செயலாளர் இ.சிவப்பிரகாசம் உட்பட சங்கத்தின் அனைத்து உறுப்பினர்களும் வருகை தந்த மக்களுக்கு சகல வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்தனர். யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் வருகை தந்து பார்வையிட்டுச் சென்றார். (ஒ-9)

## மகளிர் தினத்தையொட்டி நேற்று நடைபெற்ற கண்டனப் பேரணி

யாழ்ப்பாணம், மார்ச் 10




பேரணியில் திரண்ட பெண்கள்

சர்வதேச மகளிர் தினத்தையொட்டி யாழ்.சமூக சேவைகள் செயற்பாட்டு அமைப்பு பெண்களுக்கு எதிரான வன்முறைகள், அடக்கு முறைகளைக் கண்டித்து மாபெரும் கண்டனப் பேரணியை நேற்று ஞாயிற்றுக்கிழமை நடத்தியது.

நல்லூர் கந்தசுவாமி கோயில் முன்றிலில் இருந்து காலை 9 மணிக்கு ஆரம்பமான பேரணி, பருத்தித்துறை அரசடி வீதி வழியாக யாழ்.இந்து மகளிர் கல்லூரியை வந்தடைந்தது.

கண்டனப் பேரணியில் பெண்கள் மீதான கொடுமைகளைச் சித்தரிக்கும் ஊர்திகளும் இடம் பெற்றன. மாட்டு வண்டில்களும் இதில் கலந்துகொண்டன. பெண்கள் அமைப்புகளைச் சேர்ந்த ஐந்நூறுக்கும் அதிகமான பெண்களுடன் ஆண்களும் பேரணியில் கலந்து கொண்டனர். பெண்கள் உரிமைகளும், மனித உரிமைகளும் என்ற தொனிப் பொருளிலான கண்டனப் பேரணியில் "மகளிர் பாதுகாப்பே செகத்தின் பாதுகாப்பு" , "பெண்கள் அடக்கு முறையைத் தகர்த்திடுவோம்" போன்ற ஏராளமான சுலோக அட்டைகளும் எடுத்துவரப்பட்டன. (வ-7)

## மீனவர் பிரச்சினை; கொழும்பில் பேச்சு

### யாழ். மாவட்டத்திலிருந்து 4 பேர் செல்வர்

இலங்கைக் கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் மீன்பிடிப்பது தொடர்பாக இலங்கை இந்திய மீனவர்களுக்குஇடையில்இந்த மாதம் 13 ஆம் திகதி கொழும்பில் நடைபெறவிருக்கும் பேச்சு வார்த்தையின்போது யாழ். மாவட்டத்திலிருந்து கிராமிய கடற்றொழில் அமைப்புக்களைச் சேர்ந்த நான்கு பிரதிநிதிகள் கலந்துகொள்ளவுள்ளனர்.

இலங்கைக் கடற்பரப்புக்குள் எல்லை மீறி வரும் இந்திய மீனவர்கள் சட்ட விரோதமான முறையில் தடைசெய்யப்பட்ட முறைமைகளைப் பயன்படுத்தி கடல் வளங்களை அழித்து வருவதனால் வடபகுதி மீனவர்களின் வருமானத்தில் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதுடன் மீன்களின் உற்பத்தியும் குறைந்து கொண்டு வருகின்றது.

பல வருடங்களாக நீடித்து வரும் இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணும் வகையில் இந்திய மீனவர்களின் ஊடுருவலைத் தடுப்பது குறித்து இலங்கைக் கடற்றொழில் அமைச்சருக்கும் இந்திய அமைச்சருக்கும் இடையில் கடந்த ஜனவரி மாதம் 15 ஆம் திகதி டெல்லியில் நடைபெற்ற பேச்சு வார்த்தையின்போது தீர்வு எட்டப்படாததால் பேச்சு வார்த்தை ஒத்தி வைக்கப் பட்டது.

அதை அடுத்து இலங்கை மீனவர் பிரதிநிதிகளுக்கிடையில் கடந்த பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதி சென்னையில் நடைபெற்ற பேச்சின் போதும் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவில்லை.

இந்த நிலையில் ஏற்கனவே இந்தியாவில் இடம்பெற்ற இரு பேச்சு வார்த்தைகளின் போதும் மீனவர் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்காததால் மூன்றாவது பேச்சு இலங்கையில் நடைபெறும் என்றும் அதிகாரிகளால் அறிவிக்கப்பட்டிருந்தது.

இதற்கமைய இந்த மாதம் 13 ஆம் திகதி கொழும்பு மாளிகாவத்தையிலுள்ள கடற்றொழில் அமைச்சின் கேட்போர் கூடத்தில் இந்திய மீனவர்களுக்கும் இலங்கை மீனவர்களுக்கும் இடையில் நடைபெறவுள்ள பேச்சில் குடாநாட்டிலிருந்து மீனவர்கள் சார்பில் நான்கு பிரதிநிதிகள் கலந்து கொள்வார்கள்.

யாழ்.மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் கணேசமூர்த்தி மற்றும் தேசிய கடற்றொழில் சம்மேளனத்தின் உப தலைவரும், யாழ். மாவட்ட கிராமியக் கடற்றொழில் அமைப்புக்களின் சம்மேளனத் தலைவருமான என்.பொன்னம்பலம், பருத்தித்துறை, காரைநகர், நெடுந்தீவு ஆகிய மூன்று கிராமியக் கடற்றொழில் அமைப்புக்களைச் சேர்ந்த அருள்ராஜ், இரா.சந்திரன், இரத்தினம் ஆகியோரும் மேற்படி பேச்சில் பங்குபற்றுவார்கள்.

இதேவேளை, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த மீனவப் பிரதிநிதிகளும் கலந்து கொள்வார்கள். (வ-115)

## புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத் திருவிழா இன்று ஆரம்பம்

கிளிநொச்சி, மார்ச்.10

வரலாற்றுச் சிறப்பு மிக்க கிளிநொச்சி கரைச்சி புளியம் பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தில் வருடாந்த பொங்கல் திருவிழா இன்று விளக்கு வைத்தல் பூசையுடன் ஆரம்பமாகின்றது. எதிர்வரும் 17 ஆம் திகதி பங்குனி உத்தரத்தில் பொங்கல் விழா நடைபெறவுள்ளது.

இதில் விளக்கு வைத்தலை தொடர்ந்து பாரம்பரிய முறைப்படி இந்தப் பிரதேசத்திலே விளைகின்ற நெல் மற்றும் தானியங்களை மாட்டு வண்டிலில் யாழ்ப்பாணம் தென்மராட்சி புத்தூர் சந்திக்கு எடுத்துச் சென்று அங்கே அவற்றைக் கொடுத்து பொங்கலுக்குரிய பண்டங்களை எடுத்து வருகின்ற மரபு பேணப்பட்டு வருகின்றது. அதே போன்று இவ்வருடமும் பண்டம் எடுத்து வரப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது. (வ-55)

## பார்வையாளர் மனங்களைக் கவர்ந்த ஆண்கள் பங்குபற்றிய நாடகம்

### சர்வதேச மகளிர் தின நிகழ்வில்

தென்மராட்சி, மார்ச் 10

சர்வதேச மகளிர் தினத்தையொட்டி சாவகச்சேரி நகர் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் நடத்திய மகளிர் தின நிகழ்வில் ஆண்கள் பங்குபற்றிய நாடக நிகழ்வில் கலந்து கொண்ட விருந்தினர்களையும் பார்வையாளர்களையும் வெகுவாகக் கவர்ந்தது.

நேற்று முன்தினம் சாவகச்சேரி புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலைய முன்றிலில் இடம்பெற்ற நிகழ்வில் தென்மராட்சி பிரதேச செயலர், உதவிப் பிரதேச செயலர், பிரதித் திட்டமிடல் பணிப்பாளர், நகர்ப்பகுதி (ஜே/300) கிராம அலுவலர், தலைவர் உட்பட பெருமளவு பெண்களும் ஆண்களும் கலந்து கொண்ட னர்.

பெண்களால் நடத்தப்படும் மகளிர் தின நிகழ்வொன்றுக்கு பெருமளவு ஆண்கள் கலந்து கொண்டமைக்கு விருந்தினர்களின் உரையில் பாராட்டுத் தெரிவிக்கப்பட்டது.

பெண்களால் பல்வேறு கலை நிகழ்வுகள் நடத்தப்பட்ட போதிலும் ஆண்களால் நடத்தப்பட்ட நாடகம் அனைவரையும் கவர வைத்தது.

சங்கத்தால் சர்வதேச மகளிர் தினத்தையொட்டி சங்க எல்லைப் பரப்பில் உள்ள பெண்கள், ஆண்கள், பாடசாலை மாணவர்கள், முன்பள்ளிச் சிறார்கள் ஆகியோரிடையே நடத்தப்பட்ட பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன. சங்க எல்லைப் பிரப்பில் வாழும் மூத்த பெண் நிகழ்வில் கௌரவிக்கப்பட்டார். (வ-9)

## வளலாய் அமெ.மிஷன் பாடசாலை மீள ஆரம்பிக்குமாறு கோரிக்கை

அச்சுவேலி, மார்ச் 10

வளலாய் அமெரிக்கன் மிஷன் பாடசாலையை மீண்டும் செயற்பட வைக்க வேண்டும். பாடசாலைக்கான கட்டுமானங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று வளலாய் அமெரிக்கன் மிஷன் பாடசாலை மீள் அபிவிருத்திச் சபை மற்றும் வளலாய் மீள் குடியேற்ற செயற்குழு மற்றும் பொது அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன. பாடசாலையை மீள ஆரம்பிப்பது தொடர்பான கோரிக் கையை வலியுறுத்தி தனித் தனி மனுக்கள் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள் ளன.

1880 ஆம் ஆண்டு காலப் பகுதியில் அமெரிக்கன் மிஷனரியால் ஆரம்பிக்கப்பட்ட வளலாய் அமெரிக்கன் மிஷன் பாடசாலை வளலாய், தம்பாலை, இடைக்காடு பகுதியின் கல்வி வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தது. 130 வருட கல்விப் பாரம்பரியத்தைக் கொண்டது. 1996 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இடம்பெயர்நிலையில் தற்காலிகமாக மூடப்பட்டது.

வளலாய் மீள்குடியேற்றத்துடன் பாடசாலையின் மீள் கட்டுமானங்களுக்கு 60 லட்சம் ரூபா நிதியும், ஆரம்ப நிதியாக ஒதுக்கீடு செய்யப்பட்டது. இன்றுவரை பாடசாலையின் செயற்பாடுகளுக்கு ஏற்பாடு செய்யப்படவில்லை என்று மனுக்களில் வலியுறுத்தப்பட்டுள்ளன.

பாடசாலை மீள ஆரம்பிப்பதற்கு வசதியாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள், அமைச்சர்கள் ஆகியோரை வளலாய் அமெரிக்கன் மிஷன் மீள் அபிவிருத்திச்சபை, வளலாய் மீள் குடியேற்ற செயற்குழுவின் பிரதிநிதிகள் அடங்கிய தூதுக் குழுவினர் நேரில் சந்தித்தும் தமது கோரிக்கை வலியுறுத்தி பேச்சு நடத்தி வருகின்றனர்.

பாடசாலையின் மீள் ஆரம்பம் மற்றும் கட்டுமானம் தொடர்பாக வளலாய் அமெரிக்கன் மிஷன் பாடசாலையின் மீள் அபிவிருத்திச் சபை மற்றும் வளலாய் மீள் குடியேற்ற அபிவிருத்திச் சபையின் தலைவர் எஸ்.துரைரத்தினம் தகவல் தெரிவிக்கையில்;

"வலி.கிழக்கு பிரதேசத்தில் காலத்தால் மூத்த பாடசாலைகளில் ஒன்று வளலாய் அமெரிக்கன் மிஷன் பாடசாலை. இது இராணுவ நடவடிக்கையால் கட்டடங்கள் சேதமடைந்துள்ளன. அத்துடன் 1996 ஆம் ஆண்டு தற்காலிகமாக மூடப்பட்டது. வளலாய் மீள்குடியேற்றத்துடன் பாடசாலையை ஆரம்பிக்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டு வந்தது. இதனை ஏற்றுக்கொண்டு ஆரம்ப கட்டு மானத்துக்கு 60 லட்சம் ரூபா நிதியும் ஒதுக்கப்பட்டது. ஆனால் இன்று வரை செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவில்லை என்று தெரிவித்தார். (வ-11)

## 40 லீற்றர் கோடாவுடன் மட்டுவிலில் கைதான மூவருக்கும் மறியல்

தென்மராட்சி, மார்ச் 10

மட்டுவில் தெற்குப் பகுதியில் கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தும் 40 லீற்றர் கோடா கொண்டு சென்ற மூவரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்றில் உத்தரவிடப்பட்டது.

பொதுமக்கள் கொடுத்த தகவலையடுத்து கடந்த முதலாம் திகதி சனிக்கிழமை இரவு மட்டுவில் சந்திரபுரம் பகுதியில் பொலிஸார் மறைந்திருந்த வேளையில் சைக்கிளில் கொண்டு வரப்பட்ட கோடாவையும், அதனைக் கொண்டு வந்த மூவரையும் கைது செய்திருந்தனர். அவர்களை கடந்த செவ்வாய்க்கிழமை நீதிமன்றுக்கு வருமாறு கூறி விடுவித்தனர்.

செவ்வாய்க்கிழமை நீதிமன்றில் வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது மூவரும் சமுகமளிக்காததால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டது.

இதேவேளை இந்த மூவரும் தாம் தாக்கப்பட்டதாகக் கூறி யாழ்.போதனா வைத்திய சாலை விடுதியில் சிகிச்சை பெற்றனர் என்று கூறப்பட்டது. மருத்துவமனையிலிருந்து வெளியேறிய அவர்கள் கடந்த வெள்ளிக்கிழமை நீதிமன்றில் சரணடைந்தனர்.

அதை அடுத்து எதிர்வரும் 20 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்கு மாறு நீதிவான் உத்தரவிட்டார். (ஒ-9)

# இலங்கைத் தமிழர்களை ஏமாற்றிவிட்டது இந்தியா

## மூத்த வழக்கறிஞர் ராம் ஜெத்மலானி குற்றச்சாட்டு



மூத்த வழக்க றிஞர் ராம் ஜெத்மலானி உரையாற்றுகிறார் அருகில் வைகோ உட்பட விருந்தினர்கள் அமர்ந்திருக்கின்றனர்

சென்னை, மார்ச்.10

ராஜீவ்-ஜெயவர்த்தனா ஒப்பந்தம் மூலம் இலங்கைத் தமிழர்களை, இந்திய அரசு ஏமாற்றி விட்டதாக, உச்ச நீதிமன்றத்தின் மூத்த வழக்கறிஞர் ராம் ஜெத்மலானி குற்றஞ்சாட்டியுள்ளார்.

ராஜீவ் கொலை வழக்கு குற்றவாளிகள் முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகியோருக்காக வாதாடிய, ராம் ஜெத்மலானிக்கு ம.தி.மு.க. சட்டத்தரணி பேரவை சார்பில், சனிக்கிழமை பாராட்டு விழா நடைபெற்றது. விழாவுக்கு வந்த ராம் ஜெத்மலானிக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

இதன்போது தனது ஏற்புரையில் அவர் பேசியதாவது:

இலங்கைத் தமிழர்களுக்கு ராஜீவ்-ஜெயவர்த்தனா ஒப்பந்தம் மூலம் இந்திய அரசு துரோகம் செய்து விட்டது. இலங்கையில் போராடுவதற்கு, விடுதலைப் புலிகளுக்கு பயிற்சி கொடுத்ததே இந்திரா காந்தி தலைமையிலான இந்திய அரசுதான்.

ஆனால் தற்போது அவர்களின் வாழ்வை மோசமான நிலைக்குத் தள்ளியுள்ளது.

தூக்குத் தண்டனையை வேண்டாம் என்று நான் எதிர்ப்பு தெரிவித்து வருகிறேன். ஒருவருக்கான தூக்குத் தண்டனையை இரண்டு ஆண்டுகளுக்குள் நிறைவேற்றாவிட்டால், அதை ஆயுளாகக் குறைக்க, சட்டத்தில் இடமுள்ளது.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட மூன்று பேரை விடுவிக்க முதல்வர் ஜெயலலிதா முடிவெடுத்தது பாராட்டுக்குரியது"-என்றார்.

# ஐ.நா. பிரேரணை குறித்து அரசு மீது ஐ.தே.க. சாடல்

யாழ்ப்பாணம், மார்ச் 10

இலங்கையில் குற்றச் செயல்கள் இடம்பெறுகின்ற போதும் அவற்றுக்குத் தண்டனை விதிக்கப்படாத - இழுத்தடிப்புச் செய்யப்படுகின்ற நிலைமையே தொடர்கிறது. தவிர மனித உரிமைகளைப் பாதுகாப்பதிலிருந்தும் இந்த அரசு தவறி வருகிறது. இவ்வாறான கார ணங்களை சர்வதேச ரீதியாக இலங்கைக்குக் அவப் பெயர் ஏற்பட காரணமாகியுள்ளது என ஐக்கிய தேசியக் கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது.

இது தொடர்பில் அந்த கட்சி மேலும் தெரிவித்துள்ளதாவது.

இலங்கையில் குற்றச் செயல்களுக்குத் தண்டனை விதிக்கப்படாத தன்மை காணப்படு கிறது. அதுமட்டுமன்றி தற்போதைய அரசு மனித உரிமைகளைப் பாதுகாப்பதில் அக்கறை செலுத்துவதில்லை என சர்வதேச நாடுகள் கருதுவதற்கு காரணமாகியுள்ளது. அரசின் இவ்வாறன நடவடிக்கைகளே இலங்கை மீது சர்வதேச விசாரணைக்கான அழுத்தம் ஏற்படுவதற்கு காரணமாகியுள்ளது.

இலங்கை சர்வதேச ரீதியாக எதிர்நோக்கி வரும் அழுத்தங்களுக்கு முற்றுமுழுதான காரணமாக தற்போதைய ஆட்சியாளர்களின் குறைபாடுகளே உள்ளது. குறிப்பாக அரசின் சுமத்தப்பட்ட போர்க் குற்றங்கள் தொடர்பில் உரிய முறையில் பதிலளிக்கப்படாத காலத்தை இழுத்தடித்து வந்ததே இன்றைய நெருக்கடிக்கு காரணமாகியுள்ளது.

குடும்ப அதிகாரத்தை எவ்வாறு தக்க வைத்துக் கொள்வது என்பது குறித்து தற்போதைய ஆட்சியாளர்கள் கவனம் செலுத்தி வருகின்றனர். நாடு எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்தும் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்தும் அவர்கள் கவனம் செலுத்துவது இல்லை. ஜெனிவா மனித உரிமைகள் சபையின் 25 வது கூட்டத்தொடரை இலங்கை அரசு தமக்கான அரசியல் களமாகவே பார்க்கி றது. இது பேராபத்தையே விளைவிக்கும் - என்றுள்ளது.

(ஐ-4)

# இந்திய மீனவர்கள் நாடு திரும்பினர்

சென்னை, மார்ச் 10

இலங்கை நீதிமன்றத்தால் அண்மையில் விடுவிக்கப்பட்ட காரைக்கால், நாகப்பட்டினம் மீனவர்களின் 8 விசைப் படகுகள் காரைக்கால் துறைமுகம் கொண்டு செல்லப்பட்டுள்ளன.

காரைக்கால் மாவட்டம், கிளிஞ்சல்மேடு கிராமத்தைச் சேர்ந்த செல்லத்துரை, ஆனந்தவேல், அன்பழகன் உள்ளிட்ட 6 பேரும், கடந்த ஆண்டு ஓகஸ்ட் 16 ஆம் திகதி கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த போது, இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர். அவர்களின் 6 விசைப் படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டன.

இதேபோல், கடந்த ஆண்டு ஜூலையில் கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த நாகை நம்பியார் நகரைச் சேர்ந்த ஆறுமுகம், அக்கரைப்பேட்டை யைச் சேர்ந்த கந்தசாமி ஆகியோரும் இலங்கைக் கடற் படையினரால் கைது செய்யப்பட்டு, அவர்களின் 2 படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டன.

இந்த நிலையில் கடந்த மாதம் 23 ஆம் திகதி மீனவர்களின் 8 விசைப் படகுகளையும் விடுவித்து திருகோணமலை நீதிமன்றம் உத்தரவிட்டது.

மீனவர்களையும் அவர்களின் 8 விசைப் படகுகளையும் இலங்கைக் கடற்படையினர் சர்வதேச எல்லையில் இந்திய கடலோரக் காவல் படையினரிடம் வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒப்படைத்தனர்.

மீனவர்கள் அவர்களின் படகுகளுடன் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை காலை காரைக்கால் துறைமுகத்தைச் சென்றடைந்தனர்.


(வ)

# 117 மீனவர்களையும் விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்

## இந்தியப் பிரதமருக்கு தமிழக முதலமைச்சர் கோரிக்கை



ஜெயலலிதா



மன் மோகன் சிங்

சென்னை, மார்ச் 10

இலங்கை சிறையிலுள்ள 117 மீனவர்களை விடுவிக்குமாறு தமிழ முதலமைச்சர் மன் மோகன் சிங்குக்கு கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் மன் மோகன்சிங்குக்கு மீண்டும் எழுதியுள்ள கடிதத்தில் கூறி இருப்பதாவது:-

இலங்கை கடற்படையினரால் கடந்த 3ஆம் திகதி 32 தமிழக மீனவர்கள் சிறைப் பிடிக்கப்பட்டனர். 8 படகுகளையும் பறிமுதல் செய்து இருந்தனர். இது தொடர்பாக கடந்த 4ஆம் திகதி உங்களுக்கு கடிதம் எழுதினேன்.

தற்போது பாக்கு நீரிணைப் பகுதியில் மேலும் 24 தமிழக மீனவர்களை இலங்கை கடற்படையினர் சிறைப்பிடித்துள்ளனர். கடந்த 5 ஆம் திகதி மீன் பிடித்துக் கொண்டிருந்த தமிழக மீனவர்கள் 15 பேரை பிடித்துச் சென்றனர். 3 படகுகளையும் பறிமுதல் செய்தனர். அதே தினத்தில் 9 மீனவர்களையும் சிறைப் பிடித்தனர். 2 படகுகளை பறிமுதல் செய்தனர். அவர்கள் இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள்.

இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 24 தமிழக மீனவர்களும் மன்னார் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

இலங்கை கடற்படை தமிழக மீனவர்களுக்கு தொடர்ந்து தொல்லை கொடுத்து வருகிறது. ஏழை, அப்பாவி மீனவர்களின் வாழ்வாதாரத்துக்கு தேவையான மீன்பிடி பொருள்களை பிடுங்கிக் கொள்கிறார்கள். இலங்கை கடற்படை தொடர்ந்து இந்த செயல்களில் ஈடுபடுகிறது.

கடந்த ஒரு மாதத்துக்கு மேலாக 148 தமிழக மீனவர்கள் இலங்கைச் சிறையில் இருக்கிறார்கள். 5 மீனவர்கள் 2 ஆண்டுக்கு மேல் இலங்கை சிறையில் வாடுகிறார்கள் என்பதையும் உங்களுக்கு நினைவுபடுத்துகிறேன். 39 படகுகளும் மீட்கப்படாமல் இருக்கிறது.

உயர்நிலை தூதரக ரீதியில் கொண்டு சென்று தமிழக மீனவர் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தற்போது சிறை பிடிக்கப்பட்ட 24 மீனவர்கள் உள்பட தமிழக மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும் படகுகளையும் மீட்டுத் தர வேண்டும்.

கொழும்பில் எதிர்வரும் 13ஆம் திகதி நடைபெறும் பேச்சுக்கு முன்பு தமிழக மீனவர்கள் விடுவிக்கப்பட வேண்டும்-என்றுள்ளது. (வ)

## மரண அறிவித்தல்

### சிவசுப்பிரமணியம் கஜானன்

(உயர்தர மாணவன் கிளி/முருகானந்தா கல்லூரி)



பழையகமம் முரசுமோட்டை கிளிநொச்சியைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட சிவசுப்பிரமணியம் கஜானன் நேற்று (09.03.2014) அன்று அகால மரணமானார்.

இவர் சிவசுப்பிரமணியம் - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் கலைப்பிரியா (பிரான்ஸ்), சிந்துஜா (மேலதிக மாவட்டப் பதிவாளர் - (முல்லைத் தீவு), ஜெசிந்தா ஆகியோரின் அன்புச்சகோதரனும் ஆகர்ஷனா, அகரன், அமீஷா, அகிஷ் ஆகியோரின் பாசமிகு மாமனும் பிரபாகரன் (பிரான்ஸ்), சசிக்குமார் (முகாமைத்துவ உதவியாளர் தேசிய பயிலுனர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபை கிளி நொச்சி), கருணாமூர்த்தி (முரசுமோட்டை) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பழையகமம்,
முரசுமோட்டை.

தகவல்:
குடும்பத்தினர்.

# வடமராட்சியில் வன்புணர்வு சம்பவம்

## சூத்திரதாரிகள் இனங்காணப்பட்டதாக பொலிஸார் தகவல்

யாழ்ப்பாணம், மார்ச் 10

வடமராட்சி துன்னாலையில் வீதியோரம் இளைஞனும் யுவதியும் கதைத்துக் கொண்டிருந்த போது அவ்வழியே சென்ற மூன்று பேர் இளைஞனைத் தாக்கி அவன் முன்பாகவே யுவதியை வன்புணர்வு செய்ததாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் சந்தேக நபர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். எனினும் அவர் களைக் கைது செய்யவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர். இளைஞனும் யுவதியும் காதலர்கள் என்று தெரிவிக்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த யுவதியை வன்புணர்வுக்கு உட்படுத்தியதாகக் கூறப்படும் இடத்தில், சந்தேகநபர்களில் ஒருவரது பல ஆவணங்கள் அடங்கிய பேஸ் உட்பட பல ஆதாரங் கள் கிடைத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

வரணியைச் சேர்ந்த பதின்ம வயதுடைய பெண்ணும் திக்கத்தைச் சேர்ந்த இளைஞனும் ஆள் நடமாட்டம் அற்ற பகுதியில் கதைத்துக் கொண்டிருந்த நின்ற வேளை அவ் வழியாக வந்தவர்களே இந்த வெறிச் செயலை மேற் கொண்டுள்ளனர்.

சம்பவத்தில் பாதிக்கப்பட்ட யுவதியும் அடிகாயங்களுக்குள்ளான இளைஞனும் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

குறித்த யுவதி வரணியைச் சேர்ந்தவர். அவர் தையல் வகுப்பு ஒன்றுக்குச் சென்று வருபவர். அவரது காதலன் என்று கூறப்படுபவர் அல்வாயைச் சேர்ந்த ஓட்டோ சாரதியான இளைஞன். இருவரும் கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் துன்னாலை முல்லை வீதியில் ஓட்டோவை நிறுத்தி விட்டுக் கதைத்துக் கொண்டிருந்துள்ளனர்.

அவ்வழியே மோட்டார் சைக்கிள் ஒன்றில் சென்ற மூவர் இருவரையும் அண்மித்து இங்கு ஏன் நிற்கிறீர்கள் என்று கேட்டு குறித்த இளைஞனைத் தாக்கியதாகவும் பின்னர் இருவரையும் பொலிஸில் ஒப்படைக்க வேண்டும் என்று கூறி அழைத்துச் சென்று அவ்வாறு செய்யாது மறைவான இடத்தில் இளைஞனை கடுமையாகத் தாக்கிக் காயப்படுத்தியுள்ளனர். பின்னர் அந்த இளைஞன் முன்பாகவே யுவதியை மூவரும் வன்புணர்வுக்குட்படுத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த சம்பவம் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளப்படுகிறது என்று பொலிஸாரால் தெரிவிக்கப்படுகின்ற போதும் சந்தேக நபர்களைப் பொலிஸார் இதுவரை கைது செய்யவில்லை. மேலதிக விடயங்கள் விசாரணை மற்றும் வைத்தியசாலையில் பரிசோதனையின் பின்னரே தெரிய வரும்.

(ஐ-4)

## பன்றித்தலைச்சி பங்குனித் திங்கள் 17 இல் ஆரம்பம்

தென்மராட்சி, மார்ச் 10
பிரசித்தி பெற்ற மட்டுவில் வடக்கு பன்றித் தலைச்சி கண்ணகை அம்பாள் ஆலய பங்குனித் திங்கள் பொங்கல் உற்சவம் எதிர்வரும் 17, 24, 31, ஏப்ரல்7 ஆகிய திங்கட்கிழமைகளில் நடைபெறவுள்ளது.
பங்குனித் திங்கள் பொங்கல் உற்சவ வேளையில் சாவகச்சேரி பிரதேச சபையினர் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினர், தென்மராட்சி பிரதேச செயலகத்தினர், பொலிஸார் ஆகியோர் கடமையில் ஈடுபடவுள்ளனர்.
ஆலயத்துக்கான விசேட பஸ் சேவைகளை இ.போ.ச.வின் யாழ்ப்பாணம், பருத்தித்துறை சாலையினரும்,
தென்மராட்சி தனியார் சிற்றூர்தி சேவைகள் சங்கத்தினரும் மேற்கொள்ள வுள்ளனர். அடியார்கள் தங்க நகைகள் அணிந்து வருவதை தவிர்த்துக் கொள்ளுமாறு ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (ஒ-9)

## மருத்துவ முகாம் நடத்த விரும்புவோர் தொடர்பு கொள்ளலாம்

தென்மராட்சி முதியோர் பேரவையினர் பிரதேசத்தில் உள்ள 60 கிராம அலுவலர் பிரிவுகளிலும் இயங்கும் முதியோர் சங்கங்களின் ஊடாக இலவச மருத்துவ பரிசோதனை முகாம்களை நடத்தவுள்ளனர்.
தத்தமது பிரிவுகளில் மருத்துவ பரிசோதனை முகாம்களை நடத்த விரும்பும் முதியோர் சங்கங்கள் முதியோர் பேரவையுடன் தொடர்பு கொள்ளுமாறு பேரவைத் தலைவர் மருத்துவர் எஸ்.எஸ். அருளானந்தம் அறிவித்துள்ளார்.
ஏற்கெனவே மறவன்புலோ, சங்கத்தானை, கோயிற் குடியிருப்பு, வெள்ளாம்போக்கட்டி ஆகிய பிரிவுகளில் பேரவையினால் இலவச மருத்துவ பரிசோதனை முகாம்கள் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (வ-9)

## தீக்குச்சியைத் தட்டி விளையாடிய சிறுவனுக்கு எரிகாயம்

அளவெட்டி, மார்ச் 10
தீக்குச்சியைத் தட்டி விளையாடிய சிறுவன் எரிகாயங்களுக்குள்ளான நிலையில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். சுன்னாகம் சபாபதிப் பிள்ளை முகாம் பகுதியைச் சேர்ந்த கமலநாதன் தனுசன் (வயது-10) என்ற இந்தச் சிறுவன் தீக்குச்சியைத் தட்டி விளையாடிய போது அது எரிந்து அணிந்திருந்த 'ரீ-சேட்டில்' பற்றிக் கொண்டது. இதனால் நெஞ்சுப் பகுதி, எரிகாயங்களுக்கு இலக்கானது.
இதேவேளை வீட்டில் விளையாடிக் கொண்டிருந்த சிறுமி கால் சறுக்கியதால் கீழே விழுந்ததால் கை முறிந்த நிலையில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.
ஏழாலை கிழக்கைச் சேர்ந்த கிரோறாஜ் கர்னிகா (வயது -04) என்ற சிறுமியே பாதிக்கப்பட்டவர் ஆவார். (ஒ-36)

## புகைத்தல் விழிப்புணர்வுப் பேரணி சண்டிலிப்பாயில் இன்று ஆரம்பம்

வலி.தென்மேற்கு, மார்ச் 10
புகைத்தலால் ஏற்படும் தீமை குறித்து மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை வலி.தென்மேற்கு பிரதேச சபையுடன் இணைந்து இன்று முதல் காலை 9 மணியிலிருந்து மாலை 5 மணி வரை 5 தினங்கள் தொடர்ந்து பேரணியை நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
சுகாதார அமைச்சால் ஆரம்பிக்கப்பட்டுள்ள 101 நாள் வேலைத்திட்டத்தின் கீழ் சண்டிலிப்பாய் சுகாதார வைத் திய அதிகாரி பணிமனையினால் "புகை நமக்குப் பகை" என்னும் தொனிப் பொருளில் ஆரம்பிக்கப்படவுள்ள விழிப்புணர்வுப் பேரணியில் சுகாதார உத்தியோகத்தர்கள், தொண்டர்கள், பிரதேச சபை உத்தியோகத்தர்கள், மாணவர்கள் உட்படப் பொது மக்களும் கலந்து கொள்வார்கள். சண்டிலிப்பாய் பிரதேசம் ஐந்து வலயங்களாகப் பிரிக்கப்பட்டுத் தொடர்ந்து 5 தினங்கள் பேரணி இடம்பெறும்.
இன்று காலை 9 மணிக்கு நவாலி மகா வித்தியாலயத்திலிருந்தும் உயரப்புலம் குணபாலன் வித்தியாலயத்திலிருந்தும் இரு பிரிவுகளாக ஆரம்பமாகும் இந்தப் பேரணிகள் ஆனைக்கோட்டையிலுள்ள பிரதேச சபையின் உப அலுவலகத்தில் முடிவடையும்.
நாளை செவ்வாய்க்கிழமை மானிப்பாய் சென்ற். ஆன்ஸ் பாடசாலையில் ஆரம்பமாகும் பேரணி மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தில் முடிவடையும்.
நாளை மறுதினம் புதன் கிழமை தொட்டிலடித் தேவாலயத்திலிருந்து ஆரம்பமாகி சீரணி நாகம்மாள் ஆலயத்தில் முடிவடையும்.
எதிர்வரும் 13 ஆம் திகதி பிரான்பற்று கலைமகள் வித்தியாலயத்திலிருந்து ஆரம்பமாகும் பேரணி பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரியில் முடிவடையும்.
14 ஆம் திகதி வெள்ளிக் கிழமை இளவாலை சென். ஹென்றிஸ் பாடசாலையிலிருந்து ஆரம்பமாகும் பேரணி நுணசைச் சந்தியில் முடிவடையும். (வ-115)

# குடிதண்ணீருக்கு அலையும் ஊறணி கிராம மக்கள்

### வலி.கிழக்குப் பிரதேச சபை பாராமுகம்

அச்சுவேலி, மார்ச் 10
புத்தூர் கிழக்கு, ஊறணி கிராமத்துக்குக் குடிதண்ணீர் விநியோகம் இடம்பெறாததால், இந்தப்பகுதி மக்கள் குடிதண்ணீருக்காக இரண்டு கிலோமீற்றருக்கு மேல் அலைந்து திரிய வேண்டியுள்ளது. எமது குடிதண்ணீர் தேவையை நிறைவேற்றுவதற்கு வலி.கிழக்குப் பிரதேச சபை நிர்வாகம் நடவடிக்கை எடுக்கவில்லை என்று அந்தக் கிராம மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.
புத்தூர்- மட்டுவில் வீதியில் புத்தூர் கிழக்கு ஊறணி கிராமம் அமைந்துள்ளது. அங்கு 65 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் வசிக்கின்றன. அவர்கள் தினமும் காலையும் மாலையும் குடிதண்ணீருக்காக அலைந்து திரிகின்றனர். இந்த வகையில் இரண்டு கிலோ மீற்றருக்கு அப்பால் சென்றே குடிதண்ணீரைப் பெற வேண்டிய துர்ப்பாக்கிய நிலையில் இருப்பதாகக் கூறுகின்றனர்.
வலி.கிழக்குப் பிரதேச சபை குடிதண்ணீர் வசதி குறைவான இடங்களுக்கு பௌசர் மூலம் குடிதண்ணீரை விநியோகிக்கின்றபோதிலும் ஊறணி கிராமத்துக்கு நீர் வழங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவில்லை. அத்துடன் புத்தூர் நிலாவரை குழாய் நீர் விநியோகத் திட்டத்திலும் அந்தக் கிராமம் உள்ளடக்கப்படவில்லை.
குறித்த கிராமத்தின் குடிதண்ணீர் விநியோகத்தை கருத்தில் கொண்டு தொண்டு நிறுவனம் ஒன்று மூன்று தொட்டிகளை நிறுவிக் கொடுத்துள்ளது. ஆனால் அதனை நிரப்பி குடிதண்ணீர் விநியோகத்தை மேற்கொள்வதற்கும் ஏற்பாடுகள் செய்யப்படவில்லை.
ஊறணி கிராமம் மற்றும் அயல் பகுதியில் உள்ள கிணறுகள் எல்லாம் உவர் நீராக இருப்பதால் நீண்டகாலமாக குடிதண்ணீருக்காக இப்பகுதி மக்கள் அலைந்து வருவதாக விசனம் தெரிவிக்கப்படுகின்றது.
ஊறணி குடிதண்ணீர் விநியோகம் தொடர்பாக வலி.கிழக்குப் பிரதேச சபையின் செயலாளர் எஸ்.குமணனுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது:
ஊறணிக் கிராமத்துக்கு குடிதண்ணீர் வழங்க வேண்டும் என்பது தொடர்பாக ஆராயப்பட்டு வருகின்றது. குடிதண்ணீர் விநியோகம் நீர் வளம் குறைந்த இருபாலை கிழக்குப் பகுதிகளுக்கு பௌசர் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. குடிதண்ணீர் விநியோகிக்க வாகனச் சாரதி மற்றும் ஊழியர்கள் பற்றாக்குறையாக உள்ளனர் என்று தெரிவித்தார். (வ-11)

## தேசிய சுகாதார வாரம்

### இன்று தொடக்கம் 16 ஆம் திகதி வரை

யாழ்ப்பாணம், மார்ச் 10
சுகாதார அமைச்சினால் நாட்டில் உள்ள அனைத்து சுகாதார நிறுவனங்களில் இன்று 10 ஆம் திகதி தொடக்கம் 16 ஆம் திகதி வரை தேசிய சுகாதார வாரம் அனுஷ்டிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.
மார்ச் 10 ஆம் திகதி பொது அலுவலர் தொடர்பு மற்றும் துப்புரவு செய்யும் தினமாகவும், 11 ஆம் திகதி டெங்கு ஒழிப்பு தினமாகவும், மார்ச் 12 ஆம் திகதி விழிப்பூட்டல் தினமாகவும், மார்ச் 13 ஆம் திகதி சிறுநீரக புற்றுநோய் போன்ற தொற்றா நோய்களைத் தடுக்கும் தினமாகவும், மார்ச் 14 ஆம் திகதி பாடசாலை சிறுவர் தினமாகவும், மார்ச் 15 ஆம் திகதி போதைப் பொருள் ஒழிப்பு தினமாகவும், மார்ச் 16 ஆம் திகதி மதிப்பீடு செய்யுமாறு சமய ரீதியான நிகழ்ச்சித் தினமாகவும் அனுஷ்டிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.
தேசிய சுகாதார வாரம் தொடர்பான பதாகைகள் அரச சுகாதார நிறுவனங்களில் காட்சிப் படுத்தப்பட்டுள்ளன. (வ-9)

## தரம் குறையும் பனம் கள்

### குற்றஞ்சாட்டும் முதியோர்கள்



கோப்புப்படம்

வலி .வடக்கு, மார்ச் 10
யாழ் .மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் பனங் கள்ளின் தரம் குறைவடைந்து காணப்படுவதாக முதியோர்கள் குற்றஞ் சாட்டுகின்றனர்.
கடந்த காலங்களில் பனம் கள், முட்டிகள் கட்டி சேகரிக்கப்படுவதாகவும் அண்மைக் காலத்தில் முட்டிகளுக்கு பதிலாக பிளாஸ்ரிக் போத்தல்கள், கொள்கலன்கள் பயன்படுத்துவதால் இரசாயனத் தாக்கத்துக்கு உள்ளாகி கள்ளின் தரம் குறைவடைந்து காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
யாழ்ப்பாணத்தில் முன்னர் முட்டிகளில் கள் சேகரிக்கப்பட்டதுடன் சுரக்காய் குடுவைகளிலும கூட சேர்க்கப்பட்டு வந்துள்ளது.
அண்மைக் காலத்தில் இந்தப் பொருள்கள் நீண்ட கால பாவனைத்தன்மை அற்றமை மற்றும் பணச் செலவு என்பவற்றைக் கருத்தில் கொண்டு கள் உற்பத்தியாளர்கள் சுலபமாக பனை மரப் பாளைகளுக்கு பிளாஸ்ரிக் போத்தல்களைக் கட்டியும் மற்றும் சேகரிக்கப்படும் கள்ளை விற்பனை நிலையத்துக்குக் கொண்டு செல்வதற்கு பிளாஸ்ரிக் கொள்கலன்களையும் பயன்படுத்துவதால் கள்ளின் தரம் பாதிக்கப்படுவதுடன் பக்க விளைவுகளையும் கூட ஏற்படுத்தும் அபாயமும் காணப்படுவதாக கள் பிரியர்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (வ-86)



சேதமடைந்த நிலையில் காணப்படும் இராசாவின் தோட்ட வீதி

## இராசாவின் தோட்ட வீதி புனரமைக்கப்படுமா?

குருநகர், மார்ச் 10
யாழ்ப்பாணம் இராசாவின் தோட்ட வீதி விரைவில் புனரமைக்கப்படுமா என்று பிரதேச மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.
இந்த வீதியின் மத்தியில் காணப்படும் சேதங்கள் காரணமாக குறித்த வீதியூடாக பயணிப்போர் மிகுந்த சிரமத்தை எதிர்கொள்கின்றனர்.
இந்த வீதியைப் புனரமைப்புச் செய்யுமாறு பல தடவைகள் பொது மக்களால் கோரிக்கை விடுக்கப்பட்ட போதிலும், இதுவரை புனரமைக்கப்படவில்லை.
எனினும், கடந்த சில தினங்களாக குறித்த வீதியின் இரு மருங்கிலும் கற்கள் குவிக்கப்பட்டுக் காணப்படுகிறது.
எனினும் புனரமைப்புப் பணிகள் இதுவரை உரியவர் களால் ஆரம்பிக்கப்பட வில்லை. (வ-51)

## தாகசாந்தி, அன்னதானம் வழங்குவோர் பாவிக்கும் நீரின் தரத்தை பரிசோதிக்குக

### இந்து ஆலயங்களின் திருவிழாக்கள் ஆரம்பமாகவுள்ளதால்

தென்மராட்சி, மார்ச் 10
இந்து ஆலயங்களில் வருடாந்த திருவிழாக்கள் ஆரம்பமாகவுள்ளதால் தாகசாந்தி நிலையங்கள் அமைப்போர், அன்னதானம் வழங்குவோர் பாவிக்கவுள்ள கிணற்று நீரின் தரம் பற்றிய பரிசோதனையை அந்தந்தப் பிரிவு பொது சுகாதார பரிசோதகர் மூலம் மேற்கொண்ட பின்னர் பயன்படுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

> கிணற்று நீரின் தரம் பற்றிய பரிசோதனையை அந்தந்தப் பிரிவு பொது சுகாதார பரிசோதகர் மூலம் மேற்கொண்ட பின்னர் பயன்படுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

நீரால் நோய்கள் பரவும் அபாயம் காணப்படுவதால் தாகசாந்தி நிலையங்கள் மற்றும் அன்னதானம் போன்றவை மேற்கொள்வோர் பொது சுகாதார பரிசோதகர் மூலம் நீரின் தரம்பற்றிய பரிசோதனை களை மேற்கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.
அத்துடன் வாகனங்களில் நடமாடும் உணவுப் பொருள்கள் (குறிப்பாக ஐஸ்கிறீம், தேன் குழல்) விற்பனை செய்வோர் உற்பத்திப் பொருள் தயாரிக்கும் இடத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகளில் உரிய அனுமதிப் பத்திரம் பெறுவதுடன் எந்தப் பிரதேசத்தில் பொருள்கள் விற்பனை செய்யப்படுகிறதோ அந்த இடத்தில் உள்ள உள்ளூராட்சி சபையில் தற்காலிக அனுமதி பெறப்படல் வேண்டும். அத்துடன் இவ்வாறான நடமாடும் உணவுப் பொருள் விற்பனை வாகனங்களில் கடமையாற்றுவோர் அந்தந்தப் பிரிவு சுகாதார வைத்திய அதிகாரியிடம் பெறப்பட்ட மருத்துவச் சான்றிதழ் வைத்திருக்க வேண்டும்.
இவ்வாறான விதிமுறைகளை மீறிச் செயற்படுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று சுகாதாரப் பகுதியினர் அறிவித்துள்ளனர். (வ-9)



சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு இந்தியாவின் ஹைதராபாத் நகரில் உள்ள மகளிர் பாடசாலை ஒன்றில் நடைபெற்ற தற்பாதுகாப்புக் கலை தொடர்பான நிகழ்வில் ஒரு காட்சி. (ற)

## முஸ்லிம்களுக்கு எதிரானதல்ல பாரதிய ஜனதா

### நிதின் கட்காரி

புதுடில்லி, மார்ச் 10

பாரதிய ஜனதாக் கட்சி இஸ்லாமியர்களுக்கு எதிரான கட்சி அல்ல என்று தெரிவித்துள்ளார் அந்தக் கட்சியின் முன்னாள் தலைவர் நிதின் கட்காரி.

மகராஷ்ட்ரா மாநிலம் நாக்பூரில் நடைபெற்ற பாரதிய ஜனதா கட்சியின் சிறுபான்மையினர் பிரிவு தேர்தல் பேரணியில் பங்கேற்று உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்.

"மோடி இஸ்லாமியர்களுக்கும். தலித்துகளுக்கும் விரோதி என்று காங்கிரஸ் கட்சியினர் வேண்டுமென்றே இட்டுக்கட்டி பரப்புரை செய்து வருகின்றனர். மகராஷ்ட்ரா மாநிலத்தில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஏராளமான இஸ்லாமியர்கள் பாரதிய ஜனதா சார்பாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். பாரதிய ஜனதாக் கட்சி இஸ்லாமியர்களுக்கு எதிரானது அல்ல" என்று தெரிவித்துள்ளார். (ற)

## 'ஜெ'யுடன் மம்தா பானர்ஜி தொலைபேசியில் பேச்சு

சென்னை, மார்ச் 10

தமிழக முதல்வர் ஜெயலலிதா. மேற்கு வங்க முதல்வரும் திரிணமூல் காங்கிரஸ் கட்சித் தலைவருமான மம்தா பானர்ஜியுடன் தொலைபேசியுடன் தொடர்பு கொண்டு பேசியுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பின்னர் அ.தி.மு.க. பொதுச் செயலர் ஜெயலலிதா பிரதமர் பதவிக்கு வர விரும்பினால் அவருக்கு ஆதரவு தரத் தயார் என்று மம்தா பானர்ஜி தெரிவித்திருந்தார். இந்த நிலையிலேயே இருவரும் தொலைபேசியில் கலந்துரையாடியுள்ளனர் என்ற தகவல் வெளியாகியுள்ளது.

அவர்கள் இருவரும் நடத்திய ஆலோசனைகள் பற்றிய விவரங்கள் தெரியவரவில்லை. நடைபெற உள்ள தேர்தல் பற்றியும் தேர்தலுக்குப் பிந்தைய கூட்டணிக்கான வாய்ப்புகள் பற்றியும் இரு தலைவர்களும் பேசியதாக திரிணமூல் காங்கிரஸ் வட்டாரங்கள் தெரிவித் தன.

தமிழகத்தில் அ.தி.மு.கவுக்கும் இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கும் இடையேயான கூட்டணி பேச்சு முறிந்த மறுதினமே மம்தாவுடன் ஜெயலலிதா பேசி இருக்கிறார். மம்தா பானர்ஜியின் பிரதான எதிரிகளான இடதுசாரி கட்சிகள் இப்போது குறுக்கே இல்லை என்பதால் இரு தலைவர்களுக்கும் இடையே சுமுக நிலை ஓங்கி இருப்பதாக திரிணமூல் கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ற)

# தனித்துக் களமிறங்க காங்கிரஸ் தீர்மானம்

## தமிழகத்தில் கூட்டணிக்கு யாருமில்லை; டில்லியில் கட்சித் தலைமை ஆலோசனை

புதுடில்லி, மார்ச் 10

காங்கிரஸ் கட்சியின் கடைசி நம்பிக்கையாக இருந்த தி.மு.க. கூட்டணிக்கும் இனி வாய்ப்பில்லை என்ற நிலையை அடுத்து காங்கிரஸ் கட்சி தமிழகத்தில் தனித்துப் போட்டியிடுவதற்குத் தீர்மானித்துள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த இரண்டு நாடாளுமன்றத் தேர்தல்களிலும், காங்கிரஸ் கட்சியின் கூட்டணி அமைத்துப் போட்டியிட்ட தி.மு.க., இம்முறை 2 ஜி வழக்குத் தொடர்பான சிக்கலால் காங்கிரஸுடனான உறவைத் துண்டித்துக் கொண்டது.

எதிர்வரும் தேர்தலில் தமிழகத்தில் வேறு யாரும் காங்கிரஸுடன் கூட்டணி சேர முன்வராத நிலையில் எப்படியும் தி.மு.க. கூட்டணி அமைந்துவிடும் என்று காங்கிரஸ் தலைவர்கள் நம்பியிருந்தனர். ஆயினும் ஸ்டாலினும் கட்சியின் பெரும்பாலான நிர்வாகிகளும் காங்கிரஸ் வருகையை விரும்பவில்லை. இருப்பினும் தேசியக் கட்சியின் தயவு டெல்லி அரசியலுக்கு வேண்டுமென விரும்பியதால் மீண்டும் காங்கிரஸ் கூட்டணி குறித்த பேச்சுக்களை தொடங்கியது தி.மு.க. இந்தநிலையில், அ.தி.மு.க. கூட்டணியிலிருந்து கம்யூனிஸ்ட் கட்சிகள் வெளியேறியமை தி.மு.க. கூட்டணியிலும் திருப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. காங்கிரஸுக்குப் பதில் கம்யூனிஸ்ட்களைச் சேர்க்கலாம் என்று தி.மு.க. தலைமை பகிரங்க அழைப்பு விடுத்துள்ளது.

இதனால் அதிர்ச்சியடைந்த காங்கிரஸ் தலைமை. தமிழக காங்கிரஸ் தலைவர் ஞானதேசிகனை திடீரென டில்லிக்கு அழைத்து ஆலோசனை நடத்தி வருகிறது. கூட்டணிப் பேச்சை காங்கிரஸ் தொடங்கினாலும் தி.மு.க. தரப்பில் இடதுசாரிகளை சேர்ப்பதிலேயே அதிக அக்கறை காட்டுவதால் காங்கிரஸ் நிர்வாகிகள் குழப்பமடைந்துள்ளனர்.

கடந்த மூன்று நாள்களாக டெல்லியிலிருக்கும். ஞானதேசிகனிடம். காங்கிரஸ் மேலிட நிர்வாகிகள், தீவிர ஆலோசனை நடத்தி வருகின்றனர். தமிழகத்தில் காங்கிரஸ் வாக்கு வங்கி குறித்த பட்டியலை எடுத்து, அதன் அடிப்படையில் உள்ளூரில் பலம் வாய்ந்த காங்கிரஸாரை வேட்பாளர்களாக்கி, தனித்தே போட்டியிடலாம் என திட்டமிட்டு வருகின்றனர் என்று கூறப்படுகின்றது. (ற)

## தேர்தலை புறக்கணிக்கும் முஷாபர் நகர் மக்கள்

முஷாபர்நகர். மார்ச் 10

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலைத் தாம் புறக்கணிக்கப் போவதாக உத்தர பிரதேசத்தில் உள்ள முஷாபர் நகர் மக்கள் தெரிவித்துள்ளனர்.


உத்தர பிரதேச மாநிலத்தின் முஷாபர் நகரில் கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் இரு பிரிவினருக்கு இடையே மோதல் ஏற்பட்டது. அதில் 60 பேர் வரை உயிரிழந்தனர். அந்தப் பகுதி மக்கள் இதுவரை முகாம்களில் தங்கியுள்ளனர்.

இந்த நிலையில். "இங்கு நடந்த வன்முறைகளுக்கு பிறகு அரசியல் தலைவர்கள் வெறும் உறுதிமொழிகளை மட்டும் கூறிவிட்டு சென்றிருக்கின்றனர். அவர்கள் எந்தவித உதவியும் இதுவரை செய்யவில்லை. எனவே வாக்களிப்பதில்லை என்று முடிவெடுத்துள்ளோம்" என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (ற)

## மோடி குறித்து அவதூறு; கெஜ்ரிவால் மீது வழக்கு

அகமதாபாத். மார்ச் 10

பா.ஜ.க. பிரதமர் வேட்பாளர் நரேந்திர மோடி குறித்து அவதூறாகப் பேசினார் என்று தெரிவித்து அரவிந்த் கெஜ்ரிவால் மீது தேர்தல் ஆணையத்திடம் முறைப்பாடு அளிக்கப்பட்டுள்ளது.



அரவிந்த் கெஜ்ரிவால்

நாடாளுமன்ற தேர்தல் பரப்புரையில் ஈடுபட்டுள்ள ஆம் ஆத்மி கட்சி ஒருங்கிணைப்பாளர் அரவிந்த் கெஜ்ரிவால் 4 நாள்கள் பயணமாக குஜராத் மாநிலத்துக்கு சென்றுள்ளார்.

இந்நிலையில் குஜராத் மாநிலம் அகமதாபாத்தில் அவர் பேசும்போது. "நரேந்திர மோடி எதிர்க்கட்சியினரை விலை கொடுத்து வாங்கியும், அவர்களைக் கொலை செய்தும் கடந்த 3 சட்டமன்றத் தேர்தல்களில் வெற்றிபெற்றுள்ளார்" என்று தெரிவித்திருந்தார்.

அரவிந்த் கெஜ்ரிவாலின் இந்தப் பேச்சுக்கு பா.ஜ.க. கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

மேலும் அவர் மீது நடவடிக்கை எடுக்குமாறு கோரி தேர்தல் ஆணையத்திடம் முறைப்பாடு அளிக்கப்பட்டுள்ளது.

அந்த முறைப்பாட்டில் "அரவிந்த் கெஜ்ரிவால் தேர்தல் நடத்தை விதிகளை மீறிவிட்டார். பரப்புரைகளில் அநாகரிகமான வார்த்தைகளைப் பயன்படுத்திய கெஜ்ரிவால் மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தை மீறிவிட்டார். எனவே அவர் மீது தேர்தல் ஆணையம் நடவடிக்கை எடுக்க வேண்டும்" எனக் கூறப்பட்டுள்ளது. (ற)

## இடதுசாரிகள் இன்றி ஜெயிக்க முடியாது

### பிரகாஷ் காரத் கூறுகின்றார்

நாகப்பட்டினம், மார்ச் 10

தமிழகத்தில் இடதுசாரிகளை தவிர்த்துவிட்டு அ.தி.மு.கவால் நாடாளுமன்ற தேர்தலில் வெற்றி பெற முடியாது என்று தெரிவித்துள்ளார் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அகில இந்திய பொதுச் செயலாளர் பிரகாஷ் காரத்.

நாகை மாவட்டத்தில் நடைபெற்ற பொது நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

"காங்கிரஸ், பா.ஜ.க. கட்சிகள் ஆட்சிக்கு வராமல் தடுப்பதே இடதுசாரி கட்சிகளின் நோக்கமாக இருக்கிறது. தமிழகத்தில் இடதுசாரி கட்சிகளைத் தவிர்த்துவிட்டு அ.தி.மு.கவால் நாடாளுமன்ற தேர்தலில் வெற்றி பெற முடியாது. தமிழகத்தில் இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கட்சிகள் இணைந்து தேர்தலை சந்திக்கும்" என்று தெரிவித்துள்ளார்.

தி.மு.க. கூட்டணியில் இணைவது குறித்து அவர் கருத்து எதனையும் தெரிவிக்க மறுத்துவிட்டார். (ற)

## ஒரே கொள்கைகளை கொண்ட கட்சிகள் தமிழகத்தில் இல்லை

### பொன். ராதாகிருஷ்ணன்

சென்னை, மார்ச் 10

தமிழகத்தில் ஒரே கொள்கைகள் கொண்ட கட்சி எதுவுமில்லை என தெரிவித்துள்ளார் பா.ஜ.க. தமிழக தலைவர் பொன்.ராதாகிருஷ்ணன்.

நாடாளுமன்ற தேர்தலுக்கான பா.ஜ.க. கூட்டணியில் ஏற்கனவே ம.தி.மு.க. இணைந்துள்ளது. தே.மு.தி.க., பா.ம.க.வுடன் கூட்டணி பேச்சுக்கள் நடைபெற்று வருகின்றன. இந்த நிலையில் புதுடில்லி புறப்பட்டுச் சென்ற பொன். ராதாகிருஸ்ணன் விமான நிலையத்தில் வைத்துக் கருத் துத் தெரிவிக்கையில்.

"பா.ஜ.க. கூட்டணியில் உள்ள கட்சிகளுக்கான தொகுதி ஒதுக்கீடு குறித்து நாளை அல்லது நாளை மறுநாளில் முடிவு எடுக்கப்படும். நாளை முதல் கூட்டணி பேச்சுக்கள் துரிதப்படுத்தப்படும்" என்று தெரிவித்துள்ளார்.

பா.ஜ.க. கூட்டணியில் வெவ்வேறு கொள்கையுடைய தே.மு.தி.க.. பா.ம.க. இணைவது குறித்து அவர் கருத்து தெரிவிக்கையில்,

"தமிழகத்தில் ஒரே கொள்கைகளைக் கொண்ட கட்சி என்று எதுவுமில்லை" என்று கூறினார். (ற)



தேடுதல் நடவடிக்கை குறித்துத் திட்டமிடும் வியட்நாம் விமானப் படையினர்

## தேடுதல் தீவிரம்

236 பயணிகளுடன் வியட்நாம் கடலில் விழுந்து விபத்துக்குள்ளான மலேசிய விமானத்தை தேடும் பணி தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கப்பல்கள், விமானங்கள் மற்றும் ஹெலிகொப்டர்கள் இந்தத் தேடுதல் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. அதேவேளை, மலேசிய விமானம் தீவிரவாத தாக்குதலுக்கு ஆளாகி இருக்கலாம் என சந்தேகம் எழுந்துள்ளது. குறித்த விமானத்தில் பயணித்த இருவர் திருடப்பட்ட கடவுச்சீட்டுகளில் பயணித்துள்ளனர் என்று தகவல் வெளியாகியுள்ளது. மற்றும் இருவர் மீதும் சந்தேகம் ஏற்பட்டதை அடுத்து விமானத்தில் பயணித்தவர்கள் குறித்து துரித விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதேவேளை, குறித்த போயிங் 777 விமானம் கடந்த வாரமே பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டது என்றும் அதில் கோளாறுகள் ஏற்படுவதற்கான சந்தர்ப்பங்கள் மிகக் குறைவு என் றும் விமான நிலைய அதிகாரிகள் கூறியுள்ளனர். (ற)

## பழமையான கல்லறைகள் கண்டுபிடிப்பு

லண்டன், மார்ச் 10

பெரு நாட்டில் 3000 ஆண்டுகள் பழமை வாய்ந்த கல்லறைகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

அங்குள்ள குஸ்கோ நகரில் தொல்லியல் ஆய்வாளர்களால் கண்டுபிடிக்கப்பட்ட இந்தக் கல்லறைகளில் 5 உடல்கள் புதைக்கப்பட்டிருந்தன என்று தெரிவிக்கப்படுகின்றது. உடல்களோடு பீங்கான் துண்டுகளும், அணிகலன்களும் கண்டெடுக்கப்பட்டுள்ளன என்று ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளார். இவை அனைத்தும் கி.பி. ஆயிரமாவது ஆண்டுகளில் வாழ்ந்த மார்கவல்லி கலாச்சாரத்தை சேர்ந்த மக்கள் பயன்படுத்தியவை என்றும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (ற)

# கிரிமீயாவில் குவிந்தன 20,000 ரஷ்ய படைகள்

## உக்ரைனைச் சூழ்கின்றது போர் மேகம்

மொஸ்கோ, மார்ச் 10

உக்ரைனின் கிரீமியா சுயாட்சி பிரதேசத்தில் 20 ஆயிரத்துக்கும் அதிகமான ரஷ்ய இராணுவத்தினர் குவிக்கப்பட்டுள்ளனர் என்று தகவல் வெளியிட்டுள்ளது அமெரிக்க இராணுவத் தலைமையகமான பென்டகன்.

உக்ரைன் மீது இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டால் ரஷ்யா மீது பொருளாதாரத் தடைகள் விதிக்கப்படும் என்று அமெரிக்கா உட்பட மேற்குலகநாடுகள் எச்சரித்திருந்தன. எனினும் அது குறித்து சிறிதும் மிரளாத ரஷ்யா கிரிமீயாவைத்தன்னுடன் இணைக்கும் நடவடிக்கைகளை முழு வீச்சில் மேற்கொண்டு வருகின்றது.

கிரிமீயா சுயாட்சிப் பிரதேசத்தில் ரஷ்யாவைச் சேர்ந்தவர்களே அதிகம் காணப்படும் நிலையில் ரஷ்ய அரசின் இந்த நடவடிக்கைக்கு அவர்கள் ஆதரவு தெரிவித்து வருகின்றனர். அதேவேளை, கிரிமீயா பகுதியில் இருக்கும் செவாஸ்தோபோல் துறைமுக நகரிலும் ரஷ்யாவின் ஆதரவு ஓங்கி வருகிறது.

கிரிமீயா இணைப்பு குறித்த தீர்மானத்தை ரஷ்ய நாடாளுமன்றத்தில் கொண்டு வந்து ஒருமனதாக நிறைவேற்ற அந்நாட்டு இருசபை தலைவர்களும் முடிவு செய்திருக்கிறார்கள்.

ரஷ்யாவின் இந்த நடவடிக்கைகளை அடுத்து தமக்குத் தேவையான இராணுவ தொழில்நுட்ப உதவிகள் மற்றும் மனித நேய உதவிகளை வழங்குமாறு உக்ரைன் அரசு அமெரிக்க அரசிடம் கோரியுள்ளது.

கிரிமீயா பகுதிக்கான தொலைக்காட்சிச் சேவைகள் அனைத்தையும் உக்ரைன் அரசு நிறுத்தியுள்ள நிலையில் அந்தப் பகுதியில் பெரும் போர்ப் பதற்றம் ஏற்பட்டுள்ளது என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ற)

## மதுரோவுக்கு எதிராக நீடிக்கிறது போராட்டம்

கராக்கஸ், மார்ச் 10

வெனிசுவேலாவில் அந்நாட்டு ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோவுக்கு எதிரான போராட்டங்கள் நீடித்து வருகின்றன.

அந்நாட்டுத் தலைநகர் கராக்கஸில் பெரும் எண்ணிக்கையில் திரண்டுள்ள அரச எதிர்ப்பாளர்களைக் கலைப்பதற்குப் பொலிஸார் கண்ணீர் புகை குண்டு மற்றும் தண்ணீர் பீரங்கி கொண்டு தாக்கி வருகின்றனர். அதனால் இருதரப்பினருக்கும் இடையே மோதல்கள் ஏற்பட்டுள்ளன.


கடந்த ஒரு மாத காலமாக நடைபெற்று வரும் அரச எதிர்ப்பு போராட்டங்களில் 20 பேர் உயிரிழந்துள்ளனர். இது குறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோ, "இது போன்ற போராட்டங்களை அமெரிக்காவே தூண்டி விட்டுள்ளது" என்று குற்றஞ்சாட்டியுள்ளார். (ற)

## தீவுகள் பிரச்சினையில் பேச்சுக்கு இடமில்லை

### சீனா திட்டவட்டம்

பீஜிங், மார்ச் 10

கிழக்கு சீனா கடல்பகுதி தீவுகள் பிரச்சினையில் ஜப்பானுடன் பேச்சு கிடையாது. ஒரு அங்குலம் நிலத்தை கூட விட்டுக்கொடுக்க முடியாது என்று சீனா திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளது.



சீன வெளியுறவுத்துறை அமைச்சர் வாங் யி

கிழக்கு சீன கடல்பகுதியில் ஏராளமான தீவுகள் அமைந்துள்ளன. இது தொடர்பாக சீனாவுடன், ஜப்பான், வியட்நாம், பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளுக்கு பிரச்சினை நீடித்து வருகிறது. அதிலும் குறிப்பாக தியாயூ, சென்காகு தீவுகள் தொடர்பாக சீனாவும், ஜப்பானும் உரிமை கொண்டாடி வருகின்றன. இந்த சர்ச்சைக்குரிய தீவுகள் பகுதிக்கு கடற்படை கப்பல்கள், போர் விமாணங்களைஅனுப்பிகண்காணிக்கின்றன. அதனால் 2 நாடுகள் இடையே பதற்றம் நிலவுகிறது.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த சீன வெளியுறவுத்துறை அமைச்சர் வாங் யி,

"ஜப்பானை சேர்ந்த சிலர் கடந்த கால ஆக்கிரமிப்பு வரலாற்றை ஊதிப் பெரிதுபடுத்த முயற்சிக்கிறார்கள். வரலாறு, நிலப்பரப்பு விடயத்தில் ஜப்பானுடன் சமரசம் கிடையாது. ஆகவே பேச்சு நடத்த மாட்டோம். சீனாவின் ஒரு அங்குலம் நிலத்தை கூட விட்டுக் கொடுக்க மாட்டோம். அதே நேரத்தில் நெருங்கிய அயல் நாடுகளுடன் பேச்சு மூலம் பிரச்சினையை தீர்க்க தயாராக இருக்கிறோம்.

கொரியத் தீபகற்பத்தில் குழப்பம் அல்லது போர் ஏற்பட அனுமதிக்க மாட்டோம். அங்கு அணுசக்தி மயத்தை குறைப்பதன் மூலம் அமைதியை உருவாக்க முடியும்" என்று தெரிவித்துள்ளார்.

தீவுகள் பிரச்சினையில் ஜப்பானுக்கு ஆதரவாக அமெரிக்கா கருத்துத் தெரிவித்து வரும் நிலையில் சீனாவின் இந்த அறிவிப்பு இந்தப் பிரச்சினையை மேலும் அதிகரிக்கும் என்று கூறப்படுகின்றது. (ற)

## கனடா பிரதமரிடம் தோற்றார் ஒபாமா

நியூயோர்க், மார்ச் 10

கனடா பிரதமர் ஸ்டீபன் ஹார்ப்பரிடம் பந்தயம் கட்டி அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா தோற்றுப் போயுள்ளார்.

ரஷ்யாவில் கடந்த பெப்ரவரி மாதம் நடைபெற்ற சோச்சி குளிர்கால ஒலிம்பிக் போட்டியின் ஐஸ் ஹொக்கி போட்டியில் அமெரிக்கா மற்றும் கனடா அணிகள் மோதின.

அதில் அமெரிக்க அணிதான் வெற்றி பெறும் என ஜனாதி பதி ஒபாமா, கனடா பிரதமர் ஸ்டீபன் ஹார்ப்பரிடம் பந்தயம் கட்டினார். பந்தயத்தில் தோற்கும் பட்சத்தில் தங்களது நாட்டில் தயாராகும் உயர் ரக பீர் பாட்டில்களை வழங்க வேண்டும் என கூறப்பட்டது.

இந்த நிலையில் 1:0 என்ற கோல் கணக்கில், கனடா அமெரிக்காவை வீழ்த்தி வெற்றி பெற்றது. இது இவ்வாறிருக்க கனடா பிரதமர் வானொலி நிகழ்ச்சி ஒன்றில், தனக்கு இன்னும் வந்து சேர வேண்டிய பீர் பாட்டிகள் வரவில்லை என நகைச்சுவையாகக் கூறியிருந்தார்.

அதனையடுத்து வெள்ளை மாளிகையில் இருந்து 2 பெட்டி பீர் பார்சல்களை வொஷிங்டனில் உள்ள கனடா தூதரகத்துக்கு அனுப்பி வைத்தது டன், கனடா வீரர்களுக்கு தமது வாழ்த்துக்களையும் தெரிவித்துள்ளார் ஒபாமா.

இதேபோன்று கடந்த 4 ஆண்டுகளுக்கு முன்பு வன்கூவர் நகரில் நடந்த ஹொக்கிப் போட்டியின்போதும் கனடா அணியிடம் பந்தயம் கட்டி தோற்றுப் போன ஒபாமா பீர் பாட்டில்களை அனுப்பி வைத்திருந்தார். (ற)



ஜேமி எட்வோர்ட்ஸ்.

## அணு உலையை தயாரித்து அசத்திய இளம் விஞ்ஞானி

லண்டன், மார்ச் 10

பிரிட்டனைச் சேர்ந்த பாடசாலைச் சிறுவன் ஒருவன் அணு உலை ஒன்றைத் தயாரித்துச் சாதனை படைத்துள்ளான்.

பிரிட்டனின் லங்காஷ்யர் என்ற பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில் கல்வி கற்று வருகின்றான் 13 வயதுடைய ஜேமி எட்வோர்ட்ஸ்.

இவன் கடந்தாண்டு ஒக்ரோபர் மாதம் ஆசிரியர்கள் மற்றும் நண்பர்களின் ஒத்துழைப்பால் பாடசாலையின் பரிசோதனை கூடத்தில் அணு உலை தயாரிப்பதற்கான முயற்சியில் இறங்கினான். அதற்காக மிக கடினமாக உழைத்த ஜேமி தற்போது அணு உலை மாதிரியைத் தயாரித்துச் சாதனை படைத்துள்ளான்.

இதுகுறித்து ஜேமி கூறுகையில்,

"நான் உருவாக்கியுள்ள அணு உலை மாதிரியை வைத்து, எதிர்காலத்தில் மின்சாரம் தயாரிக்க முடியும். கதிர்வீச்சு அபாயத்தை தடுப்பது குறித்து. பயிற்சி பெற்று வருகிறேன்" என்று தெரிவித்துள்ளான். (ற)

# கல்லுடைக்கும் சுரங்க தளத்தால் அபாய நிலையில் முத்துஐயன்கட்டுகுளம்

## வடக்கு விவசாய அமைச்சர் எச்சரிக்கை

முத்துஐயன்கட்டில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள கல்லுடைக்கும் சுரங்கத்தளத்தால், முல்லைத்தீவு மாவட்டத்தின் பிரசித்தி பெற்ற நீர்ப்பாசனக் குளமான முத்துஐயன்கட்டுக் குளத்துக்கு மிகப் பெரும் ஆபத்து ஏற்பட்டுள்ளது என்று வடக்கு மாகாண விவசாய, கமநல சேவைகள், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம் மற்றும் சுற்றாடல் அமைச்சர் பொ.ஐங்கரநேசன் எச்சரித்துள்ளார்.



பொ.ஐங்கரநேசன்

இது தொடர்பாக அவர் விடுத்திருக்கும் ஊடக அறிக்கையில்;

முத்துஐயன்கட்டில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற வயல் விழாவில் பங்கேற்பதற்காக நான் சென்றிருந்த போது அந்தப் பகுதியில் புதிதாகச் செயற்பட ஆரம்பித்திருக்கும் கல்லுடைக்கும் சுரங்கத்தளம் பற்றிச் சிலர் எனது கவனத்துக்குக் கொண்டு வந்திருந்தனர். அந்தப் பகுதிக்குச் சென்று பார்வையிட்ட நான் இது தொடர்பாக எனக்கு அறிக்கையிடுமாறு முல்லைத்தீவு மாவட்டப் பிரதி நீர்ப்பாசனப் பொறியியலாளர் ந.ஸ்ரீஸ்கந்தராஜாவிடம் கேட்டிருந்தேன்.

அவர் எனக்குச் சமர்ப்பித்திருக்கும் அறிக்கையில்;

தென் இலங்கையைச் சோந்த சிநோட்ரோ என்னும் நிறுவனத்தால் புதிதாக ஆரம்பிக்கப்பட்டிருக்கும் கல்லுடைக்கும் சுரங்கத்தளம் முத்துஐயன் கட்டுக் குளத்தின் குளக்கட்டு மட்டத்தில் இருந்து மூன்று மீற்றர் தூரத்திலும், குளத்தின் உயர்மட்டம் வெள்ளம் தூரத்தில் இருந்து 120 மீற்றர் தூரத்திலும் அமைந்துள்ளது.

இந்த அளவீடுகளின்படி சுரங்கத்தளத்தைத் தொடர்ந்து இயங்க அனுமதிப்பது முல்லைத்தீவு மாவட்டத்தின் பிரசித்தி பெற்ற நீர்ப்பாசனக் குளமான முத்துஐயன்கட்டுக் குளத்துக்கு எதிர்காலத்தில் மிகப் பெரும் ஆபத்தாக அமையும்.

புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தால் இந்தப் பகுதியில் 25 அடி ஆழம் வரை பாறைகளை உடைப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு அகழப்படின் குளத்தின் நீர் இந்தப் பகுதிக்குள் புகுந்துவிடும் ஆபத்து ஏற்படும். குளத்துக்கான நீர்வரத்துப் பாதையையும் இந்த நடவடிக்கை தடைசெய்வதாக அமைந்துவிடும். அத்துடன் கல்லுடைக்கும்போது பயன்படுத்தப்படும் வெடி மருந்தின் உரத்த அதிர்வால் சுற்றயலில் உள்ள பாறைகளில் வெடிப்பு ஏற்படும்.

முத்துஐயன்கட்டுக் குளத்தின் குளக்கட்டு மற்றும் கலிங்கு பாறைகளின்மேலேயே அமைக்கப்பட்டிருப்பதால், அதிர்வுகளால் இவற்றின் அத்தி பாரமே பாதிப்புக்கு உள்ளாகும். இவற்றின் பிரதிபலிப்பு முத்துஐயன் கட்டுக் குளம் உருவாக்கப்பட்டதன் நோக்கத்தையே சிதறடித்துவிடும் என்பதால் சுரங்க அகழ்வு வேலைகள் தொடர்வதை அனுமதிக்க முடியாது.

இதற்கு வழங்கப்பட்ட அனுமதியை உடனடியாக நிறுத்துமாறு புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப்பணியகத்துக்கும், முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் மற்றும் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் வட மாகாண பிரதிப் பணிப்பாளா ஆகியோருக்கும் தெரியப் படுத்தியிருக்கிறோம்.

முத்துஐயன்கட்டுக் குளத்துக்கு அருகாமையில் சுரங்கத்தை அமைப்பதற்கு அனுமதி வழங்கிய மத்திய அரசின் புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப்பணியகம் இந்தப் பிரதேசம் தொடர்பாக விரிவாகத் தெரிந்து வைத்திருக்கும் மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்திடம் எவ்வித கலந்தாலோசனையுமின்றித் தான்தோன்றித்தனமாக அனுமதி வழங்கியுள்ளது. இது கண்டனத்துக்குரியது.

வடக்கில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட மாகாணசபை உருவாக்கப்பட்டிருக்கும் நிலையில், மத்திய அரசு வடமாகாணத்தில் மேற்கொள்ளப்படும் திட்டங்கள் எதுவாக இருப்பினும் மாகாண நிர்வாகத்தின் அனுசரணையுடன் செயற்படுத்துவதே பொருத்தமாக அமையும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

## 'அன்புக்கரங்கள்' நூல் வெளியீடு

வவுனியா, மதியாமடு விவேகானந்தா வித்தியாலய தமிழ் மன்றத்தின் 'அன்புக்கரங்கள்' நூல் வெளியீட்டு விழா, நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 12.30 மணிக்கு அதிபர் கி.சிவசோதி தலைமையில் நடைபெறும்.

நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் க.பரந்தாமனும், விசேட விருந்தினராக பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி மாலதி முகுந்தனும் மற்றும் விருந்தினர்களாக வவுனியா வடக்கு கலாசார உத்தியோகத்தர் திருமதி விஜிதா செல்வகுமார், மருதோடை அ.த.க. அதிபர் க.நாகராசா, நொச்சிக்குளம் முத்துசாமி வித்தியாலய அதிபர் ந.நவரட்ணம் ஆகியோர் கலந்து கொள்வர்.

வெளியீட்டுரையை ஆசிரிய ஆலோசகர் திருமதி முருகேசம்பிள்ளையும், ஏற்புரையை நூலாசிரியர் க.ஸ்ரீநந்தகோபனும் நிகழ்த்துவர். (ஓ)


### கரைச்சி புளியம்பொக்கனை நாகதம்பிரான் ஆலய ஆண்டுற்சவ பொங்கல் விழாவை முன்னிட்டு நேர்த்திப்பொருள்கள் சேகரிப்பதற்கான அறிவித்தல்

ஆலய பங்குனி உத்தரப்பொங்கல்
எதிர்வரும் 17.03.2014 திங்கட்கிழமை
சிறப்பாக நடைபெறவுள்ளது.

இதனை முன்னிட்டு வழமையாக வரும் நேர்த்திப் பொருள்கள் சேகரிக்கும் தொண்டர்கள், ஆலய சின்னம் பொறிக்கப்பட்ட கொடிகளுடன் பின்வரும் இடங்களுக்கு - வட்டக்கச்சி, இராமநாதபுரம், கல்மடுநகர், விசுவமடு, புன்னைநீராவி, பிரமந்தன்ஆறு, மயில்வாகனபுரம், உடையார்கட்டு, சுதந்திரபுரம் போன்ற பகுதிகளுக்கு நாளை (11.03.2014) செவ்வாய்க்கிழமை தொடக்கம் வருகை தரவுள்ளனர் என்பதனை அறியத்தருகின்றோம்.

புளியம்பொக்கனை.

ஆலய பரிபாலனசபை,
புளியம்பொக்கனை நாகதம்பிரான் ஆலயம்.

(43402)(3.6.45)



### மணமகன் தேவை

யாழ்.இந்து, 85 இல் பிறந்த, 5 இல் சூரி, செவ், அத்தம், கிரகபாவம் 14 ½, BSc I.T (MORATUWA) படித்த SENIOR SOFT WARE ENGINEER ஆக பணிபுரியும் மணமகளுக்கு மணமகன் தேவை.

தொடர்பு: 077 714 5980 (45621) (3.6.4)


## சமய சந்நிதிகளில்

நல்லூர், கல்வியங்காடு சிவஞானப்பிள்ளையார் ஆலய மஹோற்சவம் நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. எதிர்வரும் 19 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும். உற்சவ கிரியைகள் பிரதம குரு பொ.வரதராஜக் குருக்கள் தலைமையில் நடைபெறும்.

உற்சவ தினங்களில் பகல் அன்னதானம் வழங்கப்படும் என்று ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர். (ஓ)

♦♦♦

கொழும்புத்துறைவளன்புரம் புனித சூசையப்பர் ஆலய வருடாந்த திருவிழா இன்று மாலை 5.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தினமும் நவநாள் வழிபாடுகள் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 18 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 5.30 மணிக்கு நற்கருணைப் பெருவிழாவும் மறுநாள் புதன்கிழமை காலை 6 மணிக்கு திருவிழாத் திருப்பலியும் திருச்சொரூப பவனியும் இடம்பெறும். (ஓ-135)




### மட்டுவில் பன்றித்தலைச்சிக் கண்ணகை அம்மன் தேவஸ்தானம்

### விஜய வருஷ பங்குனித் திங்கள் உற்சவம்

**17.03.2014, 24.03.2014, 31.03.2014, 07.04.2014**

ஆகிய தினங்களில் இடம்பெறவுள்ளன. பங்குனித் திங்கள் உற்சவம் அதிகாலை 5.30 மணிக்கு உஷத் காலப் பூசையுடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பூசைகள், அபிஷேகம், உற்சவங்கள் இடம்பெறும்.

**உற்சவ கால கடைகள் பற்றிய அறிவித்தல்:**

15.03.2014 சனிக்கிழமை மு.ப 10.00 மணிக்கு கடைகள் ஏலத்தில் வழங்கப்படும். கடைகள் ஏலத்தில் எடுப்பவர்கள் முழுப்பணத்தையும் செலுத்தி பற்றுச்சீட்டைப் பெற்றுக் கொள்ளவும்.

**முக்கிய அறிவித்தல்:**

அம்பாள் ஆலயத்தின் திருப்பணிகளுக்காகவோ, உற்சவங்களுக்காகவோ, அன்னதானத்திற்காகவோ நிதி, பொருள் சேகரிப்பதற்கு எவருக்கும் அனுமதி வழங்கப்படவில்லை. எனவே அடியார்கள் ஆலய அலுவலகத்தில் மட்டும் கையளித்து பற்றுச்சீட்டினைப் பெற்றுக்கொள்ளவும்.

ஆலய இணையத்தள முகவரி: www.madduvilpanriththalaichchiamman.com

மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி.

சிவ.பஞ்சாட்சரம்
தர்மகர்த்தா

(29781)(7.6.3)



### கிருஷ்ணா அடகு சேவை

பதிவு இல : J/DS/BR/472

மேற்குறிப்பிட்ட எமது ஸ்தாபனத்தில் 2013ஆம் ஆண்டு 28.02.2013 இற்கு முன்னர் வைத்த அடகு நகைகள் யாவற்றையும் 2014ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15ஆம் திகதி (15.04.2014) இற்கு முன்பு மீட்கவும். மீட்க முடியாவிட்டால் ஒரு பகுதி பணத்தைக் கட்டிப் புதுப்பித்துக் கொள்ளவும்.

புதுப்பிக்கத் தவறின் 15.04.2014ஆம் திகதி விற்கப்படும் என்பதனை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

உரிமையாளர்
A.S.Surendran

இல.370, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.
021 490 0311

இல.9, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 5046

(சி/12631)(7.6.3)



### கோலாகலமான திறப்பு விழா

RAN LANKA

யாழ் நகரில் புதியதோர் உதயம்...

## நியூ ரண் லங்கா

22 கரட் தங்க ஆபரண விநியோகத்தர்கள்



**இன்று (10.03.2014) திங்கட்கிழமை வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்படுகிறது என்பதனை அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கின்றோம்.**

உங்கள் விருப்பத்திற்கேற்ப புதிய வடிவங்களில் தரமான முறையில் செய்து தரப்படும்.

இல.95, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 3015

(45622)(7.6.3)



### விவேகானந்தர் பற்றிய விவரணச்சித்திரம்

வவுனியா தமிழ் மகாவித்தியாலயத்தில்




இன்று (10.03.2014) திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு

G.C.E. A/L

மாணவர்களுக்கு விவேகானந்தரைப் பற்றி விவேகானந்தர் என்னும் விவரணச்சித்திரம் அதிபர் எஸ். பத்மநாதன் தலைமையில் காண்பிக்கப்படவுள்ளது.

நிகழ்வு ஒழுங்கு:
ஸ்ரீ ராமகிருஸ்ணா சாரதா சேவாச்சிரமம் பருத்தித்துறை.

(சி.12635)(45.6)

# 'விடிவெள்ளி' முன்பள்ளி ஆனந்தபுரத்தில் திறப்பு




திறந்து வைக்கப்பட்ட முன்பள்ளியின் தோற்றம்

முல்லைத்தீவு, மார்ச் 10

யாழ்.நகர் மைய றோட்டறக்ட் கழகம் ஆனந்தபுரம் மகளிர் அபிவிருத்திச் சங்கத்துடன் இணைந்து முல்லைத்தீவு, ஆனந்தபுரம் பிரதேசத்தில் முன்பள்ளி மாணவர்களுக்காக அமைத்த 'விடிவெள்ளி' முன்பள்ளி கட்டடத்தின் திறப்பு விழா வியாழக்கிழமை நடைபெற்றது.

குறித்த கட்டடம் அமைப்பதற்கான நிதி உதவியை ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த க.விக்கினேஸ்வரன், சண்முகநாதன், ஆனந்தபுரம் மாதர் அபிவிருத்தி சங்கம் மற்றும் கிராம மக்கள் வழங்கியிருந்தனர்.

ஆஸ்திரேலியாவில் இருந்து இங்கு வருகை தந்திருந்த நிதி உதவியளித்தோரில் ஒருவரான க.விக்னேஸ்வரன் கட்டடத்தை திறந்து வைத்ததுடன் குறித்த முன்பள்ளிக்கான தளபாடம் மற்றும் கற்றல் உபகரணங்கள் என்பனவும் இந்த நிகழ்வில் அன்பளிப்பு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (வ-10)

## வீதிகள் புனரமைப்பு



கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபைக்குட்பட்ட வீதிகளைத் தற்காலிகமாகப் புனரமைக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன. கரைச்சி பிரதேச சபையின் பொது நிதியின் மூலமாகவும் பிரதேச சபை உறுப்பினர்களுக்கு வரவு- செலவுத் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்படும் நிதியின் கீழும் இந்த வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. உதயநகர் மேற்கிலுள்ள வீதி கரைச்சிப் பிரதேச சபையின் தலைவரின் வழிகாட்டலின் கீழ் உப தவிசாளர் வ.நகுலனின் மேற்பார்வையில் நடைபெற்று வருகின்றது. விவேகானந்த நகரிலுள்ள ரயில் பாதைக்கு அண்டிய ஒன்றரை கிலோ மீற்றர் நீளமான வீதி உப தவிசாளரின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் புனரமைக்கப்பட்டு வருகின்றது. (க-18)

## யானைகளால் தொல்லை

துணுக்காய், மார்ச் 10

துணுக்காயிலுள்ள புத்து வெட்டுவான் கிராமத்தில் யானைகளின் தொல்லை அதிகரித்துக் காணப்படுகின்றது.

கடந்த ஐந்தாம் திகதி இரவு புத்துவெட்டுவான் காளிகோயிலடியில் இ.இராமநாதன் என்பவரது வீட்டுக்குச் சென்ற யானையொன்று முற்றத்தில் வைக்கப்பட்டிருந்த கதிரைகளை உடைத்ததுடன் நெல் மூடை ஒன்றினையும் உணவாகக் கொண்டது மேலும் அங்கு நின்ற வாழை மரங்களையும் முறித்து நாசம் செய்தது.

பழைய முறிகண்டி ஐயன் கன்குளம், புத்து வெட்டுவான் ஆகிய கிராமங்களில் யானை உட்பட காட்டுவிலங்குகளின் தொல்லை அதிகளவில் காணப்படுகின்றது. (க-18)

## அதிகரித்த கரும்பு அறுவடை

### உவர்த்தன்மை உள்ள பகுதிகளில்

கிளிநொச்சி, மார்ச் 10

கிளிநொச்சியின் அக்கராயன் பிரதேசத்தில் உவர்த்தன்மை காணப்படும் பகுதியிலும் கரும்புச் செய்கை நல்ல விளைச்சலைத் தந்துள்ளதாக கரும்புச் செய்கையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை ஆனைவிழுந்தான் கிராமத்தில் கரும்புச் செய்கையாளர் சங்கத்தின் ஒன்றுகூடல் நிகழ்வு கடந்த 6 ஆம் திகதி முற்பகல் 11 மணிக்கு அங்குள்ள பொது மண்டபத்தில் இடம்பெற்றுள்ளது.

சங்கத் தலைவர் இ.சுதாகரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கிளிநொச்சி அரச செயலகத்தின் உதவித் திட்டமிடல்பணிப்பாளர் அ.கேதீஸ்வரன், கரைச்சி பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் ச.பி.அமல்ராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இங்கு கரும்பு அறுவடையை மேற்கொண்ட 20 பேருக்கு நிதி வழங்கப்பட்டதுடன் தற்போது கரும்புச் செய்கையில் ஈடுபட்டுவரும் 18 பேருக்கு ஊக்கு விப்பு நிதிகள் வழங்கப்பட்டன. (க-18)

## அக்கராயன் ஆரம்ப வித்தியாலயத்துக்கு சகல வளங்களும் கிடைக்கும்

### உறுதியளித்தார் உதவிக் கல்விப் பணிப்பாளர்

கிளிநொச்சி, மார்ச் 10

அக்கராயன் ஆரம்ப வித்தியாலயம் 2016 ஆம் ஆண்டில் சகல வளங்களையும் கொண்ட பாடசாலையாகத் திகழப் போகின்றது. இவ்வாறு தெரிவித்தார் கிளிநொச்சி கல்வி வலயத்தின் ஆரம்பக்கல்விக்கான உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.கணேசலிங்கம்.

கடந்த 6 ஆம் திகதி இடம்பெற்ற அக்கராயன் ஆரம்ப வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்:


இன்றைய போட்டிகளின் போது மாணவர்கள் புதிய விளையாட்டு நிகழ்வுகளில் ஈடுபடாமையை அவதானிக்க முடிந்தது. எனவே புதிய போட்டிகளை மாணவர்களுக்கு ஆசிரியர்கள் பயிற்றுவிக்க வேண்டும். ஆசிரியர்களுக்கு நாமும் சிறந்த பயிற்சிகளை வழங்கவுள்ளோம்.

கிளிநொச்சியில் அபிவிருத்தி செய்யப்படவுள்ள 39 ஆரம்ப பாடசாலைகளில் அக்கராயன் ஆரம்ப வித்தியாலயமும் ஒன்றாகும் என்று தெரிவித்தார். (க-18)



# வடமராட்சி வடக்கு பிரதேச மட்ட கலை இலக்கியப் போட்டிகள்

பருத்தித்துறை, மார்ச் 10
கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் தேசிய கலை இலக்கியப் போட்டிகள் வடமராட்சி வடக்கு பிரதேச மட்டத்தில் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிகளாக வும் திறந்த போட்டிகளாகவும் நடைபெற வுள்ளன.
மட்டுப்படுத்தப்பட்ட போட்டிகளாக கட்டுரைப் போட்டி (கனிஷ்ட, சிரேஷ்ட பிரிவு), கவிதைப் போட்டி (கனிஷ்ட, சிரேஷ்ட பிரிவு), கவிதைப் பாடல் (கனிஷ்ட, சிரேஷ்ட, பாலர் பிரிவு) கையெழுத்துப் போட்டி (பாலர் பிரிவு), பாடல் நயத்தல் போட்டி (சிரேஷ்ட பிரிவு) என்பன வும் நடைபெறவுள்ளன. இந்தப் போட்டிகள் யாவும் பாடசாலை மாணவர்களுக்கு மட் டுமே உரியது.
19 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான திறந்த போட்டியில் தனி நபர்கள் எவரும் பங்குபற்றலாம். இந்தப் போட்டிகளில் பாடல் ஆக்கம் மற்றும் நாட்டார் கலை கற்றல் போட்டி, இலக்கிய விவரணப் போட்டி, சிறுகதைப் போட்டி, கவிதைப் போட்டி, சிறுவர் கதை ஆக்கப் போட்டி என்பனவும் நடைபெறவுள்ளன.
இந்தப் போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் போட்டியாளர்கள் விண்ணப்பப் படிவத் தையும் மேலதிக விவரங்களையும் பருத்தித்துறை பிரதேச செயலக கலாசாரப் பிரிவில் பெற்று எதிர்வரும் ஏப்ரல் 15 ஆம் திகதிக்கு முன்பாக பருத்தித்துறைப் பிரதேச செயலகத்துக்கு அனுப்பி வைக்க வேண்டும் என்று கேட்கப்பட்டுள்ளது. (ஒ)




தீபம் நிறுவனம் கல்விக்கான உதவியாக ஐந்து பாடசா லைகளைச் சேர்ந்த 15 மாணவர்களுக்கு ரூபா 1000 நிதி உதவியாக நேற்றுமுன்தினம் சனிக்கிழமை திருநெல் வேலியில் உள்ள அதன் அலுவலகத்தில் வைத்து வழங் கியது. பட்டயக் கணக்காளர் ம. இராசநாயகம் தலைமையில் நடை பெற்ற நிகழ்வில் தெல்லிப்பழை பிரதேச செயலர் எஸ். ஸ்ரீமோகனன் உதவித் தொகையை வழங்கினார். (வ-7)

## உடையில் மறைந்திருந்த பாம்பு தீண்டியது

தென்மராட்சி, மார்ச் 10
வீட்டினுள் வைக்கப்பட்டிருந்த உடுப்புகளைஎடுத்தவர் அதற்குள் மறைந்திருந்த பாம்பினால் கடியுண்டார்.
இந்தச் சம்பவம் சாவகச்சேரி தனங்களப்பு பகுதியில் இடம் பெற்றது.
இதே இடத்தைச் சேர்ந்த ரி.ஜெனிஸ்குமார் (வயது-31) என்பவரே பாம்பினால் கடி யுண்ட நிலையில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஒ-9)

## மரண அறிவித்தல்

### கந்தையா இராசரத்தினம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்)



புத்தூரைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா இராசரத்தினம் 07.03.2014 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான நல்லசேகரம் பிள்ளை - அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற புவனேஸ்வரியின் அன்புக்கணவரும் குகப்பிரியை, நிமலவேணி (மேல் நீதிமன்றம், யாழ்ப்பாணம்), குகநேசன் (கனடா), பத்மாசனி, மோகனா (கனடா), பேரின்பநேசன் ( கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் நித்தியானந்தன், ஜெயவதனா (கனடா), தேவேந்திரன் (சிவா - மக்கள் வங்கி சாவகச்சேரி), சக்திவேல் (கனடா), விநோதினி (கனடா) ஆகியோரின் அன்புமாமனும் துஷ்யந்தன் (பிரான்ஸ்), குகன், புவிநாத், மகிழினி, துவாரகேசன், மதுர்சிகா, சஜீத்தன் (கனடா), நரேஸ் (கனடா), நிசாந் (கனடா), தனுஷ் (கனடா), தட்சியா (கனடா) ஆகியோரின் பேரனும் காலஞ்சென்றவர்களான பெரியதம்பி, பாக்கியம், திருநாவுக்கரசு ஆகியோரின அன்புச்சகோதரரும் காலஞ்சென்றவர்களான சச்சிதானந்தம், ஜெகதீசன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.03.2014) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, மு.ப.11 மணியளவில் தகனக்கிரியைக்காக பூதவுடல் புத்தூர் கிழக்கு அந்திரானை இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்.

புத்தூர் கிழக்கு, புத்தூர். (45645)(5.6.3)

## நோயாளர் நலன் கருதி புதிய மண்டபம்

தென்மராட்சி, மார்ச் 10
சாவகச்சேரி பிரதேச சபையின் நாவற்குழி உப அலுவலகத்தில் நோயாளர்களுக்கு சிகிச்சை அளிக்க வசதியாக புதிய மண்டபம் அமைக்கும்பணி இடம் பெறுகிறது.
அந்த மண்டபம் தச்சன்தோப்பு பகுதியைச் சேர்ந்த அமரர்கள் கந்தையா கனகம்மா நிதியத்தால் அவர்களது ஞாபகார்த்த நினைவு மண்டபமாக சுமார் 13 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டு வருவதாக அந்த நிதியத்தின் காப்பாளர் க.மயில்வாகனம் தெரிவித்தார்.
நாவற்குழி உப அலுவலகத்தில் கர்ப்பிணிகள் மற்றும் குழந்தைகளுக்கு சிகிச்சை அளிக்க வசதியாக சிறிய மண்டபம் ஒன்று காணப்பட்டது.
அது சேதமடைந்துள்ளதால் அவதானித்து இந்த இட்த்தில் புதிய மண்டபம் அமைக்க திட்டமிடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-131)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
**கந்தையா இரத்தினசிங்கம்**



தோற்றம் 01'04'1943 மறைவு 18.02.2013

அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் மதிய போசன நிகழ்வும் இன்று (10.03.2014) திங்கட்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற உள்ளதால்
உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

32/1, குமாரசாமி வீதி, கந்தர்மடம். குடும்பத்தினர்.
(45618)(3.6.4)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர் **இராசம்மா தம்பிஐயா**

கடந்த 08.02:2014 இறைவனடி சேர்ந்த எமது குடும்ப விளக்கின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (10.03.2014) திங்கட்கிழமை மு.ப.11மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும்.
அந்நிகழ்வில் பங்குகொண்டு அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தயையிலும் அதனைத்தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஞானவைரவர் வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.
குடும்பத்தினர்
த.கணேஷப்பிள்ளை.
(45475)(12.3.6)

## 31 ஆம் நாள் நினைவலைகள்

மலர்வு 09 ☆ 06 ★ 1932

உதிர்வு 09 ☆ 02 ★ 2014




### அமரர் கோபாலபிள்ளை சரஸ்வதிப்பிள்ளை

நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து எத்தனை நாள்கள் சென்றாலும் உங்கள் நினைவலைகள் எம் மனதை விட்டு நீங்காது.
09.02.2014 அன்று இறைவனடி சேர்ந்த எங்கள் குடும்பத்தலைவி அமரர் கோபாலபிள்ளை சரஸ்வதிப்பிள்ளை அவர்களின் மரணச்சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும் இரங்கற் செய்தியினை அனுப்பி அனுதாபம் தெரிவித்தோருக்கும் பல்வேறு வகையிலும் எமக்கு ஒத்துழைப்பும் உதவியும் வழங்கிய உறவினர்கள், நண்பர்கள், அனுதாபிகள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
அன்னாரின் அந்தியேட்டிக்கிரியைகள் 09.03.2014 ஞாயிற்றுக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றன. வீட்டுக்கிருத்தியம் நாளை (11.03.2014) செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். தொடர்ந்து இடம்பெறும் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் தங்களைக் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*உங்களை என்றும் அன்புடன் நினைவு கூரும்.*
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

வெள்ளாம்போக்கட்டி, கொடிகாமம். (45604)(3.6.4)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அனலைதீவைப் பிறப்பிடமாகவும் வேலணை மேற்கை வதிவிடமாகவும் கொண்ட
அமரர்
**சின்னத்தம்பி சபாரட்ணம்**

மலர்வு 10.02.1942 உதிர்வு 22.02.2013

திதி : 13.03.2014

ஆண்டொன்று ஆனாலும்
ஆறாது எம் கண்ணீர்
ஆறாத் துயரில் விடுபட முடியாது
தவிக்கின்றோம்.

13.03.2014 வியாழக்கிழமை நடைபெறும் ஆண்டு திவசப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ச.பிறேமாவதி (மனைவி).
பிள்ளைகள்
அருட்குமரன் குடும்பம், உமாதேவி குடும்பம், அரிகரன் குடும்பம், சிறிதேவி குடும்பம்

8ஆம் வட்டாரம், வேலணை மேற்கு, வேலணை.
(15183)(7.6.3)

# இயக்கச்சியில் 36 ஏக்கர் தனியார் காணியை அரச அதிகாரியே ராணுவத்துக்கு தாரைவார்ப்பு

## வடமாகாண சபை உறுப்பினர் அரியரத்தினம் தெரிவிப்பு

கிளிநொச்சி, மார்ச் 10

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவில் உள்ள இயக்கச்சி கிராமத்தில் தனியாருக்கு சொந்தமான 36 ஏக்கர் காணியை முன்னர் பிரதேச செயலராக இருந்த ஒருவர் இராணுவத்துக்கு வழங்கி விட்டு சென்றுள்ளார். இதன் காரணமாகவே இராணுவத்தினர் அந்தக் காணியை கையகப்படுத்தி வைத்துள்ளனர்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் வட மாகாண சபை உறுப்பினர் ப. அரியரத்தினம்.


கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையில் நடைபெற்ற உள்ளூராட்சிவார பரிசளிப்பு நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற போது அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

இயக்கச்சி பாடசாலைக்கு எதிரே தனியாருக்குச் சொந்தமான 36 ஏக்கர் காணியை இராணுவத்தினர் தம் வசப்படுத்தி வைத்துள்ளனர். மீள் குடியேற்றம்செய்யப்பட்டுகாணி உரித்துடையவர்கள், தமது காணியை விடுவிக்குமாறு இராணுவத்தினரிடம்கோரிக்கை விடுத்து போதும் அவர்கள் விடுவிக்காததால் அந்த மக்கள் வேறு இடங்களில் தங்கியுள்ளனர்.

இந்த நிலையில் இடமாற்றம் பெற்றுச்சென்ற பச்சிலைப்பள்ளி பிரதேச செயலரே குறித்த காணியை இராணுவத்துக்கு என எழுத்து மூலம் வழங்கியுள்ளார் என தற்போது தெரிய வந்துள்ளது.

இந்த விடயம் குறித்து நாம் முதலமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளோம். காணி உரிமையாளர்களும்மனிதஉரிமைஆணைக் குழுவில் முறைப்பாடு செய்துள்ளனர். - என்றார். (ஐ-18)



நீர்த்தாங்கி அமைக்கும் பணிகள் இடம்பெற்ற நிலையில்.

# அக்கராயன் பகுதி குடிதண்ணீர் விநியோகத்துக்கு நீர்த்தாங்கி

கிளிநொச்சி, மார்ச் 10

கிளிநொச்சி அக்கராயனில் குடிதண்ணீர் திட்டத்துக்கான தாங்கி அமைக்கும் பணிகள் நடைபெற்றுவருகின்றன. அக்கராயன் மகா வித்தியாலயம், அக்கராயன் ஆரம்ப வித்தியாலயம், கொங்காதரன் குடியிருப்பு, இம்மாஸ்நகர் உட்பட அக்கராயன் கிராம அலுவலர் பிரிவில் குடிதண்ணீர் நெருக்கடிகளைக் தவிர்க்கும் முகமாக நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் குடிதண்ணீர் விநியோகத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இதன் முதற்கட்டமாக நீர்க் குழாய்கள் பொருத்தப்பட்டு திறந்த கிணறு அமைக்கப்பட்டுள்ளது.

தற்போது நீர்த்தாங்கி அமைக்கும்பணிகள் நடைபெற்று வருகின்றன. தற்காலிகமாக அக்கராயன் மகா வித்தியாலயம், அக்கராயன் ஆரம்ப வித்தியாலயம் என்பனவற்றுக்கு குடிதண்ணீர் விநியோகம் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ-18)

# மன்னாரிலும் உருளைக்கிழங்கு; பரீட்சார்த்த செய்கை வெற்றி

மன்னார், மார்ச் 10

மன்னார் மாவட்டத்தில் பரீட்சார்த்தமாக செய்கை பண்ணப்பட்ட உருளைக்கிழங்கு உற்பத்தி வெற்றியளித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்னார் தரவான்கோட்டையில் இந்த பரீட்சார்த்த செய்கை மேற்கொள்ளப்பட்டது.

இதன் அறுவடை விழா கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

மாகாண விவசாய பணிப்பாளர் சிவகுமார், மாவட்ட பிரதி விவசாய பணிப்பாளர் அற்புதச்சந்திரன், யு.என்.டி.பி திட்ட இணைப்பாளர் , விவசாய திணைக்களத்தின் அதிகாரிகள், விவசாயிகள் எனப் பலர்



கோப்புப்படம்

கலந்து கொண்டனர்.

மன்னார் மாவட்டத்தில் காலபோகச் செய்கையாக உருளைக்கிழங்கு பயிர்செய்கை அறிமுகப்படுத்தப்பட்டது.

இரண்டு ஏக்கர் வரையான காணியில்உருளைக்கிழங்கு பயிரிடப்பட்டது.

முன்மாதிரி துண்டங்களான லேசோடா, அனோபா ஆகிய இரண்டு உருளைக்கிழங்கு இனங்கள் பயிரிடப்பட்டன.

இவை சிறந்த முறையில் விளைச்சலைக் கொண்டுள்ளதாகவும் இதனை அடுத்து இனிவரும் காலங்களில் மன்னார் மாவட்டத்தில் உருளைக்கிழங்கு செய்கையை வெற்றிகரமாக மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்துக்கு அமைவாக விவசாய திணைக்களம், செய்கையாளர்களுக்கு உரிய பராமரிப்பு தொழில் நுட்ப விளக்கங்களை வழங்குவதற்கும் தயாராக உள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# சிவில் பாதுகாப்பு குழுக் கூட்டம்

முல்லைத்தீவு மாவட்ட மாங்குளம் பிராந்திய பொலிஸ் பிரிவில் சிவில் பாதுகாப்பு குழுக்களுக்கான செயலமர்வு துணுக்காய் பிரதேச செயலகத்தில் வடமாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

மாங்குளம் பிராந்திய பொலிஸ் பொறுப்பதிகாரி விஜேசிங்க தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மாங்குளம் பிராந்திய பொலிஸ் நிலையத்துக்கு உட்பட்ட ஓமந்தை, நெடுங்கேணி, புளியங்குளம், கனகராயன்குளம், மாங்குளம், மல்லாவி, ஐயங்கன்குளம் ஆகிய பொலிஸ் பிரிவுகளைச் சேர்ந்த சிவில் பாதுகாப்பு குழுக்கள்கலந்துகொண்டன. (ஐ-422)

# பூநகரி பாடசாலைகளுக்கு குடிதண்ணீர் வழங்க ஏற்பாடு

மன்னார்,மார்ச் 10

பூநகரியில் பாடசாலை மாணவர்கள் எதிர்நோக்கி வந்த குடி தண்ணீர் பிரச்சினை தீர்க்கப்பட்டுள்ளதாக பூநகரி கோட்ட கல்வி அலுவலர் தெரிவித்தார்.

சம்பள முரண்பாடு காரணமாக பவுசர்களுடனான குடி தண்ணீர் விநியோகம் தடைப்பட்டிருந்தால் பாடசாலை மாணவர்கள் குடி தண்ணீர் நெருக்கடியை எதிர்கொண்டு இருந்தனர்.

பூநகரி மகா வித்தியாலயம், பரம்மன்கிராய் அ.த.க. பாடசாலை, ஞானிமடம் அ.த.க. பாடசாலை, ஸ்ரீ விக்கினேஸ்வரா வித்தியாலயம், செம்மன் குன்று அ.த.க. பாடசாலை, செல்லியாதீவு அ.த.க. பாடசாலை, நல்லூர் மகா வித்தியாலயம், கறுக்காய் தீவு மகா வித்தியாலயம் ஆகிய எட்டு பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களையே இவ்வாறு குடிதண்ணீரைப் பெறுவதில் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.

கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனையினர் குடிதண்ணீர் பவுசர் ஒன்றை பூநகரியில் சேவையில் ஈடுபடுத்தி வந்தனர். எனினும் அதன் சாரதிக்கு சம்பளம் வழங்குவதில் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக குடிதண்ணீர் விநியோகம் தடைப்பட்டு இருந்தது.

எனினும் தற்போது இந்தப் பிரச்சினை தீர்க்கப்பட்டுள்ளதாகவும் பாடசாலைகளுக்கான குடி தண்ணீர் விநியோகம் தடைப்படாது நடைபெற நடவடிக்கை எடுக்கப்பட்டதாக பூநகரி கோட்டக் கல்வி அலுவலர் சு.தர்மரட்ணம் தெரிவித்தார்.

இதேவேளை பூநகரிப் பிரதேசத்தில் உள்ள நன்னீர்க் கிணறுகளிலிருந்து இராணுவத்தினரும், பொலிஸாரும் தினமும் பெரும்பவுசர்களில்தண்ணீரை எடுத்து செல்வதால், பூநகரிப் பிரதேச சபையூடாக மக்களுக்குச் செய்யப்படும் குடி தண்ணீர் விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-18)

# மண் அகழ்வை தடுக்குமாறு முறிகண்டி மக்கள் கோரிக்கை

மன்னார்,மார்ச் 10

துணுக்காய் பழைய முறிகண்டி பகுதியில் மணல், கிரவல் மண் மீண்டும் அகழப்பட்டு டிப்பர் வாகனங்களில் எடுத்துச் செல்லப்படுவதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

குறித்த பகுதியில் கிரவல் மணல் அகழப்படுவது இடைநிறுத்தப்பட்டது. எனினும் தற்போது மண் அகழ்வு இடம்பெறுவதால் அந்தப் பகுதியில் குடியிருக்க முடியாத சூழல் ஏற்பட்டுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர். 38 வரையான குடும்பங்கள் பழைய முறிகண்டி கிராமத்தில் குடியிருக்கின்றனர். மண் அகழப்படுவதால் மழை காலங்களில் வெள்ள அபாயம் ஏற்படும் நிலை தோன்றியுள்ளதாகவும் இதனை தடுக்குமாறு கோரி அதிகாரிகளுக்கு தாம் மனு கொடுத்துள்ளதாகவும் அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (ஐ-18)

# விதிகளை மீறிய இருவருக்கு தண்டம்

கிளிநொச்சி, மார்ச் 10

கிளிநொச்சிப் பகுதியில் வீதி ஒழுங்கு விதிகளை மீறி வாகனம் செலுத்திய இருவரிடம் இருந்து 6,500 ரூபா தண்டப் பணம் அறவிடப்பட்டது.

கிளிநொச்சி டிப்போச் சந்திப் பகுதியில் சாரதி அனுமதிப்பத்திரம் இன்றி முச்சக்கரவண்டி செலுத்திய ஒருவருக்கு எதிராக கிளிநொச்சிப் பொலிஸார் வழக்குப்பதிவு செய்து கடந்த புதன் கிழமை கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில் அவரை முற்படுத்தினர். இதன்போது குறித்த நபர் குற்றத்தை ஒப்புக்கொண்ட நிலையில் அவருக்கு ஐயாயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

இதேவேளை கிளிநொச்சி கனகபுரம் வீதியில் வரிப்பத்திரம், காப்புறுதிப்பத்திரம் எடுத்துச்செல்லாமலும் இலக்கத்தகடுகள் தெளிவு இன்றியும் டிராக்டர் செலுத்திய ஒருவருக்கெதிராக வழக்குப்பதிவு செய்த கிளிநொச்சிப் பொலிஸார் குறித்த நபரை கிளிநொச்சி மாவட்ட நீதிவான் எம்.ஐ.வாகாப்தீன் முன்னிலையில் நேற்று முன்தினம் முற்படுத்தினார். இதன்போது அவருக்கு 1,500 ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. (ஐ-55)

# அனுமதியின்றி சாராயம் விற்றவருக்கு அபராதம்

கிளிநொச்சி ,மார்ச் 10

கிளிநொச்சி கணேசபுரத்தில் அரச சாராயம் வைத்திருந்த, விற்பனை செய்த குற்றங்களுக்காக கிளிநொச்சி நீதிமன்றில் ஒருவருக்கு 30,000 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

கிளிநொச்சி நகரை அண் மித்த பகுதியில் 150 மில்லி லீற்றர் அரச சீல் சாராயத்தை விற்பனை செய்த, அத்துடன் 450 மில்லி லீற்றர் சாராயத்தை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்த ஒருவரை கிளிநொச்சி மாவட்ட நீதிவான் எம்.ஐ.வாகாப்தீன் முன்னிலையில் கிளிநொச்சிப் பொலிஸார் முற்படுத்தினர்.

இதன் போது குற்றத்தை ஒப்புக் கொண்ட நபருக்கு தண்டப் பணம் செலுத்த நீதிமன்றம் உத்தரவிட்டது. (ஐ-18-55)


# பூநகரி மருத்துவமனையை திறக்குமாறு கோரிக்கை

மன்னார்,மார்ச் 10

பூநகரியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ளமருத்துவமனையை விரைவாக இயங்க வைத்து சேவையை வழங்குமாறு அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பூநகரி பிரதேசத்தில் 44 மில்லியன் ரூபா செலவில் மருத்துவமனை அமைக்கப்பட்டுள்ளது. வேலைகள் அனைத்தும் முடிவுறுத்தப்பட்ட நிலையில் கட்டடத்தை திறக்காது காலம் தாழ்த்தப்படுகிறது.


தற்போது பூநகரி மருத்துவமனை தனியார் வீடு ஒன்றில் நெருக்கடிகளுக்கு மத்தியில் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ-18)



இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவர் கிளிநொச்சிக்கு பயணம் மேற்கொண்டு அங்கு இடம்பெறும் அபிவிருத்திப் பணிகளை பார்வையிட்டார். அத்துடன் கிளிநொச்சி, கிருஷ்ணபுரம், இராமகிருஷ்ண வித்தியாலயத்துக்குச் சென்று அந்தப் பாடசாலையின் குறைகளையும் நேரில் கேட்டு ஆராய்ந்தார். (ஐ-18)

# தமிழரின் நிலத்தை அபகரிப்பது பொதுபலசேனாவின் கொள்கை

## யோகேஸ்வரன் எம்.பி. குற்றச்சாட்டு



யோகேஸ்வரன் எம்.பி

களுவாஞ்சிக்குடி,மார்ச் 10

வடக்கு, கிழக்கில் தமிழர்களின் இடங்களை அபகரிப்பதும், சிங்களவர்களின் பூர்வீகம் வடக்கு, கிழக்கு என்று மாற்றுவதே பொது பல சேனா அமைப்பின் கொள்கை. இது அரசுடன் இணைந்த அமைப்பு.

இவ்வாறு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன் குற்றம் சாட்டியுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புதான்தமிழர்களுக்கு விமோசனத்தைப் பெற்றுத்தரக் கூடியது என்று பல தேர்தல்களில் நிரூபித்துள்ளனர்.

தமிழ் மக்களின் பிரச்சினைகளில் சிவில் சமூகம் ஈடுபட்டுள்ளது என்றால் அதனை நாம் வரவேற்கின்றோம். அவர்கள் தமிழ் மக்கள் பற்றி சிந்திக்கத் தொடங்கியிருக்கின்றார்கள். ஆனால் சிந்திக்கத் தொடங்கிய அவர்கள் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக இருக்கின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிராக செயற்பட முனைவது தமிழ் மக்களுக்கு எதிரான செயற்பாடு என்பதை உணர வேண்டும்.

இலங்கை அரசு சர்வதேசத்தில் மனித உரிமை மீறலில் குற்றவாளியாகக் காணப்படுகின்றது. தங்கள் குற்றங்களை மறைப்பதற்கு பல செயற்பாடுகளை மேற்கொள்கின்றனர்.

சர்வதேசம் தமிழ் மக்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது என்பதனை ஏற்றுக் கொள்ளுகின்ற நிலையில் இங்கிருக்கின்ற தமிழ் மக்கள் ஜனாதிபதிக்கு ஆதரவாகப் பேரணியை நடத்துவது பொருத்தமற்ற செயல்.

இந்தப் பிரதேச செயல கத்தை தரமுயர்த்துவது தொடர் பாகத் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு பேசியிருக்கின்றது. பல தடவைகள் நாம் பொது நிர்வாக அமைச்சருடன் பேசியுள்ளோம்.

கடந்த கிழக்கு மாகாண சபையில் தமிழ் முதலமைச்சர் தலைமை வகித்த வேளை தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி சார்பாக மூன்று அரச சார்புடைய மாகாண சபை உறுப்பினர்கள் அம்பாறை மாவட்டத்தில் இருந்தனர். அவர்களில் ஒருவர் அமைச்சராக இருந்தார்.

அவர்கள் அரசின் முக்கிய பிரதிநிதிகளாக இருந்தனர். ஏன் அந்தவேளை பல்முனை பிரதேச செயலகத்தை தரமுயர்த்த அவர்கள் முனையவில்லை. கிழக்கின் அதிகாரத்தைத் தம் கையில் வைத்திருந்த அரச பங்காளிக் கட்சிப் பிரதிநிதிகள் கூட இந்த விடயத்தில் கரிசனை காட்டவில்லை.

பொதுபலசேனா கல்முனைப் பிரதேச செயலகத்தை தரமுயர்த்துவதற்கு வருகின்றார்கள். ஆனால் இன்னுமொரு நாள் கல்முனை நகரில் புத்த சிலையை நிறுவுவார்கள் என்பதில் ஐயமில்லை. இது பௌத்தர்களின் பூர்வீகம் என்று சொல்லமாட்டார்கள் என்று சொல்ல முடியாது. ஏனெனில் அவர்கள் ஒரு திட்டமிட்ட நிகழ்ச்சி நிரலில் செயற்பட்டுக் கொண்டிருக் கின்றனர்.

இது எமது இனத்துக்கு எதிராக அவர்கள் பல செயற்பாடுகளை செய்திருக்கின்றார்கள். இன்று தம்புள்ளையில் 38 வருடங்களுக்கு மேலாக இருந்த கோயிலையும், 40 இற்கும் மேற்பட்ட தமிழ்க் குடும்பங்களையும் அந்த இடத்தில் இருந்து அகற்றியுள்ளது அரசு. இதன் பின் புலத்தில் இந்த பொதுபல சேனா அமைப்பே இருக்கின்றது-என்றார். (ச-32)

# காட்டு யானைகளால் இரவில் விழித்திருப்பு

## திருமலை மக்கள் கவலை

திருகோணமலை,மார்ச் 10

திருகோணமலை -பட்டணமும் சூழலும் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட முத்துநகர் பகுதியில் காட்டு யானைகளின் தொல்லைகள் அதிகரித்து வருவதால் இரவு நேரத்தில் தூங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்று கிராம மக்கள் விசனம் தெரிவித்தனர்.

தொழுகை நேரத்தில் பள்ளிவாசலுக்கு செல்வதற்கும் -இரவு நேரங்களில் குழந்தைகளை வைத்துக்கொண்டு நிம்மதியாகத் தூங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்று அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

வீட்டில் தமக்குத் தேவைப்படும் காய், கறிகளை நட்டு வரும் போது காட்டு யானைகள் அதனை அழித்து விடுகின்றன என்று அவர்கள் கூறுகின்றனர்.

காட்டு யானைகளின் தொல்லை குறித்து திருகோணமலை மாவட்ட அரசியல்வாதிகளிடம் கூறியும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று அவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

எனவே காட்டு யானைகளின் தொல்லையை நீக்குவதற்கு மின்வேலி அமைத்துக்கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச)



திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச செயலகத்தின் மகளிர் தினம் நேற்று முன்தினம் சனிக்கிழமை உவர்மலை விவேகானந்தாக் கல்லூரியில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கிழக்கு மாகாணசபைத் தவிசாளர் திருமதி.ஆரியவதி கலப்பதி, திருகோணமலை நகரசபைத் தலைவர் க.செல்வராஜா உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ச-40)

# குழுக்களுக்கு இடையே கைகலப்பு

திருகோணமலை,மார்ச் 10

கிண்ணியாவில் நேற்றுமுன்தினம் இரு இளைஞர்களுக்கு இடையே கைகலப்பு ஏற்பட்டுள்ளது. இவ்விரு குழுக்களுக்கும் இடையே பாதிப்புக்கள் ஏற்படாத வகையில் பொலிஸார் தலையிட்டு அவற்றைத் தடுத்துள்ளனர்.

நேற்று முன்தினம் நடைபெற்ற ஆசியக் கிண்ண கிரிக்கெட் இறுதிச்சுற்றுப் போட்டியில் இலங்கையும், பாகிஸ்தானும் இறுதிப் போட்டியில் கலந்து கொண்டு, இலங்கை அணி வெற்றி பெற்றதைக் கொண்டாடி வீதியில் சென்று கொண்டிருந்த போது மற்றொரு இளைஞர் குழு அவற்றைத் தடுத்து நிறுத்த முற்பட்ட வேளையில் கைகலப்பு ஏற்பட்டது.

இதனால் கிண்ணியா துறையடி பிரதான வீதியில் பதற்ற நிலை ஏற்பட்டது. இந்தச் சம்பவத்தை அறிந்த பொலிஸார் குறித்த இடத்துக்குச் சென்று இரு குழுக்களையும் சமாதானப்படுத்தி கைகலப்பு உக்கிரமடையாத நிலையில் விசாரணை செய்து அனுப்பியுள்ளனர். (ச)

# வடிகானில் மழைநீர் தேங்கி டெங்குநோய் பரவும் அபாயம்



திருகோணமலையில் மழைநீர் தேங்கிய வடிகான்

திருகோணமலை,மார்ச் 10

திருகோணமலை மின்சார நிலைய வீதியில் புனரமைப்பு செய்யப்பட்டு வந்த வடிகான் பணிகள் கடந்த மூன்று மாத காலமாக நிறைவடையவில்லை.

இதனால் அந்தப் பகுதி குடியிருப்பாளர்கள் தமது வீடுகளுக்குச் செல்ல இடையூறாக இருப்பதுடன் நிறைவடையாத வடிகான்களில் மழை நீர் தேங்கி நின்று நுளம்புகள் பெருகும் அபாயமும் ஏற்பட்டுள்ளது.

ஏற்கெனவே திருகோணமலை நகரப்பகுதியில் பல டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

எனவே இந்த வடிகான் பணியை உடனடியாகப் பூர்த்தி செய்து தருமாறு பொது மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ச)

# விண்ணப்பங்களை அனுப்பி வைப்பதில் அரச திணைக்களங்கள் இழுத்தடிப்பு

## அரச பொது ஊழியர் சங்கம் தெரிவிப்பு

அம்பாறை, மார்ச் 10

கிழக்கு மாகாண அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் வினைத்திறன்காண் தடைப் பரீட்சையிலிருந்து விலக்களிப்புப் பெறுவதற்காக சமர்ப்பிக்கப்பட்ட அலுவலர்களின் விண்ணப்பங்களை, மாகாண பிரதிப் பிரதம செயலாளருக்கு அனுப்பி வைப்பதில் இழுத்தடிப்புக் காட்டப்பட்டு வருகிறது.

இந்தத் தகவலை அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது.

கிழக்கிலுள்ள சில அரச திணைக்களங்கள் வலயக் கல்வி அலுவலகங்களில் அலுவலர்கள் சமர்ப்பித்த விண்ணப்பங்கள் தேக்க நிலையில் வைக்கப்பட்டுள்ளன என்று அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கம் கவலை வெளியிட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கம் கிழக்கு மாகாண பிரதம செயலர் மற்றும் பிரதிப் பிரதம செயலர் ஆகியோருக்கு மனு ஒன்றை அனுப்பிவைத்துள்ளது.

இந்த மனுவில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

"அரச வர்த்தமானி இல 1840/34 இற்கு அமைவாக அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை வகுப்பு III, II, I இல் உள்ளவர்களுக்கு வினைத் திறன்காண் தடைப்பரீட்சையிலிருந்து விலக்களிப்புப் பெற்றுக் கொள்வதற்கான சலுகையை அரசு வழங்கியுள்ளது.

இச் சலுகை 02.04.2013 ஆம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டுமெனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இச் சலுகையைப் பெற்றுக் கொள்வதற்கு குறித்த அலுவலர்கள் சமர்ப்பிக்கும் விண்ணப்பங்களை சில திணைக்களத் தலைவர்கள் பரிந்துரை செய்து மாகாண பிரதிப் பிரதம செயலாளருக்கு அனுப்பி வருகின்றனர்.

ஆனால் வேறு சில அரச திணைக்களங்கள் மற்றும் வலயக் கல்வி அலுவலகங்களில் அலுவலர்கள் சமர்ப்பித்த விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்படாது தேக்க நிலையில் குறித்த அலுவலகங்களில் வைக்கப்பட்டுள்ளன.

தங்களது அமைச்சு மூலமாக இதனை அனுப்பி வைப்பதற்குரிய பணிப்புரை வழங்கப்படவில்லை. அதனாலேயே விண்ணப்பங்களைத் தேக்க நிலையில் வைத்திருப்பதாக காரணம் கூறப்படுகின்றது.

எனவே இந்த இழுத்தடிப்பு நிலைமை தொடர்வதற்கு அனுமதிக்காது சம்பந்தப்பட்டவர்களுக்கு உரிய பணிப்புரையையும் வழங்கி இச் சலுகையை அலுவலர்கள் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-30)

# இறால் வளர்ப்பை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை

மட்டக்களப்பு,மார்ச் 10

மட்டக்களப்பு மாவட்டத்தின் பிரதான வருமானத்தை ஈட்டித்தரும் தொழில்களில் ஒன்றான இறால் வளர்ப்புத் தொழிலை அபிவிருத்தி செய்ய கடற்றொழில் அமைச்சினூடாக தேசிய நீர்வாழ் உயிரின வளர்ப்பு அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்தத் திட்டதின்கீழ் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள இறால் பண்ணையாளர்களிடையே இறால் வளர்ப்பு மற்றும் இறால் உற்பத்தி தொடர்பான தெளிவான அறிவூட்டலை வழங்கும் பயிற்சி செயலமர்வு நடைபெற்றது. (ச)

# பேஸ்புக் தடை என்பது சிலரின் சூழ்ச்சித் திட்டம்

## நாட்டில் போலிப் பரப்புரைகள் என்கிறார் ஜனாதிபதி

கொழும்பு,மார்ச் 10
பேஸ்புக் தடை செய்யப்பட வுள்ளது என்று சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்கள் ஒரு சூழ்ச்சித் திட்டமாகும் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கொழும்பு மாவட்டத்தை மையமாகக் கொண்ட ஒரு சிலரே இந்தப் பரப்புரையை மேற்கொள்கின்றனர்.

**மாணவர்களின் தகவல் தொழில் நுட்ப அறிவை மேம்படுத்தும் நோக்கில் ஆயிரம் நெணசல கணினி மையங்கள் ஆரம்பிக்கப்படும்.**

இவ்வாறு போலிப் பரப்புரை செய்தவர்கள் பற்றிய தகவல்கள் வெளியாகியுள்ளன.

மக்களை கிளர்ச்சியடைச் செய்து அரசுக்கு எதிராக செயற்பட வேண்டும் என்பதே அவர்களின் நோக்கமாகும்.

தகவல் தொழில்நுட்பத்தை மேம்படுத்தும் அரசு, மக்களின் தகவல் அறிந்து கொள்ளும் உரிமையை ஒருபோதும் முடக்கிவிட மாட்டாது.

தொழில்நுட்பப் பயன்பாட்டின் போது எவ்வாறான கொள்கைகளை பின்பற்ற வேண்டும் என்பது பற்றி மாணவர்கள், பெற்றோர் மற்றும் ஆசிரியர்களைத் தெளிவுபடுத்த வேண்டும்.

மாணவர்களின் தகவல் தொழில்நுட்ப அறிவை மேம்படுத்தும் நோக்கில் ஆயிரம் நெணசல கணினி மையங்கள் ஆரம்பிக்கப்படும்-என்றார். (ச)



மதிலுடன் மோதிய பஸ்

## மதிலுடன் மோதியது பஸ்

### 21 பேர் காயம்

கொழும்பு,மார்ச் 10
கொழும்பிலிருந்து வெலிமடைக்குச் சென்றுகொண்டிருந்த தனியார் பஸ் வேகக் கட்டுப்பாட்டை இழந்து நுவரெலியா - கம்பளை பிரதான வீதியிலுள்ள மதில் ஒன்றுடன் நேற்று ஞாயிற்றுக்கிழமை மோதி விபத்திற்குள்ளானது.

இந்த விபத்தில் 21 பேர் காயமடைந்துள்ளனர். இந்த விபத்து பஸ் வேகமாகச் சென்றதாலேயே இடம்பெற்றுள்ளது என்று நுவரெலியா பொலிஸார் தெரிவித்தனர் இந்த விபத்து தொடர்பான விசா ரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## நீர்மின் உற்பத்தி சர்வதேச மாநாடு கொழும்பில்

கொழும்பு,மார்ச் 10
நீர் மின் உற்பத்தி தொடர்பான சர்வதேச மாநாடு நாளை செவ்வாய்க்கிழமை கொழும்பில் நடைபெறவுள்ளது.

45 நாடுகள் பங்கேற்கும் இந்த மாநாட்டில் நீர்மின் உற்பத்தியின் முக்கியத்துவம், நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்தி மின் உற்பத்தியை மேம்படுத்தல் போன்ற பல்வேறு விடயங்கள் குறித்து ஆராயப் படவுள்ளன.

ஹைட்ரோ ஏசியா 2014 என்ற பெயரில் நடைபெறும் இந்த மாநாடு மின்சக்தி எரிசக்தி அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி, அமைச்சர் பஸில் ராஜபக்ஷ ஆகியோர் தலைமையில் நடைபெறவுள்ளது. (ச)



கொட்டாவ - கடுவலை அதிவேக நெடுஞ்சாலையின் கொழும்பு வெளிச்சுற்றுவட்ட வீதியை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் சனிக்கிழமை திறந்து வைத்தார்.

## 'பேஸ்புக்' தொடர்பாக தெளிவூட்ட நடவடிக்கை

### கணினி அவசர பிரதிபலிப்புக்கள் ஒன்றியம் தீர்மானம்

கொழும்பு,மார்ச் 10
பேஸ்புக்உள்ளிட்ட சமூகவலைத் தளங்களைப் பாதுகாப்புடன் பயன்படுத்துவது தொடர்பில் மக்களை தெளிவுப்படுத்துவதற்கு இலங்கை கணினி அவசர பிரதிபலிப்புக்கள் ஒன்றியம் தீர்மானித்துள்ளது.

பல அரச நிறுவனங்கள் ஒன்றிணைந்து முன்னெடுத்த கலந்துரையாடலில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று சிரேஷ்ட தகவல் பாதுகாப்பு பொறியியலாளர் ரொஷான் சந்ரகுப்த தெரிவித்தார்.

பாடசாலைகள் மற்றும் கல்வியியற் கல்லூரிகளை இலக்காகக் கொண்டு இந்தத் தெளிவூட்டல் நடவடிக்கையை முன்னெடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ச)

## கடல் வழி பாதுகாப்பு குறித்து கூட்டம்

கொழும்பு,மார்ச் 10
இந்தியா, இலங்கை, மாலைத்தீவு ஆகிய மூன்று நாடுகளின் கடல்வழிப் பாதுகாப்பின் ஒத்துழைப்பு தொடர்பான தேசிய பாதுகாப்பு ஆலோசனைக் கூட்டம் புதுடில்லியில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவசங்கர் மேனன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் இலங்கையின் பாதுகாப்பு செயலர் கோத்தபாயராஜபக்ஷ, மாலைத்தீவின் தேசிய பாதுகாப்பு அமைச்சர் முகம்மது நஜீம் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்த கூட்டத்தின் போது இந்தியா, இலங்கை, மாலைதீவு ஆகிய நாடுகளுக்கு இடையே பரஸ்பரம், கடற்படையினருக்கு பயிற்சி அளித்தல், தகவல் பரிமாற்றம், ஒத்துழைப்பு குறித்து ஆலோசிக்கப்பட்டது.

இந்து சமுத்திர பிராந்தியத்தின் கடல் வழிப்பாதுகாப்பை பலப்படுத்துவது தொடர்பான முதலாவது கலந்துரையாடல் 2011 ஆம் ஆண்டு மாலைதீவில் இடம் பெற்றது. இரண்டாவது தேசிய பாதுகாப்பு ஆலோசனைக்குழு, கூட்டம் கடந்த 2013 ஆம் ஆண்டு ஜூலை மாதம் கொழும்பில் நடைபெற்றது.

அடுத்த கட்ட கலந்துரையாடல் மாலைதீவில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## 18000 சிறுவர் துஷ்பிரயோகங்கள் இலங்கையில் வருடமொன்றில் பதிவு

### உரிமைகளுக்கான மகளிர் அமைப்பு குற்றச்சாட்டு

கொழும்பு,மார்ச் 10
இலங்கையில் வருடமொன்றில் 18000 சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் பதிவாகின்றன என்று உரிமைகளுக்கான மகளிர் அமைப்பு அறிவித்துள்ளது.

உலக மகளிர் தினத்தை முன்னிட்டு வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் வெளியிடப்பட்டுள்ளது.

பொதுப்போக்குவரத்துசேவையை பயன்படுத்தும் போது அல்லது வேறும் ஏதே னும் சந்தர்ப்பங்களில் 90 வீத மான பெண்கள் ஏதோவொரு வகையில் துன்புறுத்தப்படுகின்றனர்.

இலங்கையில் நாள்தோறும் பத்துப் பெண்கள் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

வன்புணர்வுக் குற்றச்செயல்களில் ஈடுபடுவோருக்கு குற்றவியல் சட்டத்தின் அடிப்படையில் தண்டனை விதிக்கப்பட வேண்டும்.

அரசின் போதைப் பொருள், மதுபானக் கடத்தல் நடவடிக்கைகளினால் சமூக சீரழிவு ஏற்பட்டுள்ளது என்று அந்த அமைப்பு குற்றம் சுமத்தியுள்ளது. (ச)

## பௌத்த பிக்குகள் அரசியலில் ஈடுபடுவதை தடுக்கக் கூடாது

### சீலரட்ண தேரர் தெரிவிப்பு

கொழும்பு,மார்ச் 10
பௌத்த பிக்குகள் அரசியலில் ஈடுபடுவதனை தடை செய்யக் கூடாது என்று பத்தரமுல்ல சீலரட்ண தேரர் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையின் முக்கிய பௌத்த பீடங்களில் ஒன்றான அமரபுர மஹா பீடம், அந்தப் பீடத்தைச் சேர்ந்த பௌத்த பிக்குகள் அரசியலில் ஈடுபடுவதனைத் தடை செய்துள்ளது. இந்த நடவடிக்கையானது கண்டனத்திற்குரியது.

நாம் சியாம் பீடத்தைச் சேர்ந்த பௌத்த பிக்கு. இவ்வாறான ஓர் தடை எமது பீடத்தினால் பிறப்பிக்கப்பட்டால் அதற்கு எதிராக உள்நாட்டு சர்வதேச சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்படும்.

**பௌத்த பிக்குகளும் மனிதர்களே. அவர்கள் அரசியலில் ஈடுபடுவதில் தவறில்லை. தடை விதிக்கப்பட்டால், அடிப்படை மனித உரிமைகளின் அடிப்படையில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.**

பௌத்த பிக்குகளும் மனிதர்களே. அவர்கள் அரசியலில் ஈடுபடுவதில் தவறில்லை. தடை விதிக்கப்பட்டால், அடிப்படை மனித உரிமைகளின் அடிப்படையில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்-என்றார். (ச)

## இலங்கையில் தனியார்துறையின் லொத்தர் சீட்டிழுப்பு

### அறிமுகப்படுத்த அமைச்சரவை அனுமதி

கொழும்பு,மார்ச் 10
இலங்கையில் தனியார் துறையினரின் லொத்தர் சீட்டிழுப்பு முறையினை அறிமுகப்படுத்துவதற்கான அனுமதியை அமைச்சரவை வழங்கியுள்ளது.

இளைஞர்களை இலக்காகக் கொண்டு ஆரம்பிக்கப்படவுள்ள இந்த இணையத்தளம் மூலமான சீட்டிழுப்பால் பாடசாலை மாணவர்கள் பாதிக்கப்படலாம் என்ற அச்சம் எழுப்பப் பட்டுள்ளது.

ஓசியானிக் கேம்ஸ் என்ற தனியார் நிறுவனம் இதற்கான அனுமதியைப் பெற்றுள்ளது. ஹொங்கொங்கை தளமாகக் கொண்ட இந்த நிறுவனம் மலேசியாவின் உரிமை நிறுவனமாகும். இதனால் ஏற்கனவே நடைமுறையில் உள்ள அரசின் தேசிய லொத்தர் சபை மற்றும் தேசிய லொத்தர் சபை என்பவற்றின் லாபம் குறைவடையும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது.

தேசியலொத்தர்சபைகடந்த வருடத்தில் 14.5 பில்லியன் ரூபா லாபத்தை பெற்றிருந்தது.

இந்த வருடத்தில் அதனை 20 பில்லியன்களாக உயர்த்த அது திட்டமிட்டிருந்தது. எனினும் இந்த இலக்கை நிறைவேற்றுவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தை முன்னெடுப்பதற்காக இலங்கை அரசு மலேசிய நிறுவனத்துக்கு 100 பேர்ச்சஸ் காணியை கொழும்பில் வழங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தமிழ்ப் பெண்களின் இன்னல்களை பாராமுகமாக இருப்பது நியாயமா?

வடக்கு மாகாணம் இராணுவ மயம் ஆக்கப்பட்டுள்ளதால், பெண்களின் பாதுகாப்பு கேள்விக்கு இடமாகி உள்ளது. முக்கியமாக, வன்னி பெரு நிலப்பரப்பில் அவர்களுக்குப் பாதுகாப்பு இல்லை. அதனால் அவர்களின் இயற்கையான சுதந்திர நடமாட்டம் தடைப் படுத்தப்பட்டுள்ளது -

வடக்கில் இருந்து இராணுவத்தை அகற்ற வேண்டும் என்ற கோரிக்கை ஒரு சில மாற் றங்களை உண்டாக்கி உள்ளது. ஆனாலும் பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்வதில் மாற்றங்கள் ஏற்பட்டதாகக் கருதமுடியாது -

வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் இவ்வாறு தெரிவித்துள்ளார். யாழ்ப்பாணத்தில், விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற மகளிர் தின நிகழ்வில் அவர் இதனைத் தெரிவித்திருந்தார்.

• அண்மையில், இளம் தமிழ்ப் பெண்களை இராணுவத்தில் சேர அஃழத்துள்ளனர். பயம், வறுமை, பாதுகாப்பற்ற தன்மை போன்ற பல காரணங்கள் எமது பெண்களை இராணுவத்தினுள் உள்ளீர்த்துள்ளது.

•இளம் விதவைகள் படும்பாடு, அதுவும் குழந்தை களுடன் இருக்கையில் கணவர்களை இழந்த பெண் களின் நிலை மிகவும் பரிதாபத்துக்கு உரியதாக உள்ளது -

• முன்னைய பெண் போராளிகளும் பல வகையான சமூகப் பிரச்சினைகளை எதிர்நோக்கி உள்ளார்கள். அவர்களை ஒதுக்கி வாழ்வதற்குத் தலைப்படுவது எமது பாரம்பரியத்துக்குப் பெரும் இழுக்காகும் - என்றும் முதலமைச்சர் சுட்டிக்காட்டி உள்ளார்.

காணாமற்போன தமது மகன்மார்களை, சகோதரர்களை, கணவரைத் தேடிக் கொண்டிருக்கும் தமிழ்ப் பெண்களின் அவலங்களைச் சொல்லி வடிக்க முடியாது -

வீடு வீடாகச் சென்று தமிழ் யுவதிகளை இராணுவத்தில் இணையுமாறு வற்புறுத்தப்படுகிறது. இதனை நான் அறிவேன். இளம் பெண்களை மட்டுமே இணைத்துக் கொள்கிறார்கள். இளம் ஆண்களை இணைத்துக் கொள்வதற்கு முனையவில்லை - என்றும் முதலமைச்சர் சுட்டிக்காட்டி உள்ளார்.

அத்தோடு, பொதுவாகப் பெண்கள் மீது மேற்கொள்ளப்படும் துஷ்பிரயோகங்கள் தொடர்பில் நடவடிக்கை எடுப்பதில், பெரும் அசண்டையீனமாகவே பொலிஸார் செயற்படுகிறார்கள் என்றும் முதலமைச்சர் புட்டுக் காட்டி இருக்கிறார்.

வடக்கு மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலும் பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு உகந்த வகையில் மாற்றங்கள் இன்னமும் முன்னேற்றகரமான நிலையை நோக்கி நகரவில்லை என்பது ஒரு புறம். அவர்களின் இயற்கையான சுதந்திர நடமாட்டம் தடைப்பட்டுள்ளது என்பது மறுபுறம். இத்தகைய பாதுகாப்பின்மை பெண்கள் - மிகக் குறிப்பாக இளம் பெண்கள் - கல்வி, தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்வதில் மட்டுமன்றி மருத்துவ வசதிகளைப் பெறுவதனையும் மறைமுகமாகத் தடைப்படுத்திவிட்டது என்பதும் ஊன்றிக் கருத்திலும் கவனத்திலும் எடுக்கப்பட வேண்டியதாகும்.

மொத்தத்தில், போரினால் ஏனையவர்களை விடவும், அன்றாட வாழ்க்கை - வாழ்வியல் - சார்ந்த பல பரிமாணங்களிலும் மிகப் பெரிய அளவில் பாதிப்புற்றுள்ளவர்கள் மகளிரே.

மறுபுறத்தில், மிகப் பெரும் எண்ணிக்கையான பெண்கள் தமக்கு உண்டாக்கப்பட்ட பாதிப்புகளினால் மனோ நிலையிலும் தாக்கம் பெற்றுள்ளனர்.

மொத்தத்தில், நவீன சமூக பொருளாதார கலாசார மாற்றங்களாலும், மரபு சார்ந்த கூட்டுறவுக் குடும்பங்களது வாழ்வு அருகி வருவதாலும் போரினால் உண்டான அவலங்களினாலும் தமிழ்ப் பிரதேசங்களைச் சேர்ந்த பெண்களின் சுமை பல மடங்கு அதிகரித்துள்ளது.

இவை குறித்து கவனம் செலுத்தவும், கையாண்டு செயற்படுத்தவும் கொழும்பு அரசாங்கத்தை மட்டும் நம்பி இருக்காது மாகாண சபை மற்றும் உள்ளூர் நிறுவனங்களும் அமைப்புகளும் அக்கறை செலுத்திச் செயற்பட வேண்டும்.

கட்டுரை

# போர்க்குற்ற விசாரணைகளுக்கு ஆணையாளர் பணியகம் பொறுப்பு

## தீர்மான வாசகம் இதையே கூறுகிறது

சண்டே ரைம்ஸ் கட்டுரையிலிருந்து
கோகுலன்

மனித உரிமைகள் சபையில் தாக்கல்செய்வதற்காக அமெரிக்கா தயாரித்துள்ள தீர்மானத்தின் முன் வரைவு குறித்து சிலர் இதுதான் தீர்மானத்தின் இறுதி முன் வரைவு என்று தவறாக எண்ணிவிட்டார்கள். அது இன்னமும் சபையின் செயலகத்தில் சேர்க்கப்படவில்லை. இன்னமும் ஆரம்ப நிலையிலேயே அது இருக்கிறது.

அந்தத் தீர்மானத்துக்கு பிரிட்டன், மொன்டினிகுரோ, மெசடோனியா மற்றும் மொரிஷியஸ் ஆகிய நாடுகள் இணை அனுசரணையாளர்களாக ஏற்கெனவே அறிவித்துள்ளன. அந்த நாடுகள் சபையின் உறுப்பு நாடுகளாகவும் இருக்கலாம், உறுப்பு அல்லாத நாடுகளாகவும் இருக்கலாம்.

தீர்மான வரைவு மீது அமெரிக்கா ஏனைய சம்பந்தப்பட்ட நாடுகளுடனும் குறிப்பாக இந்தியாவுடன் கலந்துரையாடல்களை நடத்துவதையொட்டி மேலும் கட்டமைப்பு மாற்றங்கள் செய்யப்படுவது சாத்தியம். அதன் பிறகே உத்தியோகபூர்வமாக தீர்மான முன் வரைவு சபையின் செயலகத்தில் ஒப்படைக்கப்படும்.

மார்ச் 26 ஆம் திகதி தீர்மான வரைவு சபையில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும் அன்றைய தினம் உரை நிகழ்த்தவிருப்பவர்களில் மனித உரிமை ஆணையாளர் நவநீதம் பிள்ளை, ஜெனிவாவிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தின் துணைத் தூதுவர் பீட்டர் மல்றியன் மற்றும் இலங்கை வெளியுறவு அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் முதலியவர்கள் முக்கியமானவர்கள்.

### இறுதி வாக்கெடுப்பு

தீர்மானத்தின் மீதான இறுதி வாக்கெடுப்பு மார்ச் 27 ஆம் திகதி நடைபெறும். தீர்மான வரைவில் மனித உரிமைகள் சபையின் ஆணையாளரிடமிருந்து இலங்கை அரசின் செயற்பாடுகள் குறித்து மேலும் ஒரு அறிக்கை கோரப்பட்டிருந்தாலும் நவநீதம்பிள்ளை அதனைச் செய்வதற்கு பதவியில் இருக்கமாட்டார். 2008 ஆம் ஆண்டு செப்ரெம்பரில் இருந்து 4 வருட காலம் பதவியிலிருந்த நவிப்பிள்ளை மேலும் இரண்டு ஆண்டுகள் பதவி நீடிப்புப் பெற்றிருந்தார். வரும் ஒகஸ்டில் அது முடிவடைகின்றது.

அமெரிக்கத் தீர்மான முன் வரைவு பற்றிய தகவல் காட்டுத் தீ போல பரவி விட்டுள்ளது. பிரிட்டனிலுள்ள தமிழ் கழகம் விடுத்த அறிக்கையில் இந்த தீர்மான முன் வரைவு தமிழ் மக்களை அதிர்ச்சிக்குள்ளாக்குவதாகவும் ஏமாற்றமளிப்பதாகவும் இருந்துள்ளது என்று தெரிவித்துள்ளது. தீர்மான முன் வரைவு முன் போலவே மனித உரிமை ஆணையாளரிடம் இன்னும் ஒரு வருட காலத்தில் அறிக்கையொன்றை தாக்கல் செய்யும்படி கேட்டுள்ளது. இலங்கை அரசை நம்பகமான விசாரணைகளை நடத்துமாறும் கோருகின்றது. இத்தனைக்கும் இலங்கை அரசுக்கு விசாரணை நடத்துவதற்கான அரசியல் விருப்பமே கிடையாது என்று மனித உரிமை ஆணையாளர் ஏற்கெனவே அறிவித்துள்ள நிலையில் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளது.

இலங்கை மீது விசாரணை நடத்துவதற்கான சுதந்திரமான சர்வதேச விசாரணை ஆணைக்குழு போன்ற ஒன்று நியமிக்கப்பட வேண்டும் என்ற வகையில் மனித உரிமை சபையில் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட வேண்டும் என்று தென்னாபிரிக்க ஆர்ச்பிஷப் டெஸ்மன் டூட்டூ, ஐ.நா. செயலாளர் நாயகத்தின் நிபுணர் குழுவில் பணியாற்றிய யஸ்மின் சூக்கா மற்றும் முக்கிய சிலரும் கோரியிருப்பதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனும் ஆதரித்துள்ளார். இது புலம் பெயர்ந்த தமிழர் தரப்பு மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கருத்துக்களை பிரதிபலிப்பதாக இருக்கின்றது.

இலங்கை அரசுக்கு உள்ளக விசாரணைக்கான சந்தர்ப்பத்தை வழங்கி மேலும் காலத்தைக் கடப்பதற்கு வழி செய்யப்பட்டிருப்பதாக இவர்கள் சீற்றம் கொண்டுள்ளார்கள். உள்ளக விசாரணையானது வெறும் உண்மைகளைக் கண்டறியும் ஆய்வாக அமைந்துவிடலாம் என்றும் அவர்கள் அச்சம் கொண்டிருக்கிறார்கள்.

சர்வதேச விசாரணை ஆணைக் குழுவொன்று நியமிக்கப்பட வேண்டும் என்பதே த.தே.கூட்டமைப்பைப் போல மற்றும் அநேகர் விரும்புகிறார்கள்.

25 ஆவது மனித உரிமைகள் சபை மாநாட்டில் பேசிய இலங்கை வெளியுறவு அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கையை நிராகரித்தார். போர்க் குற்றங்கள் தொடர்பாக சர்வதேச விசாரணை வேண்டும் என்ற அவரது கோரிக்கையையும் புறக்கணித்தார்.

கடந்த வாரம் பிரிட்டிஷ் கொமன்ஸ் சபையில் பேசிய அந்த நாட்டின் வெளியுறவுச் செயலர் வில்லியம் ஹேக், இலங்கையில் சர்வதேச மனித உரிமைகளும் மனித குலத்துக்குரிய உரிமைகளும் மீறப்பட்டுள்ளன என்றும் அவைகள் பற்றி நம்பகமான விசாரணைகளை நடத்த இலங்கை அரசு தவறியுள்ளதென்றும் ஜெனிவா மனித உரிமைகள் சபையில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் தெரிவித்துள்ளார். இவை குறித்து சர்வதேச விசாரணை வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். பிரிட்டிஷ் அரசு அவரது கருத்துக்களை முழுமையாக ஆதரிக்கிறது என்று கூறினார்.

### அமைச்சர்கள் பெரு மகிழ்ச்சி

இலங்கை அரசு கடைசி நேரத்தில் ஒரு இணக்கப்பாட்டை உருவாக்குவதில் வெற்றியடைந்திருப்பதாக கொழும்பில் சில சிரேஷ்ட அமைச்சர்கள் மகிழ்ச்சியில் ஆழ்ந்திருந்தார்கள். இந்தச் சாதனைக்கு குறித்த காலத்தில் வெளிநாட்டில் இருந்தவரான முக்கிய அரச பிரமுகர் ஒருவரே காரணம் என்று அமைச்சர் ஒருவர் தெரிவித்தார். ஏனையவர்கள் சர்வதேச விசாரணை நடைபெறமாட்டாது என்று ஆரவாரித்துக் கொண்டார்கள்.

இவையெல்லாம் என்னத்தைக் காட்டுகின்றனவென்றால் உண்மையில் என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பது பற்றி அமைச்சர்களுக்கும் கூட ஒன்றும் தெரியவில்லை என்பதைத்தான். பல அமைச்சர்கள் ஊடகங்களுக்கு தொலைபேசி அழைப்புகளை எடுத்து என்ன நடக்கிறது என்று அறிய முயன்றார்கள்.

இந்தக் கட்டத்தில் ஐ.தே.கட்சியிலிருந்து வந்துள்ள வழக்கத்துக்கு மாறான ஒரு கடும் தொனியிலான அறிக்கையில், இந்த நாட்டில் விளைவிக்கப்பட்டுள்ள பெரும் குற்றங்கள் தொடர்பாக இன்று சர்வதேச நடவடிக்கை எடுக்கப்படுவதற்கு ராஜபக்ஷ அரசுக்கு ஏற்பட்டுள்ள பாரிசவாதம்தான் காரணம் என்று குற்றஞ் சாட்டியுள்ளது.

### உண்மை நிலைமை

உண்மையில் நிலைமை என்னவென்றால் அமெரிக்கா அப்படி ஒன்றும் பின்வாங்கிவிடவும் இல்லை. அரசில் உள்ள எவரும் தொப்பிக்குள் இருந்து முயலை இழுத்தெடுப்பது போல் ஜால வித்தை செய்துவிடவுமில்லை. தீர்மான வரைவில் பல விடயங்கள் இடம்பெறுவதால் அவைகள் நடுநிலையாளர்களையும் குறிப்பாக இந்தியாவைத் தம்முடன் இருக்கும் வகையில் கூவனமாக வடிவமைக்கப்பட்டுள்ளன. இந்தியாவும் அமெரிக்காவும் சில விடயங்களில் ஒத்துப்போயிருப்பதாகவும் தெரிகின்றத. மேலும் ராஜதந்திர வட்டாரங்களில் கூறப்படுவது போல இலங்கைக்கு ஒரு வாய்ப்புக்கு இடம் தருவ்து போன்ற இறுக்கமற்ற நிலைப்பாட்டை வெளிப்படுத்தியிருக்கிறார்கள் எனலாம். இதனை ராஜதந்திரமான ஒரு பொறி அமைப்பு என்றும் கூறலாம்.

> சர்வதேச விசாரணை ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட வேண்டும் என்பதையே த.தே.கூட்டமைப்பைப் போன்று மற்றும் அநேகர் விரும்புகிறார்கள். 25 ஆவது மனித உரிமைகள் சபை மாநாட்டில் பேசிய இலங்கை வெளியுறவு அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கையை நிராகரித்தார்.

இலங்கையை வன்மையாகக் கடித்துக் குதறும் அளவுக்கு அதில் பற்கள் இருந்தாலும் அது வலுவற்றதாக இருக்கிறதென்று பரவலாக அச்சம் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றது. தீர்மான வரைவின் செயற்பாட்டுக்குரிய 8 ஆவது பந்தியானது மனித உரிமை ஆணையாளர் பணியகத்தை சர்வதேச விசாரணையொன்றை நடத்தும்படியாக வலியுறுத்துகின்றது. ஒன்பதாவது பந்தியில் மேற்படி செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு பணியகத்தின் சிறப்பு ஆணை பெற்றவர்களை ஆலோசனைகளையும் தொழில்நுட்ப வசதிகளையும் வழங்கும்படி வலியுறுத்துகின்றது.

தீர்மான வரைவில் சில விடயங்கள் தெளிவில்லாமல் இருப்பது உண்மைதான். இன்னொரு விடயம் அது வலுவற்றதாக இருக்கிறது என்பதாகும். அப்படியான ஒன்றுதான் விசாரணைக்கான பரப்பெல்லை பற்றியது. தீர்மானம் நிறைவேற்றப்படுவதற்கு முன்னர் இந்த விடயம் தீர்மானிக்கப்படுமா என்பதும் அதற்கான சாத்தியம் உண்டா என்பதும் தெரியாமல் இருக்கிறது.

இன்னொரு சங்கடமான விடயம் என்னவென்றால் இலங்கையில் மனித உரிமை ஆணையாளருக்கான அலுவலகம் ஒன்று இல்லாத நிலையில் எவ்வாறு விசாரணைகளை அவர்களால் முன்னெடுக்கப்படக்கூடும் என்பதாகும். தீர்மானத்தை இலங்கை அரசு நிராகரித்துள்ள நிலையில் அரசு தனது மண்ணில் அவ்வாறான விசாரணை நடக்கவும் அனுமதிக்காது. அவ்வாறெனில் நாட்டுக்கு வெளியில்தான் விசாரணைகள் நடைபெற முடியும். அதற்கு ஆதரவும் உதவியும் அரசிடமிருந்து கிடைக்காது. ஆணையாளரின் பணிமனை விசாரணைகளை மேற்பார்வை செய்து இந்த வருடம் செப்ரெம்பரில் உறுப்பினர்களுக்கு குறிப்புகளை வழங்கும். பிறகு அடுத்த ஆண்டில் மார்ச்சிலும் அறிக்கை சமர்ப்பிக்கும். அதன் பின்னர் சபையின் நியமங்களுக்கு அமைவாக விசாரணை தொடர்பாக உறுப்பு நாடுகள் ஒரு தீர்மானத்துக்கு வர முடியும். அதுவும் நீண்ட கால செயற்பாடாக இருந்துவிடப் போவது மட்டுமல்ல, நாட்டுக்கு சேதங்களை ஏற்படுத்துவதாகவும் இருக்கவே செய்யும்.

# குடிசைகளையே தஞ்சமாகக் கொண்ட

## நாவலடி, பூம்புகார் கிராம மக்கள்



● லக்ஸ்மன்

வீடு வரும் வீதி வரும் தண்ணீர் வரும், நாவலடி பூம்புகார் கிராம மக்கள் அரசியல்வாதிகளின் இந்த உறுதி மொழிகளைக் கேட்டுச் சலித்துப் போய்விட்டனர். போர் காரணமாக இடம்பெயர்ந்து 2010 இல் மீளக்குடியமர்ந்த இந்த மக்களுக்கு இதுவரை அடிப்படை வசதிகள் எவையும் கிடைக்கவில்லை. ஜே/90 கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள நாவலடி பூம்புகார், அரியாலை கிழக்குப் பகுதிகளைக் கொண்டதொரு கிராமமாகும். தற்போது 420 குடும்பங்கள் இங்கு வசிக்கின்றன. இந்தப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து சென்ற அநேகர் இன்னமும் மீளக்குடியமரவில்லை. அடிப்படை வசதிகள் கூட இங்கு இல்லாத நிலையில் எவ்வாறு மீண்டும் இங்கு வந்து குடியமர்வது என்ற ஆதங்கம் அவர்களிடம் உள்ளதாக மீளக்குடியமர்ந்த மக்கள் தெரிவிக்கின்றனர்.

அநேகர் இன்னமும் சாதாரண குடில்களில்தான் வசிக்கின்றனர். இதுதான் எங்கள் அரண்மனை என்று ஏக்கப் பெருமூச்சும் இவர்களிடமிருந்து கிளம்புகின்றது. இந்திய வீடமைப்புத் திட்டத்தில் ஒரு வீடு தானும் இவர்களுக்குக் கிடைக்கவில்லை. இந்தப் பகுதிக்கென பல வீடுகள் வழங்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. ஆனால் பூம்புகார் பகுதியில் ஒரு வீடு கூட வழங்கப்படவில்லை. இங்கு வதியும் மக்களின் குடில்கள் அதிகாரிகளுக்கு அடுக்கு மாடி போன்று தெரிகின்றதா என்று இங்கு வசிப்பவர்கள் விரக்தியுடன் தெரிவிக்கின்றனர். அரியாலை கிழக்குப் பகுதியில் மட்டுமே சில அபிவிருத்திப் பணிகள் இடம்பெற்றுள்ளன. பிரதேச சபை உறுப்பினர் அந்தப் பகுதியைச் சேர்ந்தவர் என்பதால் அது இடம்பெற்றிருக்கலாம் என மக்கள் கூறுகின்றனர். நல்லூர் பிரதேச சபை கூட எமது பகுதியைக் கவனிப்பதில்லை என்ற மனக்குறையும் கிராம மக்களிடம் காணப்படுகின்றது.

வீதிகள் மிகவும் மோசமான நிலையில் காணப்படுகின்றன. கண்டி வீதியில் இருந்து நாவலடி செல்லும் பிரதான வீதியில் சுமார் ஒரு மைல் தூரம் வரை ஓரளவு நல்ல நிலையில் காணப்படுகிறது. எனினும் அந்த வீதியின் பெரும் பகுதி மிகவும் மோசமாகவே காணப்படுகிறது. கர்ப்பிணிப் பெண்களை இந்த வீதியால் வாகனங்களில் கொண்டு செல்ல முடியாது. சைக்கிள்கள் கூட செல்ல முடியாத அளவுக்கு வீதி காணப்படுகின்றது. இடையிடையே மணல் காணப்படுவதால் மோட்டார் சைக்கிள்களில் செல்பவர்கள் விழுந்தெழும்ப வேண்டியுள்ளது. இந்த வீதியில் கடந்த 50 ஆண்டுகளாக புனரமைப்பு வேலைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

அடிப்படைத் தேவைகளான தண்ணீர், மலசல கூட வசதிகள் கிடையா. தண்ணீருக்காக சாயி பாபா நிறுவனமும் கரித்தாஸ் நிறுவனமும் சில கிணறுகளை அமைத்து உதவியுள்ளன. மேலும் மக்கள் தமது சுய முயற்சியில் ஆறு கிணறுகளை வீடுகளில் அமைத்துள்ளனர். சுமார் 175 குடும்பங்கள் வரை இந்தக் கிணறுகளையே பயன்படுத்த வேண்டும். மாலை 6 மணிக்குப் பின்னர் வீடுகளில் உள்ள கிணறுகளில் தண்ணீர் அள்ள முடியாது என கிராம முன்னேற்றச் சங்கப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார். சாயி பாபா நிறுவனம் பொதுக் கிணறு ஒன்றை அமைத்து 30 குடும்பங்களுக்கு நீர் விநியோகம் செய்ய நடவடிக்கை எடுத்துள்ளது. இதற்காக ரூபா மூன்றரை லட்சம் ரூபா வரை செலவு செய்துள்ளதாகவும் கூறப்பட்டது. உலக உணவுத் திட்டத்தில் வீதியோரங்களில் உள்ள பற்றைகள் வெட்டப்படுகின்றன.

சிறிய பஸ் ஒன்றே இந்தப் பகுதிக்கான சேவையில் ஈடுபட்டுள்ளது.

இதனால் பாடசாலைக்குச் செல்லும் மாணவர்கள் சிரமப்படுவதாகவும் சில வேளைகளில் பிந்தியே பாடசாலை செல்வதாகவும் பெற்றோர்கள் கவலைப்படுகின்றனர்.



வடக்கின் வசந்தத்தின் மூலமாக மின்சாரம் கிடைத்துள்ளது. கடற்றொழிலும் , தோட்டச் செய்கையும் மேற்கொள்ளக் கூடியதாக இருப்பினும் இங்குள்ள கடற்றொழிலாளர்களுக்கு ஏனைய பகுதிகளில் வழங்கப்பட்டமை போன்ற உதவிகள் எமக்குக் கிடைக்கவில்லை. இங்கு கிடைக்கும் தண்ணீர் நன்றாக இருந்த போதிலும் கிணற்று வசதிகள் இல்லாததால் வீட்டுத் தோட்டச் செய்கையை முன்னெடுக்க முடியாதுள்ளது. கிணற்று வசதியுள்ளவர்களின் வீட்டு வளவுகளில் சிறு தோட்டச் செய்கைகளைக் காண முடிகின்றது.

தமக்கு நிவாரண உதவிகள் கூட கிடைக்கவில்லையென இங்குள்ள மக்கள் தெரிவிக்கின்றனர். யு.என்.எச்.சி.ஆர். வழங்கிய உணவுப் பொதிகள் கூடத் தமக்குக் கிடைக்கவில்லையெனவும், மீளக் குடியமர்ந்தவர்களுக்கு வழங்கப்பட்ட பண உதவியும் தமக்குக் கிடைக்கவில்லை எனவும் இவர்கள் வருத்தம் தெரிவித்தனர். வறுமைக்கோட்டுக்குக் கீழ் இருந்தும் தமக்கு உதவிகள் கிடைக்கவில்லையென்றும் அவர்கள் கவலையுடன் தெரிவித்தனர்.

இங்குள்ள பாடசாலை புனரமைக்கப்பட்டுள்ளது. கணிசமான பிள்ளைகள் அங்கு செல்கிறார்கள். அவர்களுக்கான கற்றல் உபகரணங்களை வாங்கிக் கொடுப்பதும் பெற்றோர்களுக்கு முடியாத விடயமாக உள்ளது.

வருமானங்கள் இல்லாததால் இந்த அவலநிலை ஏற்படுகின்றது. அநேகமானவர்கள் கூலித் தொழிலையே மேற்கொள்கின்றனர். கல்வி மட்டம் மிகவும் குறைவாக இருப்பதால் இங்குள்ளவர்களில் யார் எதைச் சொன்னாலும் நம்பிவிடும் தன்மை அவர்களிடம் காணப்படுகின்றது. அரசியல்வாதிகள் சொல்லும் வாக்குகளை இன்னமும் நம்பிக் கொண்டிருக்கிறார்கள்.

வீடு வரும் வீதி வரும் தண்ணீர் வரும் இன்று வரை நம்பிக்கொண்டே இருக்கிறார்கள். உலக நடப்புக்களைத் தெரிந்து கொள்ளக் கூடிய வசதிகள் இங்கு இல்லை. ஒரு சனசமூக நிலையமாவது அமைக்கப்பட வேண்டும். இதன் மூலமாகப் பத்திரிகைகளையாவது பார்க்க முடியும். வெளிநாட்டில் வதியும் ஒருவரின் உதவியுடன் சனசமூக நிலையத்தை அமைக்கும் பணிகள் தற்போது இடம்பெற்று வருகின்றன. பொதுமண்டபம் , விளையாட்டு மைதானம் மட்டுமன்றி உள்ளூர் பொருள்களைக் கொண்டு உற்பத்தி செய்யக்கூடியதான பயிற்சிகளை இங்குள்ள பெண்களுக்குக் கிடைக்குமாயின் தமக்கு உதவியாக இருக்கும் என்கிறார்கள் குடும்பப் பெண்கள். ஆரம்ப சுகாதார நிலையம், மீனவர்களுக்கான ஓய்வு மண்டபம் என்பனவும் முக்கிய தேவைகளாகக் காணப்படுகின்றன. நிரந்தர வீடுகள் , மலசலகூடம், கிணறுகள் என்பனவுமே அனைத்து மக்களினதும் முதல் கோரிக்கையாக உள்ளது. வீட்டுத் திட்டம் தொடர்பாக யாழ்.அரச அதிபர் உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். அதிகாரிகள் நாவலடி, பூம்புகார் பகுதிகளுக்கு வந்து தமது நிலைமைகளை நேரில் அவதானிப்பதுடன் அது குறித்து நடவடிக்கைகளையும் துரிதமாக முன்னெடுக்கும் பட்சத்தில் தான் தமது கிராமமும் ஏனைய பகுதிகளைப் போன்று அபிவி ருத்தியடையும் என்பதே அந்த மக்களின் எதிர்பார்ப்பாக வுள்ளது. மேலும் இங்குள்ள மக்கள் அவர்கள் வசிக்கும் காணிக ளுக்கான உறுதிகளும் வழங்கப்படாமையால் உதவிகளைப் பெறுவதில் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

---

## தவக்காலச் சிந்தனை



### மகிழ்ச்சிக்கு அடித்தளம் பகிர்தல்

இன்றைய உலகில் உதவிகள் தேவைப்படுவோர் வெறுமையுடன் வறுமையில் உழன்று கொண்டிருக்க, வசதி வாய்ப்புக்கள், கவனிப்புக்கள் உதவிகள் உள்ளவனுக்கே சென்றடையும் நிலை காணப்படுகிறது. ஆள்பார்த்து, முகம்பார்த்து, செல்வாக்கை முன்னிட்டே உதவிகளும் சென்றடைகின்றன. இது வறுமை வறுமையோடும் செல்வம் செல்வத்தோடும் கைகோர்க்கும் பரிதாப நிலையைத் தோற்றுவிக்கின்றது. இயேசுவின் பகிர்ந்து வாழுங்கள் என்ற வரைவிலக்கணத்துக்கு இந்தச் செயற்பாடுகள் முரணானவையாகும்.

“சின்னஞ்சிறிய என் சகோதரர்களுள் ஒருவருக்கு நீங்கள் செய்த போதெல்லாம் எனக்கே செய்தீர்கள்” என்கிறது இறைவார்த்தை. யார் இந்த சின்னஞ்சிறிய சகோதரர்? நாளைய பொழுதுக்கு எதை உண்போம். எதை உடுத்துவோம், எப்படி அழகுபடுத்துவோம் என்றும் ஆடம்பர பணச் செருக்குப் பட்டியலிடும் மக்கள் மத்தியில் இன்று எதை உண்போம், எதை மாற்றுடையாக அணிவோம், கல்வியைத் தொடர முடியுமா, முன்னேற்றம் வருமா என்று பல தேவைகளுடன் வாழ்வில் பல சுமைகளுடன் வாழ்வை நகர்த்தும் சின்னஞ்சிறிய சகோதரர்கள் எத்தனை பேர் உள்ளனர். இவ்வாறானவர்களுக்கு நன்மை செய்ய சந்தர்ப்பங்கள் இருந்தும் தவறவிட்ட காலங்கள் எத்தனை? இந்த தவக்காலப் பருவத்தில் ஒறுத்தல் முயற்சிகள் மூலம் நாம் சேமிக்கும் பணத்தை, நேரத்தை ஆறுதல் மொழிகளை தேவைப்படுவோருடன் பகிர்ந்து உன்னைப்போல் உன் அயலவனையும் நேசி என்ற இறைமொழிக்கு சான்று பகர்ந்து வாழ்வோம்.

***எஸ்.யேசுதாஸ், கொழும்புத்துறை.***

---

## வாசகர் திமுகம்

## விருதுகள் பெறுவதற்கு தகுதி அவசியமாகும்

கௌரவ விருதுகள் வழங்கப்படும்போது விருது பெறுபவர்கள் அதனைப் பெறத் தகுதியுடையவர்களாக இருத்தல் வேண்டும். அப்போதுதான் விருதுக்குரிய மகிமையும் கௌரவமும் பேணப்படும். கலாபூஷண விருதுகள் கண்டபடி வழங்கப்படுகிறது போலத் தெரிகின்றது.


நடிகமணி வி.வி.வைரமுத்துவுக்கும் விருது வழங்கப்பட்டுள்ளது. அவரது மேடைக்கு Focus light அடித்தவருக்கும் வழங்கப்படுகிறது. நாதமாமணி பத்மநாதனுக்கும் வழங்கப்பட்டுள்ளது. பார்த்துக் கொண்டிருந்து தாளம் போட்டவருக்கும் வழங்கப்படுகிறது. தவில் மேதை தட்சணாமூர்த்திக்கும் வழங்கப்படுகிறது. தகரடப்பாவில் தட்டித் திரிந்தவர்களுக்கும் வழங்கப்படுகிறது.

நேர்மையான ஆய்வுகள் மூலம் விருதுகள் வழங்கப்பட வேண்டும். இல்லையேல் அது கலை அன்னைக்கு செய்யும் மகா துரோகம் மட்டுமல்ல ஒரு பெரிய உதாசீனமாகும்.

தகுந்த கள ஆய்வு(Field research) செயலாய்வு(Action research), விடய ஆய்வு(Case study) என்பனவற்றின் மூலமே இனி வருங்காலங்களில் சிறந்த ஆசிரியர்களுக்கான “பிரதீபா பிரபா” விருதுகள் வழங்கப்படும் என கல்வித் திணைக்களம் தீர்மானித்துள்ளது. இதே நடைமுறையை கலாசாரத் திணைக்களமும் பின்பற்றினால் வரவேற்றப்படக் கூடியது. கள்ளுக் கொட்டிலில் பாடியவர்களுக்கும் கலாபூஷண விருதுகள் வழங்கப்படுவது கலைத்தாயை கொச்சைப் படுத்துவதாகும்.

கண்ணாடிக் கூட்டு பரிந்துரைகளை தவிர்த்து தகுந்த ஆய்வுகளின் மூலம் வழங்கப்படும் போதே விருதுகள் மகிமை பெறும். விருதுகளைப் பெறுபவர்களும் மகிமையடைவர்கள்.

***அன்பன் சலோம், கம்பர்மலை.***



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்:** துணிச்சலாக சில முடிவுகள் எடுப்பீர்கள். அதிகார பதவியில் இருப்பவர்களின் நட்பு கிடைக்கும். காணாமற்போன முக்கிய ஆவணங்கள் கிடைக்கும். வியாபாரத்தில் வேலையாள்களைத் தட்டிக்கொடுத்து வேலை வாங்குவீர்கள்.



**இடபம்:** எதிலும் அவசரப்பட வேண்டாம். நீண்ட நாள்களாக தள்ளிப் போன விடயங்கள் உடனே முடியும். வியாபாரத்தில் நெளிவு, சுளிவுகளை கற்றுக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் திருப்தி உண்டாகும்.



**மிதுனம்:** ஒரே நேரத்தில் இரண்டு, மூன்று வேலைகளை இழுத்துப்போட்டு பார்க்க வேண்டி வரும். தர்மசங்கடமான சூழ்நிலையில் அவ்வப்போது சிக்கித் தவிப்பீர்கள். மற்றவர்கள் விடயத்தில் அநாவசியமாகத் தலையிட வேண்டாம்.



**கடகம்:** வேலைச்சுமையால் பதற்றம் அதிகரிக்கும். அநாவசியச் செலவுகளைக் குறைக்கப்பாருங்கள். வெளிவட்டாரத்தில் அலைச்சல் அதிகரிக்கும். வியாபாரத்தில் போராடி இலாபம் ஈட்டுவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் மறைமுக நெருக்கடிகள் வந்து நீங்கும்.



**சிங்கம்:** எதிர்பார்ப்புகள் நிறைவேறும். உங்களால் வளர்ச்சியடைந்த சிலரை இப்பொழுது சந்திக்க நேரிடும். வேற்றுமதத்தவர் உதவுவார். வியாபாரத்தில் வேலையாள்கள் கடமையுணர்வுடன் செயற்படுவார்கள். உத்தியோகத்தில் புதிய பொறுப்புகள் தேடி வரும்.



**கன்னி:** கோபத்தைக் கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். பொதுக்காரியங்களில் ஈடுபடுவீர்கள். வியாபாரத்தில் புதிய ஒப்பந்தங்களால் இலாபம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள்.



**துலாம்:** வீண் குழப்பம் வந்து செல்லும். புதியவர்கள் நண்பர்களாவார்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். சோர்வு நீங்கி சுறுசுறுப்பாவீர்கள். வியாபாரத்தில் எதிர்பார்த்த இலாபம் வரும். உத்தியோகத்தில் அமைதி உண்டாகும்.



**விருச்சிகம்:** மற்றவர்களை நம்பி பெரிய முடிவுகள் எடுக்க வேண்டாம். நீங்கள் ஒன்று பேசப் போய் மற்றவர்கள் அதை வேறுவிதமாக புரிந்து கொள்வார்கள். செலவினங்கள் அதிகரிக்கும். உத்தியோகத்தில் அதிகாரிகளால் அலைக்கழிக்கப்படுவீர்கள்.



**தனுசு:** உங்களின் திறமையை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும். யோகா, தியானத்தில் மனம் லயிக்கும். வியாபாரத்தில் புதிய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். உத்தியோகத்தில் புதிய அதிகாரி உங்களை மதிப்பார்.



**மகரம்:** குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளைப் புரிந்து கொண்டு அதற்கேற்ப உங்களை மாற்றிக் கொள்வீர்கள். உங்களால் பயனடைந்தவர்கள் இப்போது உங்களுக்கு உதவி செய்வார்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளுக்கு நெருக்கமாவீர்கள்.



**கும்பம்:** புதிய முயற்சிகள் யாவும் வெற்றியடையும். ஆடம்பரச் செலவுகளைக் குறைத்து சேமிக்கத் தொடங்குவீர்கள். வேற்று மதத்தவர் உதவுவார். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள்.



**மீனம்:** எதிர்பார்த்தவைகளில் சில தள்ளிப் போனாலும் எதிர்பாராத ஒரு வேலை முடியும். பணப்பற்றாக்குறையைச் சமாளிப்பீர்கள். பயணங்களால் பயனடைவீர்கள். வியாபாரத்தில் அதிரடி மாற்றம் செய்து இலாபம் ஈட்டுவீர்கள். உத்தியோகத்தில் மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும்.

## நாளை

**மாசி-27 செவ்வாய்க்கிழமை | 11.03.2014**

திதி: தசமி பி.ப.02.52 வரை
நட்சத்திரம்: புநர்பூசம்
பி.இ.04.05 வரை

சுபநேரம்: 10.53-12.23 வரை
இராகுகாலம்:.03.23-04.53 வரை

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து...



### மெய்ப்பொருளும் மாயையும்

ஒரு பொருளை மற்றொன்றிலிருந்து பிரித்துக் காட்டுவன; காலம், இடம், காரண — காரியம் இம் மூன்றுமே.

வேறுபாடுகள் எல்லாம் புறவுருவிலேயே; அகக்கருவில் (Substance) அன்று. புற உருவை அழித்துவிடலாம்; அது ஒரேயடியாகவும் மறைந்துவிடும்; ஆனால் கரு எப்போதுமே நிலைத்திருக்கும். இந்தக் கருவை நீங்கள் ஒரு போதும் அழிக்க முடியாது. பரிணாமம் என்பது இயற்கையின் கூறு; ஆன்மாவினது அன்று. இயற்கையின் பரிணாமம்; ஆன்மாவின் தோற்றம்.

பொதுவாகக் கூறப்படுவது போல மாயை என்பது பொய்த் தோற்றம் அன்று. மாயை என்பது உண்மையானது. அதே சமயம் அது உண்மையற்றதும் ஆகும். மாயையின் பின்னால் மெய்ப் பொருள் உள்ளதனால் அதற்கு மெய்த் தோற்றத்தை அளிக்கிறது. மாயையில் எது உண்மையாக இருக்கிறதோ அது தான் மாயையை ஊடுருவி நிற்கும் மெய்ப் பொருள். இந்த மெய்ப் பொருளை நாம் ஒருபோதும் பார்க்க முடியாது. ஆகையால் எதை நாம் பார்க்கின்றோமோ, அது உண்மையற்றது. அதற்கு உண்மையான தனி வாழ்வு என்பது இல்லை. தனது வாழ்வுக்கு அது மெய்ப்பொருளையே சார்ந்திருக்கிறது.

ஆகவே மாயை என்பது முன்னுக்குப் பின் முரணான ஒரு பொருள். உண்மையானது; எனினும் உண்மையற்றது. ஒரு பொய்த் தோற்றம்; எனினும் பொய்த் தோற்றம் அல்லாத ஒன்று.

மெய்ப் பொருளை அறிந்தவன் மாயையில் பொய்த் தோற்றத்தைக் காண்பதில்லை; மெய்ப் பொருளையே காண்கிறான். ஆனால் மெய்ப் பொருளை அறியாதவன் மாயையின் பொய்த் தோற்றத்தையே காண்கிறான். அந்தப் பொய்த் தோற்றத்தை உண்மையென்றும் நம்பி விடுகிறான்.

# 101 வருடங்களுக்கு முந்தைய தபால் அட்டை கண்டெடுப்பு



கொன்ராட் பிஸ்ஷர் என்ற மீனவர் ஹெய்கென் டார்ப் என்ற வடக்கு ஜேர்மன் துறைமுகப் பகுதியில் கண்டெடுத்துள்ளார்.

101 வருடங்களுக்கு முன் கடலில் தூக்கி எறியப்பட்ட தபால் அட்டை ஒன்றை தற்போது மீனவர் ஒருவர் கண்டெடுத்துள்ளார்.

ஜேர்மனி நாட்டைச் சேர்ந்த ரிச்சர்ட் பிளாட்ஸ் என்பவர், 101 வருடங்களுக்கு முன் எழுதிய தபால் அட்டையே தற்போது மீனவர் ஒருவரால் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

கடந்த 1913 ஆம் ஆண்டு மே 17 ஆம் திகதி முதலாவது உலகப் போர் தொடங்குவதற்கு ஒரு வருடத்துக்கு முன்பு குறித்த தபால் அட்டை எழுதப்பட்டுள்ளது.

டென்மார்க்கில் இருந்து அனுப்பப்பட்ட அட்டையில் இரண்டு ஜேர்மனி நாட்டு முத்திரைகள் ஒட்டப்பட்டு உள்ளன. அதில் பெர்லின் நகரில் உள்ள எனது முகவரிக்கு இதனை கண்டெடுப்பவர் ஒப்படைத்து விடவும் என்று தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனை கொன்ராட் பிஸ்ஷர் என்ற மீனவர் ஹெய்கென் டார்ப் என்ற வடக்கு ஜேர்மன் துறைமுகப் பகுதியில் கண்டெடுத்துள்ளார்.

போத்தலில் காணப்பட்ட திகதியை பார்த்தவுடன் நான் ஆச்சரியத்தில் திகைத்துப் போனேன் என்று அந்த மீனவர் தெரிவித்துள்ளார்.

கடந்த 2012 ஆம் ஆண்டு 97 வருடங்களுக்கு முன்பு எழுதப்பட்ட கடிதம் அடங்கிய போத்தல் ஒன்று கண்டெடுக்கப்பட்டதே கின்னஸ் சாதனையில் இடம்பெற்ற ஒன்றாக இதுவரை இருந்து வருவது குறிப்பிடத்தக்கது.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 8 | | | 3 | | | 5 | 9 |
| | 3 | | | | 2 | | 8 | 6 |
| | 5 | 9 | 7 | | | 1 | | |
| 8 | | | | | | | 1 | |
| 9 | | 6 | | | | 3 | | 8 |
| | 4 | | | | | | | 2 |
| | | 8 | | | 9 | 4 | 3 | |
| 7 | 2 | | 3 | | | | 6 | |
| 3 | 9 | | | 7 | | | 2 | 1 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 1 | 6 | 4 | 2 | 7 | 9 | 8 | 5 |
| 4 | 8 | 7 | 5 | 9 | 6 | 1 | 2 | 3 |
| 5 | 2 | 9 | 3 | 8 | 1 | 6 | 4 | 7 |
| 6 | 3 | 8 | 7 | 5 | 9 | 2 | 1 | 4 |
| 7 | 9 | 4 | 8 | 1 | 2 | 3 | 5 | 6 |
| 2 | 5 | 1 | 6 | 3 | 4 | 7 | 9 | 8 |
| 1 | 7 | 5 | 2 | 4 | 3 | 8 | 6 | 9 |
| 8 | 6 | 2 | 9 | 7 | 5 | 4 | 3 | 1 |
| 9 | 4 | 3 | 1 | 6 | 8 | 5 | 7 | 2 |



அண்ட சராசரங்கள் அனைத்தையும் சேர்த்த இந்தப் பிரபஞ்சம் ஒரு முழுமையான பூரணமான தொகுதியாகும். இந்தப் பிரபஞ்சத்தின் அடிப்படைக் கூறாக கூறப்படும் அணுவும் முழுமையான நிலையாகும். பிரபஞ்சத்துக்கும் அணுவுக்கும் இடைப்பட்ட சிருஷ்டிகளும் அவற்றின் இணைந்த செயற்பாடுகளும் முழுமையை எய்துகின்றதாகக் காணப்படுகின்றது. அண்டத்திலுள்ளது பிண்டத்திலுமுள் எது என்பதன் கருத்து இதுவே. அனைத்தும் அதனதன் நிலையில் முழுமையான தொகுதியாக செயற்படும்படி சிருஷ்டிக்கப்பட் டுள்ளது. உபநிடத வாக்கியமாகிய "பூரணத்திலிருந்து தோன்றியதும் பூரணம், எஞ்சியதும் பூரணம்" என்ற கருத்து நிலை இந்த நிலையில் ஆழ்ந்து உணரப்பட வேண்டியது.

# பெண்மையுடன் ஒத்திசையும்போது

## ஆண்மை பூரணத்துவம் அடையும்

மருத்துவர்
இ.சிவசங்கர்

எதிர் முனைகள் இல்லாது முழுமை (பூரணம்) இல்லை. இது உளவியலாளர் கார்ல் யுங்கினுடைய கூற்றாகும். இதை மறுவளமாகப் பார்த்தால் முழுமை, பூரண நிலைக்கு எதிர்முனைகளின் , எதிரெதிர் அம்சங்களின் சேர்க்கை தேவைப்படுகின்றது. அண்ட சராசரங்கள் அனைத்தையும் சேர்த்த இந்தப் பிரபஞ்சம் ஒரு முழுமையான பூரணமான தொகுதியாகும். இந்தப் பிரபஞ்சத்தின் அடிப்படைக் கூறாகக் கூறப்படும் அணுவும் முழுமையான நிலையாகும். பிரபஞ்சத்துக்கும் அணுவுக்கும் இடைப்பட்ட சிருஷ்டிகளும் அவற்றின் இணைந்த செயற்பாடுகளும் முழுமையை எய்துகின்றதாக காணப்படுகின்றது. அண்டத்திலுள்ளது பிண்டத்திலுமுள்ளது என்பதன் கருத்து இதுவே. அனைத்தும் அதனதன் நிலையில் முழுமையான தொகுதியாக செயற்படும்படி சிருஷ்டிக்கப்பட் டுள்ளது. உபநிடத வாக்கியமாகிய "பூரணத்திலிருந்து தோன்றியதும் பூரணம், எஞ்சியதும் பூரணம்" என்ற கருத்து நிலை இந்த நிலையில் ஆழ்ந்து உணரப்பட வேண்டியது.

இரு முனைகளாகிய எதிரெதிர் தன்மைகள் சேர்ந்தமையும் முழுமை நிலை தொகுதியே தொடர்ச்சி, இயங்கு நிலை சுழற்சி என்ற தன்மையை பெறுகின்றது. உதாரணங்களாக பிறப்பு, இறப்பு எனும் எதிரெதிர் தன்மைகள் வாழ்க்கைச் சக்கரத்தையும் பகல், இரவு எனும் எதிரெதிர் தன்மைகள் நாள்களாகித் தொடர்கின்றது.

ஆக்கம் அழிப்பு என்பதையும் பார்த்தால் அழிப்பு என்பதாலேயே ஆக்கத்துக்கு இடம், சந்தர்ப்பம் கிடைக்கின்றது. இறப்பு நிகழ்ச்சியே புதிய பிறப்புக்கு வழி சமைக்கின்றது. வந்தவர் எல்லாம் இங்கு தங்கிவிட்டால் இந்த பூமியில் இடமேது என்ற கவிஞர் கண்ணதாசனின் சிந்தனை வரிகள் இறப்பின் முக்கியத்துவத்தை , தேவையை எமக்கு உணர்த்துகின்றது. எதிரெதிர் குணாம்சங்களையுடைய எதிர்முனைகளாலேயே சுழற்சி, தொடர்ச்சி சாத்தியமாகின்றது.

எதிரெதிர் அம்சங்களாக காணப்படும் குணாம்சங்கள் இரண்டுமே அர்த்தமுடையது, முக்கியத்துவமுடையது. இந்தத் தெளிவு ஆழ்ந்த புரிதலுக்கூடாகவே அடையப்படக் கூடியது. இதனடிப்படையில் எதிரெதிர் அம்சங்களாகக் காணப்படும் ஆண்மை, பெண்மை என்பவற்றைப் பார்ப்போம். ஆண்மை, பெண்மை என்பவற்றில் எதிரெதிர் குணாம்ச பண்புகள் வகைப்படுத்தப்பட்டுள்ளன. இந்தக் குணாம்சப் பண்புகளை ஒப்பு நோக்கினால் அவை ஒன்றுக்கொன்று மாற்றீடான ஒத்திசைந்து போகும் தன்மையுடனிருப்பதை கண்டு கொள்ளலாம். ஆண்மை, பெண்மை தன்மைகள் ஒரு தொகுதியாக ஒருங்கிசைந்து செயற்படும் பொழுது பூரணத் தன்மை வெளிப்படும் என்பதைக் கண்டு கொள்ளலாம். குடும்பம் எனும் தொகுதி முழுமையாக செயற்பட ஆண்மை, பெண்மை அம்சங்கள் இரண்டும் தவிர்க்க முடியாதவை. அத்துடன் ஆண்மை மீது பெண்மையும், பெண்மை மீது ஆண்மையும் கவரப்படும் இயற்கைத் தன்மையையும் நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். மேலும் ஆண்மை முழுமையடைவதற்கு பெண்மையும், பெண்மை முழுமை அடைவதற்கு ஆண்மையும் தவிர்க்க முடியாதவை.

இத்தகைய தெளிவுடன் ஆண்மை பெண்மை சார்ந்த சமூகத்தின் மதிப்பீடு எத்தன்மையது என்பதை உணர்தல் நன்மை பயக்கும். ஆண்மை பலம், சக்தி என்பதாகவா அன்றேல் முரட்டுத்தனம் என்பதாகவா குறிப்பிடப்படுகின்றது. அதே போன்று பெண்மை என்பதில் அன்பு, மென்மை, நளினம் என்பதை காண்கிறோமா பலவீனம் என்பதாக காண்கிறோமா ஆண்மை, பெண்மை என்பவற்றில் ஒன்றுக்கு நேர் மதிப்பீடும் மற்றதுக்கு எதிர் மதிப்பீடும் வைத்திருக்கும் மனப்பாங்கையே சமூகத்தில் காணக்கூடியதாக இருக்கின்றது. ஆனால் இரண்டு அம்சங்களும் அதனதன் பாங்கில் உயர்வானதே. மேலும் ஒரு தொகுதியாக தம்பதிகள், பெற்றோர்கள் என்பதாக செயற்படும் போது இரு அம்சங்களும் ஒன்றை ஒன்று நிறைவு செய்வதாக ஒன்றுக்கொன்று பலம் சேர்ப்பதைக் கண்டு கொள்ளலாம். இந்த அந்நியோன்னிய மாற்றீடான தன்மையை இனங்காணலே மனித உறவை செழுமைப்படுத்தும்.

ஆண்மை, பெண்மை தன்மைகளின் ஒருங்கிசைவு பயன்பாட்டை கட்டிளமைப் பருவ காலத்தில் புரிந்து கொள்ளல் அவரவர் ஆளுமை வளர்ச்சிக்கு உறுதுணை சேர்க்கும். தனது தன்மையையும் , எதிர்பால் தன்மையையும் மதிப்புடன் புரிந்து கொண்டு ஏற்றுக் கொள்ளுதல் என்பது இருபாலாருக்கும் நிறைவான வளர்ச்சியைக் கொடுக்கும்.

இதற்கு மாறாகவே தற்போதைய போதனையும் நடைமுறையும் அமைந்திருப்பதை பார்க்கக் கூடியதாக இருக்கின்றது. எதிர் பாலாரின் பண்புகள் மட்டந்தட்டுப்படல் , எள்ளி நகையாடப் படலாகவே தற்போதைய யதார்த்தம் இருக்கின்றது. கட்டிளமைப் பருவகாலத்து எதிர் பால் கவர்ச்சி உணர்வைத் தடுத்தலும், விலக்கி வைத்தலுக்குமான சமூக தந்திரோபாயத்தின் விளைவாக இது அமைகின்றது. சமூகத்தில் பெற்றோரின் இத்தகைய செயற்பாட்டின் காரணமாக கட்டிளமைப் பருவத்தினர் எதிர்பாலினரின் மீது தரக்குறைவான மதிப்பீட்டு மனோபாவத்தை வளர்த்துக் கொள்கின்றனர். இதன் பின் விளைவாக இவர்கள் குடும்ப வாழ்வினுள் புகும்போது தத்தமது வாழ்க்கைத் துணையை அவமதித்து வெறுப்புடன் செயற்படும் நிலைக்குத் தள்ளப்படுகின் றனர்.


அனைத்து சிருஷ்டியும் முழுமையானதே. எனவே எதிர் துருவ தன்மைகளை உள்ளார்ந்தும் கொண்டிருப்பவையாகவே சிருஷ்டிகள் அமைக்கப்பட்டுள்ளன. அதனடிப்படையில் மனித உயிரியும் அனைத்து வகையான எதிர் துருவ அம்சங்களை தன்னகத்தே கொண்டவையாகக் காணப்படுகின்றது.

உதாரணமாக உற்சாகம்- சோம்பல், வேகம்- நிதானம், செயற்பாடு-களைப்பு என்ற துருவ நிலைகளைக் குறிப்பிடலாம். ஏற்கெனவே குறிப்பிட்டபடி இவ் துருவ அம்சங்கள் மனிதனின் முழுமையான செயற்பாட்டுக்கு ஒத்திசைந்து வலுவூட்டுகின் றன. இத்துடன் சேர்த்து ஆண்மை பெண்மை எனும் துருவ நிலைகளும் ஒவ்வொரு ஆணிலும், பெண்ணிலும் உள் ளார்ந்து இருக்கின்றன. தம்மகத்தே காணப் படும் ஆண்மை பெண்மையாகிய இரு நிலைகளையும் ஒரு சேர மதிப்புடன் ஏற்றுக் கொள்ளும் மனப்பாங்கு சிறுவரிடம், கட்டிளமைப் பருவத்தினரிடம் ஏற்படுத்தப்பட வேண்டும். எதிர் பால் அம்சமாகக் கருதப்படும் அம்சங்களை தன்னகத்தே இருப்பதைக் கண்டுணரும் திறனை சிறு பராயத்திலேயே ஏற்படுத்தப்பட வேண்டும். எதிர் பால் அம்சங்களும் சேர்ந்தே எனது முழுமை பெற்ற அம்சம் ஆளுமை என்பதை ஒவ்வொரு ஆணும் பெண்ணும் கண்டறிந்து உணர வேண்டும். இதன் விளைவாக தன்னகத்தேயுள்ள இருபால் அம்சங்களையும் மதிப்புடன் ஏற்றுக் கொள்ளும் நிலை ஏற்படும். பின்னர் தத்தமக் குள்ளே இருக்கும் ஆண்மை பெண்மை அம்சங் களை ஒரு சேர வளர்த்தெடுத்தல் நிகழ வேண்டும். இதற்கு சமூகத்தின் ஊக்கத்தினூடான வழிகாட் டுதல் தேவைப்படும்.

மேலும் ஒரு விளக்கத்தை இதனுடன் பார்ப்போம். ஒவ்வொரு மனிதனின் மூளையையும் இடது மூளை, வலது மூளை எனப் பிரிக்கலாம். வலது , இடது மூளைகளின் செயற்பாடுகள் வெவ்வேறு பட்டதாக இரு துருவ தன்மையானதாக காணப் படுகின்றது. வலது மூளை பெண்மை தன்மை எனப்படுபவற்றையும், இடது மூளை ஆண்மை தன்மை எனப்படுபவற்றையும் தத்தமது செயற் பாட்டு குணாம்சமாக தொழிற்படுகின்றன. வலது, இடது மூளைகளின் செயற்பாடுகளை சரிசமமாக வளர்த்தெடுப்பதே முழுமையடைந்த ஆளு மைக்குத் தேவைப்படுவதாகக் கண்டறியப்படு கின் றது.


இந்த விடயத்தில் ஆர்வமூட்டும் விடயம் உள்ளது. ஒரு பக்க மூளையின் செல்வாக்கு அடுத்த பக்க உடம்பிலேயே காட்டப்படும். இது உடற்கூற்று நிலையாகும். இதன்படி வலது மூளை இடது உடலிலும், இடது மூளை வலது உடலிலும் செல்வாக்குச் செலுத்தும் ஆண் தன்மையான இடது பக்க மூளை செல்வாக்குச் செலுத்தும் வலது பக்க உடம்பு ஆண் தன்மையுடனும், பெண் தன்மையான வலது மூளை செல்வாக்குச் செலுத்தும் இடது பக்க உடம்பு பெண் தன்மையானதாகவும் காணப்ப டுகின்றது. சிவமூர்த்தத்தில் ஒன்றாகிய அர்த்த நாரீஸ்வரரின் சிவனின் இடப்பாக உமையாக பெண்மை தன்மையுடன் குறிப்பி டப்படுவதன் விஞ்ஞான நிலை இதுவாகும். இங்கே ஆணாகிய சிவன் பெண்ணாகிய உமைக்கு சம பாகம் வழங்குவதாகக் காணப்படுகின்றது. ஆண்மை பெண்மைக்கான சம முக்கியத்துவம் இங்கு உறுதி செய்யப்படுகின்றது.

சிவனின்றி சக்தி இல்லை, சக்தியின்றி சிவ னில்லை என்ற கூற்றின் பொருள் அறிவோ மாக. வாழ்க்கை துணை தம்பதிகளாக, பெற் றோர்களாக செயற்படும் போது ஆண்மை, பெண்மைத் தன்மைகள் ஒன்றுக்கொன்று மாற்றீடாக செயற்பட்டு பக்க பலமாக உறு துணை யாக இருக்கும் என்பதை உணர்ந்து கொள் வோம். ஆண்மை (ஆண்), பெண்மை (பெண்) ஒத்திசைவில் இயங்கும் பொழுது ஆத்ம சங் கமம் நிகழ்ந்து ஐக்கியம் ஏற்படுகின்றது.



யாழ். மாவட்ட படைகளின் கட்டளைத் தலைமையகத்தின் ஏற்பாட்டில் நேற்று முற்பகல் 10.30 மணியளவில் சர்வதேச மகளிர் தின நிகழ்வு உரும்பிராய் சந்திரோதய வித்தியாலயத்தில் பெண்கள் இராணுவ படையணியின் மேஜர் சந்திரிகா இராஜகுர தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் காங்கேசன்துறை பொலிஸ் பிரிவு, பெண்கள் சிறுவர் பிரிவு பொறுப்பதிகாரி, உப பொலிஸ் பரிசோதகர் எஸ். சிந்து பாமினி, தெல்லிப்பழை பொலிஸ் நிலைய உப பொலிஸ் பரிசோதகர் எஸ். நிதர்சன் ஆகியோர் பெண்கள், சிறுவர்களின் மீதான வன்முறைகள், பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பான கருத்துரைகளை வழங்கினர். (வ-86)

# வடக்கில் கல்வியை ஊக்குவிக்க பிரிட்டன் வாழ் தமிழர்கள் உதவி



நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், வடமாகாண விவசாய அமைச்சர் பொ. ஐங்கரநேசன் ஆகியோர் மாணவர்களுக்கு கணினிகளை வழங்கினர்.

யாழ்ப்பாணம், மார்ச் 10

பிரிட்டன்வாழ் புலம்பெயர் தமிழ் உறவுகள் இருவர் இணைந்து வடக்கில் கல்வியை ஊக்கு விக்கும் முகமாக வட்டுக் கோட்டை இந்து வாலிபர் சங்கத்துக்கு தலா 72 ஆயிரம் ரூபா பெறுமதியான 3 கணினி களை வழங்கியுள்ளனர்.

அந்தக் கணினிகள் வட்டு இந்து வாலிபர் சங்கத்தினரால் நேற்று ஞாயிற்றுக்கிழமை உதயன் பணிமனையில் இடம்பெற்ற நிகழ்வில் யாழ். பல்கலைக் கழக கலைப்பீடத்தைச் சேர்ந்த முல் லைத்தீவு இனிய வாழ் இல்லத் தின் மாணவர்களான வி.சுசிலா, ந.சிவயோகன் ஆகியோருக் கும்-மருத்துவபீடத்தைச் சேர்ந்த பகிரனுக்கும் வழங்கப்பட்டன. அவர்களுக்கான கணினி களை நாடாளுமன்ற உறுப் பினர் ஈ.சரவணபவன், வட மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் ஆகியோர் வழங்கினர்.

பிரிட்டன்வாழ் புலம்பெயர் தமிழ் உறவுகளான முத்துக் குமாரசுவாமி மற்றும் வயனி ஆகிய இருவரும் இணைந்தே வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்துக்கு கணினிகளை வழங்கியுள்ளனர். (வ-10-21)

## மரண அறிவித்தல்

### திருமதி பொன்னம்மா செல்லையா



கரவெட்டி கிழக்கைப் பிறப்பிடமாகவும், வெள்ளாம் போக்கட்டி, கொடிகாமத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னம்மா (பாக்கியம்) செல்லையா (குழந்தை) 07.03.2014 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற வர்களான சிதம்பரப்பிள்ளை -இலட்சுமி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென் றவர்களான வேலுப்பிள்ளை- பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற வர்களான சின்னையா, பத்தினி, சின்னம்மா, இராசம்மா மற்றும் அன்னப்பிள்ளை (ஓய்வு பெற்ற தாதிய உத்தியோகத்தர்-யாழ் போதனா வைத்தியசாலை) ஆகியோரின் அன்புச் சகோதரியும் பாலசுப்பிரமணியம் (சிங்கம்-லண்டன்), சரஸ்வதி, தங்கராணி (குஞ்சு), பரமேஸ்வரி (வவுனியா), பாலேந்திரநாதன் (இந்திரன்-கனடா), காலஞ்சென்ற பாலகுமார் (ஆனந்தன்) மற்றும் பாலகிருஷ்ணானந்தம் (இராசன்-லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயும், தேவநாயகி (தேவி- லண்டன்), கிருஷ்ணானந்தம் (குட்டி), காலஞ்சென்ற கனகரத்தினம் மற்றும் சிவகுமார் (வவுனியா), வசுமதி (கனடா), புகழேந்தி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியும், சர்மினி, டயானி (லண்டன்), பிருந்தாபன், கமலாசினி- அன்னலிங்கம் (சிவா), விமலாசினி (பிரதேச சபை புதுக்குடியிருப்பு)-கஜேந்திரன், வெண்மதியன், ஜேசிசா (வவுனியா), தீபிகா, நர்மிதா, இந்துஜா (கனடா), யதுகுலன், மதுமிலன், மிதுஜலன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், யாழினியனின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.03.2014) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, மு.ப. 11.00 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கச்சாய் எறியால்பிட்டி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அல்லாரை வடக்கு,
கொடிகாமம்.
தொடர்பு : 077 136 1715

(29782)(7.6.3)

தகவல் :
குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

### அமரர் கார்த்திகேசு யோகேஸ்வரன் (நாதன்)

(பசுஞ்சோலை அரைக்கும் ஆலை உரிமையாளர்- கனகபுரம் வீதி, கிளிநொச்சி)



மலர்வு 10.10.1964 — உதிர்வு 08.02.2014

கடந்த 08.02.2014 அமரத்துவமடைந்த எமது குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்தியம் இன்று (10.03.2014) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அன்னாரின் மறைவின்போது எம்முடன் இருந்து எமது துயரில் பங்குகொண்டு சகல வழிகளிலும் எம்மை ஆற்றுப்படுத்திய அனைவரையும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு தாழ்மையுடன் வேண்டுகின்றோம்)

இல.454, திருநகர்,
கிளிநொச்சி.

(43401)(45.3.6)

குடும்பத்தினர்.
077 375 2930

## பொதுக் கூட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 10

வட பிராந்திய சிகை ஒப்பனையாளர் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகிகள் தெரிவும் இன்று திங்கட் கிழமை காலை 9.30 மணிக்கு சுன்னாகம் வர்த்தக சங்க மேல் மாடியில் சங்கத் தலைவர் பகீரதன் தலைமையில் நடைபெறும். (வ)

## விபத்தில் இருவர் காயம்

அளவெட்டி, மார்ச் 10

மல்லாகம் பழம்பிள்ளையார் கோயிலுக்குச் சமீபமாக கே.கே.எஸ்.வீதியில் நடந்த சைக்கிள் - மோட்டார் சைக்கிள் விபத்தில் சைக்கிளில் பயணித்தவர் காயமடைந்தார்.

அளவெட்டி கிழக்கு அலுக்கையைச் சேர்ந்த இராசையா தவராசா (வயது-52) என்பவரே காயமடைந்தவர் ஆவார். அவர் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

இதேவேளை மற்றொரு மோட்டார் சைக்கிள் விபத்தில் காயமடைந்த சபாபதி முகாம் பகுதியைச் சேர்ந்த ஏ.இரஞ்சித்குமார் (வயது-30) தலையில் காயத்துடன் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார். (ஒ-36)

## மரண அறிவித்தல்

### அ.ஸ்ரனிஸ்லோஸ் (அச்சா)

(இளைப்பாறிய உப அஞ்சல் அதிபர்- முள்ளியான், சமாதான நீதிவான்)



கட்டைக்காடு முள்ளியானைப் பிறப்பிடமாகவும் தாழையடியினை வசிப்பிடமாகவும் கொண்ட அ.ஸ்ரனிஸ்லோஸ் (அச்சா) 09.03.2014 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செபமாலை அம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற மோகன்ராஜ் மற்றும் டயனா (France) ஆகியோரின் பாசமிகு தந்தையும், றிச்மன்ட் (France)இன் மாமனாரும், நிஷானின் (France)பேரனும், காலஞ்சென்ற கொன்ஸ்ரன்ரைன், கொலஸ்ரிக்கா ஆகியோரின் சகோதரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (10.03.2014) திங்கட்கிழமை நல்லடக்க ஆராதனைக்காக தாழையடியிலுள்ள அவரது இல்லத்திலிருந்து புனித அந்தோனியார் ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு பி.ப.2 மணிக்கு இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் தாழையடி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தாழையடி.

(45625)(7.6.3)

தகவல் :
றிச்மன்ட் டயனா
(மகள்)

## பிற்போடப்பட்டுள்ளது



13.03.2014 வியாழக்கிழமை நடைபெறவிருந்த காலஞ்சென்ற
பொன்னம்பலம் மகேஸ்வரனின்
31 ஆம் நாள் நினைவு நிகழ்வுகள் தவிர்க்க முடியாத காரணத்தால்
பிற்போடப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.


16/16, விதானையார் வீதி,
ஈச்சமோட்டை.

(45623) (3.6.4)

தகவல்: ம.சசிகரன் (மகன்)
(HNB மானிப்பாய் கிளை முகாமையாளர்)

## 6 ஆம் மாத நினைவஞ்சலி

### சின்னப்பொடியன் வீரசிங்கம்



(ஓய்வுபெற்ற கிராம அலுவலர்)

எந்தையே! அன்புத் தந்தையே! அப்பா!
ஆறான மாதங்களின்
ஆறா மனத்தினூடே
நினைவுகளை
நிழல்களாய்
நெஞ்சிருத்தி நெட்டுருக
வணங்குகின்றோம்-
நிந்தனது பாதங்களை
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

குடும்பத்தினர்.
(மனைவி, பிள்ளைகள், மருமக்கள்)
பிரதான வீதி, கண்டாவளை.

(43550)(3.6.4)

# போதைப் பொருளுக்கான மத்திய நிலையம் இலங்கை


## எதிர்க்கட்சித் தலைவர் குற்றச்சாட்டு

கொழும்பு,மார்ச் 10
இலங்கை ஆசியாவின் ஹெரோயின் போதைப் பொருளுக்கான மத்திய நிலையமாக மாறியுள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க குற்றஞ்சாட்டியுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையை ஆசியாவின் அதிசயமாக மாற்றப் போவதாக கூறி ராஜபக்ஷ அரசு நாட்டை ஆசியாவின் போதைப் பொருள் மத்திய நிலையமாக மாற்றியுள்ளது.

36 கோடி பெறுமதியான ஹெரோயின் போதைப் பொருள் அடங்கிய கொள்கலன் நேற்றுமுன் தினமும் பிடிப்பட்டது. ஆனால்



ரணில் விக்கிரமசிங்க

அது எப்போது மாயமாகும் என்பது தெரியாது.

ஏற்கெனவே கண்டுப்பிடிக்கப்பட்ட ஹெரோயின் கொள்கலன் காணாமற்போயுள்ளது. ராஜபக்ஷ அரசின் காலத்திலேயே ஹெரோயின் காணாமற்போகிறது. இது ஆச்சரியமான நிலைமை.

இலங்கைக்கு போதைப் பொருள் கடத்தி வரப்படுவது தொடர்பில் நாங்கள் நாடாளுமன்றத்தில் விவாதம் ஒன்றை கோரினோம். ஆனால் அரசு அதனை தொடர்ந்தும் புறக்கணித்து வந்தது.

ஏன் அப்படி நடந்து கொண்டது என்பது தற்போது தெளிவாகியுள்ளது. போதைப் பொருள் கடத்தலுடன் அவர்கள் சம்பந்தப்படவில்லை என்றால் ஏன் அரசு அஞ்ச வேண்டும்.

வெள்ளையர்களின் ஆட்சிக் காலத்திலும் போதைப் பொருள் விற்பனை தடுக்கப்பட்டது.

அதற்கு பின்னர் வந்த ஐக்கிய தேசியக் கட்சியும் போதைப் பொருளை தடுத்து நிறுத்தியது.

சந்திரிகாவின் ஆட்சிக்காலத்திலும் போதைப் பொருள் கடத்தப்படுவது தடுத்து நிறுத்தப்பட்டது. அப்படியானால் ஏன் ராஜபக்ஷ அரசால் அதனை தடுக்க முடியாது.

உலகில் போதைப் பொருள் விற்பனை மூலமாக 80 பில்லியன் டொலர்கள் சம்பாதிக்கப்படுகிறது. இதில் ஒரு பில்லியன் பணத்தையாவது தாம் பெற வேண்டும் என்று அரசு எண்ணுகிறது. இதன் காரணமாக போதைப் பொருள் கடத்தலை தடுக்க நடவடிக்கை எடுப்பதில்லை-என்றார். (ச)

## கொஞ்சக் கதைகள் கொஞ்சம்........

செல்வ வேலாயுதம்

### ஏறுமுகத்தில் அரிசி விலை

கிரிக்கெட் விளையாட்டு ஆடுகளத்தில் "ஸ்கோர் போர்ட்" என்று ஒன்றிருக்கும். ஓட்டங்கள் பெறப்படும் போது எண்ணிக்கை அதிகரிப்புக்கு ஏற்றாற்போல் இலக்கத்தகடுகளை மாற்றிக் கொண்டிருப்பார்கள். அந்த நிலை கடைகளிலுள்ள அரிசி மூடைகளுக்கு ஏற்பட்டுள்ளது. "பெரும்போக விளைச்சலில் 92 ஆயிரம் மெ.தொன் நெல் இழப்பு - குளங்கள் வற்றியமையால் சிறுபோக நெற்செய்கை நிறுத்தப்படும் அபாயம்- கிளிநொச்சி மாவட்டத்தில் 40 வீத நெற் பயிர்கள் அழிவு- கடும் வெய்யிலால் வவுனியாவில் நெற் செய்கை அழிவு- யாழில் 50 வீதப் பயிர் அழிவினால் 20 வீத விளைச்சலே கிடைக்கும்" என்றவாறான செய்திகள் அடுத்தடுத்து வெளிவர அரிசியின் விலை ஏறுமுகமாகியுள்ளது.

வைக்கோலுக்கு தவிட்டுக்கு விதை நெல்லுக்குத் தட்டுப்பாடு. அரிசி ஆலைகள் மௌனிக்கும் நிலை. தொழிலாளர்கள் வேலை இழக்கும் அபாயம். "எந்தரக அரிசியானாலும் கொள்வனவு செய்யப்படும்" எனப் பத்திரிகையில் விளம்பரம் செய்யும் கையறு நிலையில் அரிசி ஆலைகள். வழமையைப் போல் அறுவடையில் பின்னர் எள், பயறு போன்றவற்றை விதைக்க இம்முறை மண்ணில் ஈரமும் இல்லை. உணவகங்கள் மற்றும் வியாபார நோக்கில் அரிசிமாவிலான பண்டங்களைத் தயாரிப்போரும் நாளைய பொழுதை நாளை பார்ப்போம் என்ற நிலையில். நெல் விளைச்சலின்மையின் பாதிப்பு எம் அனைவரிலும் எதிரொலிக்கப்போகிறது. கோதுமையைக் குறைத்து ஏனைய சிறுதானிய வகைகளை உணவுத் தேவைக்குச் சேர்த்துக் கொள்வது எமது குடும்ப பொருளாதாரத்துக்கு உதவும்.

பருவ மழையை நம்பி விவசாயிகள் வரம்பை உயர்த்தி வைத்திருந்தும் நீர் உயரவில்லை. அதனால் நெல்லும் உயரவில்லை. ஆனால் 'குடி' மட்டும் உயர்ந்திருக்கிறது. அது ஔவை சொன்ன குடியல்ல என்பதை வீதி ஓரங்கள், வெறும் வளவுகள், வெளிகள், பற்றைகளில் வீசப்பட்டிருக்கும் இலகுவாக மறைத்துக் கொண்டு வரப்பட்டு வெறுமையாகிய சப்பட்டைப் போத்தல்களைக் காண்பவருக்கும் புரியும். இந்தக் 'குடி' உயர்ந்தால் சமூக அமைதியின்மைதான் உயரும்.

## கஞ்சாவுடன் வன பாதுகாப்பு அதிகாரி கைது

கொழும்பு,மார்ச் 10
100 கிலோ கிராம் கஞ்சா போதைப் பொருளுடன் வன ஜீவராசிகள் திணைக்களத்தின் வன பாதுகாப்பு அதிகாரி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கதிர்காமம் - புத்தல வீதியின் கல்கே என்ற பிரதேசத்தில் வீதி சோதனையில் ஈடுபட்டிருந்த விசேட அதிரடிப்படையினர் கஞ்சாவை கடத்திச் சென்ற குறித்த அதிகாரியையும் மற்றுமொரு நபரையும் கைது செய்துள்ளனர்.

சந்தேக நபர்களிடம் இருந்து 105.85 கிலோ கிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது. காலி பிரதேசத்தைச் சேர்ந்த இந்த சந்தேக நபர்கள் திஸ்ஸமஹாராம நீதிமன்றத்தில் முன் னிலைப் படுத்தப்படவுள்ளனர். (ச)

## மாகாண சபை தேர்தல்களை குறி வைத்து கட்டடங்களை திறந்து வைக்கிறார் மஹிந்த

கொழும்பு,மார்ச் 10
மேல் மற்றும் தென் மாகாண சபைத் தேர்தல்கள் நடைபெறவுள்ள நிலையில், ஜனாதிபதி புதிய வீதிகளையும், கட்டடங்களையும் குறித்த மாகாணங்களில் திறந்து வைத்து வருகிறார்.

அதன்பிரகாரம் நுகேகொட பிரதேசத்தின் தெல்கந்த பகுதியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சந்தையை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று ஞாயிற்றுக் கிழமை திறந்து வைத்துள் ளார்.

சந்தையை திறந்து வைத்த ஜனாதிபதி, அங்கு நிர்மாணிக்கப்பட்ட வைபவங்களை நடத்தும் மண்டபம் ஒன்றையும் திறந்து வைத்தார்.

அதனையடுத்து சந்தையில் வர்த்தகத்தில் ஈடுபட்டுவர்களிடம் ஜனாதிபதி கலந்துரையாடினார். இந்த வைபவத்தில் அமைச்சர்கள் பௌசி, சுசில்



நுகேகொட பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்ட சந்தைக் கட்டடத்தைத் திறந்து வைத்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வர்த்தகர்களுடன் உரையாடினார்.

பிரேமஜயந்த, தினேஷ் குணவர்தன, பந்துல குணவர்தன உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

மேல் மற்றும் தென் மாகாண சபைத் தேர்தல்கள் நடத்தப்படவுள்ள நிலையில், ஜனாதிபதி புதிய வீதிகளையும், கட்டடங்களையும் இந்த மாகாணங்களில் திறந்து வைத்து வருகிறார். இவற்றின் நிர்மாணப் பணிகள் முடிவடைந்து பல மாதங்கள் கடந்த போதிலும் தேர்தலை குறிவைத்து அரசு திறப்பு விழாக்களை நடத்தி வருகிறார் என்று அரசியல் விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர். (ச)

## சங்கானைக்கு நிரந்தர ஆயுள்வேத வைத்தியர்

சங்கானைப் பிரதேச சபை உப அலுவலகத் தொகுதியில் ஆயுள்வேத வைத்தியர் கமலமூர்த்தி சோபனா கடந்த முதலாம் திகதி முதல் நிரந்தர நியமனம் பெற்று கடமையாற்றுகின்றார்.

இதுவரை காலமும் வட்டுக்கோட்டை பிரதேச சபை உப அலுவலகத்திலும், சங்கானை பிரதேச சபை உப அலுவலகத்திலும் முறையே வாரத்தில் மூன்று நாள் என்ற ரீதியில் அவர் கடமையாற்றி வந்தார்.

ஆனால் பொதுமக்களின் வேண்டுகோளுக்கு இணங்க தற்போது திங்கள் முதல் வெள்ளி வரை காலை 8.30 மணி முதல் மாலை 4.30 மணி வரையும் சனிக்கிழமை காலை 8.30 மணி முதல் பிற்பகல் 12.30 மணி வரையும் இந்த நிலையத்தில் வைத்திய சிகிச்சை பெற்றுக் கொள்ள முடியும். (ஒ-29)

## இலங்கை அரசு மீது சுயாதீன விசாரணையைக் கோரி பிரிட்டன் தமிழர் பேரவை எம்.பிக்களுடன் தொடர் சந்திப்பு

இலங்கை அரசின் மீது சர்வதேச சுயாதீன விசாரணை ஒன்றை வலியுறுத்தி பிரிட்டன் தமிழர் பேரவை அனைத்து மட்டங்களிலும் இராஜதந்திர நகர்வுகளை முன்னெடுத்து வருகின்றது. பிரிட்டனின் அரசியல் கட்சி களின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அதிகாரிகளுடனும் பேச்சுக்கள் இடம்பெறுகின்றன. "சிறுபான்மை தமிழர்களுக்கு குரல் கொடுக்கும் வகையில் பிரிட்டன் அரசு இலங்கை அரசுக்கு எதிராக மேற்கொள்ளும் அனைத்து செயற்பாடுகளுக்கும் தாம் 100 வீதம் ஆதரவளிப்பதாக தொழிற் கட்சியின் எட்மன்டன் பிரதேச நாடாளுமன்ற உறுப்பினர் அன்டி-லவ் பிரிட்டன் பேரவைக்கு உறுதியளித்துள்ளார். இலங்கைத் தமிழர்கள் தொடர்பில் பிரிட்டன் பெரிதும் அக்கறை கொண்டுள்ளதாக குறிப்பிட்ட அவர் ஐ. நா. மனித உரிமைப் பேரவைக் கூட்டத் தொடரில் சர்வதேச சுயாதீன விசாரணைப் பொறிமுறை ஒன்றை வலியுறுத்தும் வகையிலேயே பிரிட்டன் நகர்வுகளை முன்னெடுத்துச் செல்ல திட்டமிடப்



பிரிட்டன் தமிழர் பேரவையினர் அந்நாட்டு எம்.பிக்களைச் சந்தித்த போது.

பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார். இலங்கையில் தமிழின அழிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் மனிதாபிமானத்துக்கு எதிரான செயற்பாடுகள் தமிழர்களுக்கு எதிராக இடம்பெறுவதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

**ஈஸ்ட்ஹாம் தொகுதிக்கான தொழில் கட்சியைச் நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீபன் ரிம்ஸை**

பிரிட்டன் தமிழர் பேரவை உறுபினர்கள் சிலர் இன்று சந்தித்தனர். இந்தச் சந்திப்பின் போது தான் பிரிட்டன் ஆளும் கட்சியுடன் இணைந்து தாம் சர்வதேச சுயாதீன விசாரணைப் பொறி முறை ஒன்றின் அவசியத்தை வலியுறுத்துவதாக உறுதி அளித்துள்ளார்.

**ரொதஹம் பிரதேசத்தின் தொழிற்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சேரா-சம்பியன்**

"தாம் தமிழர்களுக்கு நியாயம் கிடைக்கும் வகையில் பிரிட்டன் தமிழர் பேரவைக்கு ஆதரவு தருவதாக உறுதியளித்துள்ளதுடன் சுயாதீன விசாரணைப் பொறிமுறை ஒன்றின் முக்கியத்துவம் குறித்து தாம் பிரிட்டன் அரசுடன் இணைந்து தமது குரலை எப்பொழுதும் கொடுப்பதாகக் குறிப்பிடார்.

**ஹைவிகம் பிரதேசத்தின் நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீவ்-வேகர்**

"பிரிட்டன் இலங்கை விடயம் குறித்து தெளிவான ஒரு தீர்மானத்தையே கொண்டுள்ளதாகவும் அது ஓர் சுயாதீன சர்வதேச விசாரணைப் பொறிமுறையின் தேவை குறித்தே வலியுறுத்துவதாகவும் குறிப்பிட்டதுடன் பிரிட்டன் தமிழர் பேரவையின் சார்பாக பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூனை இந்த விடயம் குறித்து அணுக. உள்ளதாகவும் உறுதியளித்தார்.

**செப்பீல்ட் தொழில் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் போல்-வுலொம்பீல்ட்**

"தமிழர்கள் விடயம் தொடர்பில் தாம் கரிசனை கொண்டுள்ளதை குறிப்பிட் டதுடன் இலங்கையின் விடயத்தில் சுயாதீன சர்வதேச விசாரணைப் பொறி முறை ஒன்றின் அவசியம் குறித்து நகல் வரைவில் எவையும் தெளிவாக குறிப்பிடப் பட்டிருக்காமை தமக்கு பெரும் அதிர்ச்சியளிப்பதாகவும் இது குறித்து பிரதமர் டேவிட் கமரூன் மற்றும் பிரிட்டன் வெளிவிவகார அமைச்சர் ஆகியோருடன் பேச உள்ளதாகவும் அறிவித்துள்ளார்.


## சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம்



கிளிநொச்சி நகரைச் சொந்த இடமாகக் கொண்டவரும், கரைச்சி பிரதேச சபையின் முன்னாள் ஆயுள்வேத வைத்தியருமான திருமதி அமிர்தகௌரி திருலோகமூர்த்தி சமாதான நீதிவானாக கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் மாவட்ட நீதிவான் எம். ஐ. வஹாப்தீன் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். பி. ஏ. பட்டதாரியான இவர் கடந்த பல வருடங்களாக உருத்திரபுரம், முரசுமோட்டை, வட்டக்கச்சி, ஸ்கந்தபுரம் முதலான இடங்களில் உள்ள இலவச சித்த ஆயுள்வேத வைத்தியசாலைகளில் பொறுப்பு வைத்தியராகக் கடமையாற்றியுள்ளதுடன் போர்க் காலத்தில் பொதுமக்களுக்கான வைத்திய சேவைகளை சிறப்பான முறையில் மேற்கொண்டவர். அத்துடன் சிறப்பான சேவைக்கான வைத்தியமாமணி விருதையும் பெற்றுக் கொண்டார். சாவகச்சேரி தனங்களப்பை பிறப்பிடமாகக் கொண்ட இவர் முன்னாள் அதிபர் அமரர் ச. கந்தையாவின் புதல்வியுமாவார். (ந)

## உண்டியல் உடைக்க முயற்சி

மட்டக்களப்பு,மார்ச் 10
மட்டக்களப்பு,காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாவற் குடாவில் பிரதான வீதியில் உள்ள பிள்ளையார் ஆலயத்தின் உண்டியலை உடைத்து திருட முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.
மட்டக்களப்பு-கல்முனை பிரதான வீதியில் உள்ள நாவற்குடா கத்தாவடி பிள்ளையார் ஆலயத்திலேயே வெள்ளிக்கிழமை அதிகாலை இந்த உண்டியல் உடைப்பு சம்பவம் நடைபெற்றுள்ளது.



ஹற்றன் ,டிக்கோயா நகரசபை பகுதிக்கு உட்பட்ட அட்டன் சமனலகம பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை ஏற்பட்ட மண்சரிவால் இரண்டு வீடுகள் சேதமடைந்துள்ளன. (ச)

## கப்பம் பெற முயன்ற குழு மாட்டியது

கொழும்பு,மார்ச் 10
விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் எனக் கூறி வெள்ளவத்தையில் ஆயுள்வேத மருத்துவ நிலையம் ஒன்றை நடத்தி வரும் மருத்துவரிடம் கப்பம் பெற முயற்சித்த குழுவினர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.
கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் அவர்களைக் கைது செய்துள்ளனர்.
சந்தேக நபர்கள் தாம் விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்தவர்கள் எனக் கூறி மருத்துவரை அச்சுறுத்தியுள்ளனர்.
மருத்துவரை அச்சுறுத்தி 10 லட்சம் ரூபாவை கப்பமாக பெற முயற்சித்த குழுவைச் சேர்ந்த 3 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.
கைது செய்யப்பட்டவர்களில் இருவர் மொறட்டுவ பிரதேசத்தை சேர்ந்தவர்கள். மற்றைய நபர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர் என்று பொலிஸார் கூறினர். (ச)

# அனல் மின் நிலையத்தின் மூலமாகவே மின் உற்பத்தி

### மழைவீழ்ச்சி இன்மையே காரணம் என்கிறது மின்சாரசபை

> உயர்ந்து செல்லும் மக்களின் மின் பாவனைக்குத் தேவையான மின் சாரத்தை அதிக பட்ச ரீதியில் நிறைவு செய்வதற்கு மின்சாரசபை செயற்படும்.

கொழும்பு,மார்ச் 10
மழை வீழ்ச்சி இல்லாததால் மக்களின் மின்சாரக் கோரிக்கையின் பெரும்பகுதி அனல் மின் நிலையத்தின் மூலமாகவே நிறைவு செய்யப்படுகிறது என்று இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.
மார்ச் மாதத்தின் ஆரம்பத்திலிருந்து தேசிய மின் தொகுதியிலிருந்து நூற்றுக்கு79.5 வீதமான மின்சாரமும் மிகுதி டீசல் மின் உற்பத்தி நிலையங்கள் மற்றும் நுரைச்சோலை அனல் மின் உற்பத்தி நிலையம் மூலமாகவே உற்பத்தி செய்யப்படுகின்றன என்று மின்சார சபையின் மேலதிக பொது முகாமையாளர் சேனஜித் தஸநாயக்க தெரிவித்தார்.
நாட்டில் நிலவும் அதிகரித்த உஷ்ண நிலையால் குளிரூட்டி சாதனங்கள், மின்விசிறிகளை மக்கள் அதிகளவில் பயன்படுத்தி வருவதோடு, குளிரூட்டப்பட்ட உணவுப் பானங்கள் பயன்படுத்தப்படுவதனால் மக்கள் குளிர்சாதனப் பெட்டிகளைப் பயன்படுத்துவதையும் பழக்கப்படுத்திக் கொண்டுள்ளனர்.
அதனால் உயர்ந்து செல்லும் மக்களின் மின்பாவனைக்குத் தேவையான மின்சாரத்தை அதிக பட்ச ரீதியில் நிறைவு செய்வதற்கு மின்சாரசபை செயற்படும் என்று அவர் தெரிவித்தார். (ச-22)



பஸில் ராஜபக்ஷ

## திருமலைக்கு நாளை செல்கிறார் அமைச்சர் பஸில்

கொழும்பு,மார்ச் 10
பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, நாளை செவ்வாய்க்கிழமை திருகோணமலைக்கு சென்று பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை மக்களிடம் கையளிக்கவுள்ளார்.
மக்கள் பங்களிப்பு மூலம் நிலைபேறான அபிவிருத்தி எனும் தொனிப் பொருளின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பொதுக் கூட்டம் நாளை திருகோணமலை சிங்கள மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது. அதில் கலந்து கொள்வதற்காகவே பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ திருகோணமலைக்குச் செல்லவுள்ளார். (ச)

## பாகிஸ்தானியர் குறித்து விசாரணை நடத்துங்கள்

### அரசிடம் வேண்டுகோள்

கொழும்பு,மார்ச் 10
நீண்டகாலமாக இலங்கையில் தங்கியிருக்கும் பாகிஸ்தான் நபர்கள் குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று புலனாய்வுப் பிரிவினர் அரசுக்கு அறிவித்துள்ளனர்.
நீண்டகாலமாக இலங்கையில் தங்கியிருக்கும் பாகிஸ்தான் நபர்கள், நாட்டுக்குள் போதைப் பொருளைக் கடத்தி வந்து விநியோகித்து வரும் நிலையில், இந்த கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.
ஒருகொடவத்தையில் உள்ள சுங்கத்திணைக்களத்தில் கொள்கலன் பரிசோதனைப் பிரிவில் கடந்த 6 ஆம் திகதி 270 மில்லியன் பெறுமதியான ஹெரோயின் மீட்கப்பட்டது. இதனை இலங்கைக்கு கடத்தி வந்தவர் பாகிஸ்தானியர். அவர் நீண்ட காலமாக இலங்கையில் தங்கியிருப்பவர் என்றும் தெரிய வந்துள்ளது.
பாகிஸ்தானில் இருந்து இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட ஹெரோயின் மறைத்து வைக்கப்பட்டிருந்த இரண்டு பெட்டிகளை சுங்க திணைக்களத்தில் இருந்து விடுவிப்பதற்காக குறித்த பாகிஸ்தான் நபர் கடவுச்சீட்டை சமர்ப்பித்திருந்ததுடன் அது 2010 ஆம் ஆண்டுடன் முடிவடைந்த செல்லுபடியற்ற கடவுச்சீட்டு என்று தெரியவந்துள்ளது.
கொழும்பில் தங்கியுள்ள பாகிஸ்தானியர்கள் சட்டவிரோதமாக வர்த்தகங்களில் ஈடுபடுகின்றனர் என்று அதிகாரிகள் கண்டறிந்துள்ளனர். (ச)

## மதுவரித் திணைக்களத்துக்கு சுமார் ரூ.9 கோடி வருமானம்

கொழும்பு,மார்ச் 10
மதுவரித் திணைக்களத்தினால் கடந்த ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்புக்கள் மூலம் திணைக்களத்துக்கு வருமானமாக சுமார் 9 கோடி 77 லட்சம் ரூபா கிடைத்துள்ளது என்று மதுவரித் திணைக்கள குற்றப் பிரிவு தலைமையகத்தின் பொறுப்பதிகாரி டபிள்யூ. எம். விஜேசிங்க தெரிவித்தார்.
நாடு முழுவதிலுமாக மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்புகளில் கசிப்பு விற்பனை மற்றும் அவற்றை வைத்திருந்த 12,011 சம்பவங்களும், கசிப்பு வடிக்கப்பட்ட 702 சம்பவங்களும், கள் சம்பந்தப்பட்ட 6,900 சம்பவங்களும், சாராயம் மற்றும் மேல்நாட்டுக் குடிவகைகள் சம்பந்தப்பட்ட 5,367 சம்பவங்களும் பதிவாகியுள்ளன என்று அவர் கூறினார்.
ஹெரோயின் மற்றும் கஞ்சா போன்ற போதைப் பொருள்கள் சம்பந்தப்பட்ட 2,755 சம்பவங்களும் சட்ட விரோதமாக இறக்குமதி செய்யப்பட்டிருந்த புகைப்பொருள் சம்பந்தப்பட்ட 1,557 சம்பவங்களும் பதிவாகியுள்ளன என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச-22)

## மாகாண சபை தேர்தல் தொடர்பில் 57 பேர் கைது

கொழும்பு,மார்ச் 10
தென் மற்றும் மேல் மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் 57 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது அவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.
இதேவேளை சட்டவிரோத பரப்புரை நடவடிக்கையில் ஈடுபட்ட 20 வாகனங்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.



கோப்புப்படம்

தென் மற்றும் மேல் மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் இதுவரை பொலிஸ் திணைக்களத்துக்கு 60 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்று அவர் கூறினார். (ச)

## பரீட்சை விண்ணப்பங்களை 14 இற்கு முன் அனுப்புங்கள்

### பரீட்சைத் திணைக்களம் அறிவிப்பு

கொழும்பு,மார்ச் 10
இந்த வருடம் ஓகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள ஜி.சீ.ஈ.உயர்தரப் பரீட்சைக்கான விண்ணப்ப முடிவுத்திகதி எதிர்வரும் 14 ஆம் திகதி என்று பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.
விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்யும்போது பாட எண், நகர எண் என்பனவற்றை பிழையின்றி குறிப்பிடுதல் வேண்டும். எந்தக் காரணம் கொண்டும் விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடப்பட்ட பாட எண்ணையோ, நகர எண்ணையோ பின்பு மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது என்று பரீட்சை ஆணையாளர் டபிள்யு. எம். என். ஜே. புஸ்பகுமார தெரிவித்தார்.



டபிள்யு.எம்.என்.ஜே.புஸ்பகுமார

பரீட்சை நிலையத்தையோ, விண்ணப்பித்த பாடங்களையோ, விண்ணப்பித்த மொழியையோ பின்னர் மாற்றம் செய்ய முடியாது என்று அவர் கூறினார்.
எனவே விண்ணப்பப் படிவத்தை சரியாகப் பூர்த்தி செய்து குறிப்பிட்ட திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டும் என்று அவர் கூறினார்.
குறித்த திகதிக்குப் பின்னர் அல்லது சரியாகப் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்று அவர் தெரிவித்தார். (ச)

## இரணை மாதா நகர் கிராமத்துக்கு போக்குவரத்து வசதி கிடைக்குமா?

கிளிநொச்சி ,மார்ச் 10
கிளிநொச்சி இரணைமாதா நகர் கிராமத்துக்கு போக்குவரத்து வசதிகள் இன்மையால் அங்கு வசிக்கும் குடும்பங்கள் தினமும் பல்வேறு சிரமங்களையும் எதிர் கொண்டு வருகின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இரணை மாதா நகர் கிராமம் பின்தங்கிய நிலையில் அடிப்படை வசதிகள் அற்ற ஒரு பகுதியாகவும் காணப்படுகின்றது. இதனால் அங்கு வாழும் 300 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் தினமும் பல்வேறு சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றன.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இந்த விடயம் தொடர்பில் கவனமெடுத்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (வ-55)

## தமிழர் அனைவரையும் அணி திரளக் கோரிக்கை

ஐ.நா.வின் மனிதவுரிமை மன்றத்தின் முன் இன்று இடம்பெறவுள்ள எழுச்சிப் போராட்டத்தில் அனைத்து தமிழ் உறவுகளும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள் ளனர்.

29.01.2014 அன்று நெதர்லாண்ட் நாட்டில் டென் ஹாக் நகரில் அனைத்துலக குற்றவியல் நீதிமன்றத்துக்கு முன்பாக ஆரம்பமான ஐ.நா. நோக்கி நீதிக்கான நடை பயணமானது, நேற்று முன்தினம் 38 ஆவது நாளாக வெற்றிகரமாக 19 கிலோ மீற்றர் தூரத்தை கடந்து Nyon நகரத்தை வந்தடைந்தது.



நீதிக்கான நடைபயணக் குழு

இந்தநடை பயணத்தில் மனித நேயப் பணியாளர்களுடன் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெயானந்தமூர்த்தியும் பிரிட்டன் வாழ் தமிழீழ உறவுகளும் இணைந்து நடை பயணத்தில் ஈடுபட்டனர்.

இன்றையதினம் எமது மக்களின் விடிவுக்காக ஜெனிவா நோக்கி நீதிகேட்டு அணி திரளுமாறு அனைத்து தமிழ் மக்களையும்சுவிஸ்தமிழர்ஒருங்கிணைப்புக்குழுவினர் அழைப்பு விடுத் துள்ளனர். (வ)

## திருத்தம் காணுமா? நானாட்டான் வீதி



மோசமான நிலையிலுள்ள வீதி

மன்னார், மார்ச் 10
மன்னார் மாவட்டத்தில் முசலி பிரதேச சபைக்கு உட்பட்ட மேத்தன் வெளி கிராம சேவகர் பிரிவில் சிலாவத்துறை பிரதான வீதியில் இருந்து மேத்தன் வெளி கிராம குளக்கட்டு வீதியின் ஊடாக நானாட்டான் செல்லும் வீதி பல வருட காலமாக செப்பனிடப்படாமல் உள்ளது.

அந்த வீதியூடாக அதிகமான ஆசிரியர்கள, முசலி பிரதேசத்தில் கடமையாற்றும், உத்தியோகஸ்தர்கள் , வியாபாரிகள் மற்றும் ஏழு கிராமங்களை மையமாகக் கொண்ட பண்டாரவெளி பாடசாலைக்குச் செல்லும் மாணவர்களும் குறித்த வீதியை பயன்படுத்தி வருகின்றனர்.

அத்துடன் தற்போது முசலி பிரதேசத்தில் கட்டி முடித்த ஆரம்ப வைத்தியசாலையும் அந்த வீதியில் அமையப் பெற்றுள்ளது. அது இன்னும் சில மாதங்களில் திறந்து வைக்கப் பட உள்ளது.

மழை காலங்களில் பாடசாலை மாணவர்கள், கர்ப்பிணித் தாய்மார்கள், முதியோர்கள் மற்றும் அரச அதிகாரிகள் என அனைவரும் பல்வேறு அசௌகரியங்களை எதிர் நோக்குவதாகவும் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

எனவே குறித்த வீதியின் அவல நிலை குறித்து உரிய அதிகாரிகளுக்கு முறையிட்டும் எவ் வித பலனும் இதுவரை கிடைக்கவில்லை.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக குறித்த வீதியை செப்பனிட்டு மக்களின் போக்குவரத்துக்கு ஏற்ற வீதியாக மாற்றித் தருமாறு முசலி பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (வ-56)

# வீதி புனரமைக்கப்படாததால் 267 குடும்பங்கள் சிரமத்தில்

முல்லைத்தீவு,மார்ச் 10
முல்லைத்தீவு வள்ளிபுனம் கணேஸ் குடியிருப்பில் உள்ள 267வரையான குடும்பங்கள் பயன்படுத்தும் பிரதான வீதி இது வரை புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுகின்றது. இந்த வீதியைப் பயன்படுத்துவோர் பல்வேறு சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர்.

முல்லைத்தீவு புதுக் குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட வள்ளிபுனம் கிராம கணேஸ் குடியிருப்பில் தற்போது 267 வரையான குடும்பங்கள் வசிக்கின்றன.

இந்த நிலையில் அந்தக் குடும்பங்கள் பயன்படுத்தும் பிரதான வீதி புனரமைப்புக்கு தெரிவு செய்யப்பட்டு ஒரு வருடத்தைக் கடந்த போதும் இது வரை புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுகின்றது.

குறித்த வீதியில் உள்ள இரு பெரிய பாலங்களின் கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள போதும், உரிய முறையில் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அத்துடன் இந்தப் பாலங்களுக்கு முன்பாகக் கிரவல் கொட்டப்பட்டு குவியலாகக் காணப்படுகின்றது.

இதனால் இந்த வீதியை பயன்படுத்துவோர் பல்வேறு சிரமங்களை எதிர் கொள்கின்றனர்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் குறித்த வீதியைத் திருத்த நடவடிக்கை எடுக்கு மாறு அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (வ-55)




மாலை கட்டும் போட்டியில் ஈடுபடும் பெண்கள்

## சர்வதேச மகளிர் தினத்தையொட்டி சாவகச்சேரியில் நடைபெற்ற போட்டிகள்

தென்மராட்சி, மார்ச் 10
சர்வதேச மகளிர் தினத்தையொட்டி சாவகச்சேரி நகர் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர், சங்கப் பிரிவுக்குட்பட்ட மகளிர் மற்றும் ஆடவர்களுக்கான பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகளை நடத்தினர்.

சாவகச்சேரி கண்டுவில் ஒழுங்கை புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலைய மைதானத்தில் போட்டிகள் நடத்தப்பட்டன.

இருபாலாருக்குமான இப்போட்டிகள் கீழ்ப்பிரிவு, மேற்பிரிவு என இரு பிரிவுகளாக நடத்தப்பட்டன. பெண்களுக்கு தேங்காய் துருவுதல், பூமாலை கட்டுதல், கிடுகு பின்னுதல் உள்ளிட்ட பல்வேறு போட்டிகளும் ஆண்களுக்கு முட்டி உடைத்தல், சாக்கோட்டம் உட்பட பல போட்டிகளும் நடத்தப்பட்டன. (வ-9)

## இருளில் மூழ்கும் கிளிநொச்சி நகர் வீதிகள்



கோப்புப்படம்

கிளிநொச்சி, மார்ச் 10
கிளிநொச்சி நகரத்தின் முக்கிய வீதிகளில் வீதி விளக்குகள் பொருத்தப்படாததன் காரணமாக நகரம் இருளில் மூழ்கியுள்ளது.

இதனால் இரவில் பயணிப்போர் விபத்துக்களை எதிர் கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி மருத்துவமனையிலிருந்து கரடிப்போக்கு சந்தி வரை வீதி மின்குமிழ்கள் பொருத்தப்பட வேண்டும் என்று மக்கள் நீண்டகாலமாக கோரிக்கை விடுத்து வரு கின்றனர். இதேவேளை அபிவிருத்தியடைந்துவரும் குறித்த நகரம் இருளில்மூழ்கி யிருப்பது தொடர்பாக நடைபெறும் கூட்டங்களிலும் மக்கள் குரல் எழுப்பி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (வ-18)

## வீசப்படும் வெற்று மதுப் போத்தல்கள்

### கிளிநொச்சி நகர வீதிகளில்

கிளிநொச்சி, மார்ச் 10
கிளிநொச்சி நகர வீதிகளில் இரவில் வீசப்படும் வெற்று மதுப் போத்தல்கள், வெற்று பியர் ரின்களால் வீதிகளில் பயணிப்போர் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர்.

இரவில் வீதியோரங்களில் நிறுத்தப்படும் வாகனங்களின் சாரதிகள் மது அருந்திவிட்டு அதன் போத்தல்களை வர்த்தக நிலையங்களுக்கு முன்பாக வீசுகின்றனர். இவ்வாறு வீசப்படும் போத்தல் உடைந்த நிலையில் காணப்படுவதால் அவற்றை அகற்றுவதில் இடர்களை எதிர்கொண்டுள்ளனர்.

இதேவேளை வாகனங்களில் நெரியுண்டு உடைந்த மதுப் போத்தல்களால் பாடசாலை செல்லும் மாணவர்கள், பொது மக்கள் இடர்களை எதிர்நோக்குகின்றனர்.

குறிப்பாக தென்பகுதியிலிருந்து வருபவர்கள் இரவில் மதுவை அருந்திவிட்டு போத்தல்களை வீதிகளில் வீசுகின்றனர் என்று அந்தப் பகுதி வர்த்தகர்கள் மற்றும் பொதுமக் கள் விசனம் தெரிவிக்கின்ற னர். (வ-18)

## கிளிநொச்சியில் மீள்குடியேறியோரின் தேவைகள் முழுமையாக நிறைவேற்றப்படவில்லை

### மாவட்ட மேலதிக அரச அதிபர் கூறுகிறார்

கிளிநொச்சி,மார்ச் 10
கிளிநொச்சி மாவட்டத்தில் மீள் குடியேறிய குடும்பங் களின் பல்வேறு தேவைகள் நிறைவேற்றப்படவில்லை. அவர்களுக்கு அரச சார்பற்ற நிறுவனங்களினது பணி மிக அவசியமாக உள்ளது என்று கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் செ.ஸ்ரீநிவாசன் தெரிவித்துள்ளார். கிளிநொச்சி திருவையாறுப் பகுதியில் ஜப்பானிய அரசின் நிதியுதவியுடன் நிர்மாணிக்கப்பட்டு திறந்துவைக்கப்பட்ட பொது நோக்கு மண்டபத் திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

இதன் போது அவர் மேலும் தெரிவிக்கையில்:

கடந்த முப்பது வருடங்களாக இடம்பெற்ற போர் காரணமாக பாதிக்கப்பட்டவர்கள் இன்று மீள்குடியேறி இருக்கின்றார்கள், அவர்கள் பல்வேறு தேவையுடையவர்களாகக் காணப்படுகின்றனர். அவர்களது தேவைகள் இவ்வாறான நிறுவனங்களினூடாகவே நிவர்த்தி செய்ய முடியும். இதற்கு ஜப்பானிய அரசு தொடர்ந்தும் உதவ வேண்டும் என்று தூதர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன். திருவையாறுக் கிராமத்திலேயே 48 குடும்பங்கள் பெண் களைத் தலைமை தாங்குகின்ற குடும்பங்களாகவும் குறிப்பிட்ட சில குடும்பங்கள் சிறுவர்களைத் தலைவர்களாகக் கொண்டவையாகவும் உள்ளன.

இந்த நிலையில் குறித்த கிராமத்திலும் பல்வேறு தேவைகள்உள்ளனஇவ்வாறான தேவைகள் அரசு மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களி னூடாக படிப்படியாக நிவர்த்தி செய்யப் பட்டு வருகின்றன - என்றார். (வ-55)

# ரயில் பாதை பணிகள் சீன நிறுவனத்திடம்

### போக்குவரத்து அமைச்சர் தகவல்

பெலியத்த- கதிர்காமம் ரயில்ப் பாதை அமைக்கும் பணிகள் சீன நிறுவன மொன்றிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்த ரயில்ப் பாதை நிர்மாணப் பணிக்காக 600 மில்லியன் அமெரிக்க டொலர் செலவிடப்பட உள்ளது.

சீனாவின் எக்ஸிம் வங்கியிடமிருந்து இதற்கான கடன் பெற்றுக் கொள்ளப்படவுள்ளது என்று போக்குவரத்து அமைச்சர் குமாரவெல்கம தெரிவித்தார். இந்தப் பாதையின் முதல் கட்ட நிர்மாணப் பணிகள் ஏற்க னவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதன் நிர்மாணப் பணிகள் எதிர்வரும் 2016 ஆம் ஆண்டில் நிறைவடையும் என்று எதிர்பார்க் கப்படுகிறது. இந்த சீன நிறுவனம், துறைமுகம் மற்றும் விமான நிலைய நிர்மாணப் பணிக ளையும்மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத் தக்கது. (ச)

Personal Classes
பௌதீகவியல்
G.C.E. A/L
கணிதம்
6-11 வரை (O/L)
உங்கள்
வீடுகளுக்கு வந்து
கற்பிக்கப்படும்.
Tel: 077 165 1621
(45628) (7.6.3)

# வெளிநாட்டவருக்கான விசாவில் மாற்றங்கள்

### குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் அறிவிப்பு

கொழும்பு,மார்ச் 10

வெளிநாட்டவர்களுக்கான விசா வகையீடு செய்யப்படவுள்ளது். இலங்கைக்குள் பிரவேசிக்கும் வெளிநாட்டு நபர்கள் தொடர் பில் விசா வழங்கும் நடைமுறைகளில் சில மாற்றங்கள் செய்யப்பட உள்ளன என்று குடிவரவுகுடியகல்வுத் திணைக் களம் அறிவித்துள்ளது.

இந்த ஆண்டில் நாட்டுக்குள் பிரவேசித்த 1.2 மில்லியன் வெளிநாட்டவர்களில் 3,00,000 பேர் சுற்றுலாப் பயணிகள் அல்ல என்று குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தற்போது வழங்கப்பட்டு வரும் விசா வகையீடு காரணமாக அவர்கள் சுற்றுலாப் பயணிகளாக அடையாளப் படுத்தப்பட் டுள்ளனர். எதிர்காலத்தில் இந்த நடைமுறையில் மாற்றங்கள் கொண்டு வரப்படவுள்ளது.

இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் போன்ற நாடுகளிலிருந்து இலங்கைக்கு வருகை தருவோர் வர்த்தக நடவடிக்கைகளிலேயே அதிகளவில் ஈடுபட்டுவருகின்றனர்.

அவர்களை சுற்றுலாப் பயணி களாகக் கருத முடியாது என்று குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தின் புள்ளி விவரத் தகவல்களின் அடிப்படையிலேயே நாட்டின் சுற்றுலாப் பயணிகள் பற்றிய தகவல்களை இலங்கை சுற்றுலா சபை வெளியிட்டு வருகின்றது.

எதிர்காலத்தில் நாட்டுக்குள் பிரவேசிக்கும் சுற்றுலாப் பயணிகள் தொடர்பான தகவல்கள் தனியாக பதிவு செய்யப்பட உள்ளன என்று குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ச)

# அமைச்சர்கள் இடையே மோதல்; களைய விசேட குழு நியமனம்

### ஜனாதிபதி நடவடிக்கை

கொழும்பு,மார்ச் 10

அமைச்சர்களுக்கு இடையிலான மோதல்கள், முரண்பாடுகளைக் களைய மூன்று சிரேஷ்ட அமைச்சர்களைக் கொண்ட விசேட குழுவை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நியமிக்கவுள்ளார். அமைச்சர்களுக்கு இடையில் கருத்து முரண்பாடு நிலவி வருகிறது. ஊடகங்களில் ஒருவரை ஒரு வர் பகிரங்கமாக விமர்சனம் செய்து கொள்வதாகக் குறிப்பி டப்படுகிறது.

இந்த நிலைமை அரசுக்குப் பாதக விளைவுகளை ஏற்படுத்தும் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

அமைச்சர்கள் பிரதியமைச் சர்களுக்கு இடையிலான மோதல்கள், முரண்பாடுகள் குறித்து ஜனாதிபதி உன்னிப்பாக அவதானித்து வருகின்றார் என்று தெரிவிக்கப்படுகிறது.

முரண்பாடுகளை களையும் நோக்கில் சிரேஷ்ட அமைச் சர்களைக் கொண்ட விசேட குழு நியமிக்கப்படவுள்ளது. இந்தக் குழு நியமனத்துக்காக ஏற்கனவே இரண்டு அமைச்சர்களின் பெயர்கள் பரிந் துரை செய்யப்பட்டுள்ளது.

மூன்றாவது அமைச்சரின் பெயர் பரிந்துரை செய்யப்பட்டதன் பின்னர் குழு நியமிக்கப்படும். (ச)

# நாட்டில் நீர்மின் உற்பத்தி 18 வீதத்தால் வீழ்ச்சி

நாட்டில் நிலவுகின்ற வறட் சியால் நீர்மின் உற்பத்தி 18 சதவீதத்தால் குறைவடைந் துள்ளது.

மின் உற்பத்தி நிலையங்களை அண்மித்த பகுதி களில் இது வரையில் மழைவீழ்ச்சி பதி வாகவில்லை என்று இலங்கை மின்சார சபையின் பிரதிப் பொது முகாமையாளர் செனஜித் திசாநாயக்க தெரிவித்தார்.

மின்சாரத்தை சிக்கனமாகப் பயன்படுத்துமாறு அவர் மக்களைக் கேட்டுள்ளார். (ச)

# தங்கம் கடத்திய மூவர் கைது

கொழும்பு,மார்ச் 10

சட்டவிரோதமான முறையில் 60 லட்சத்துக்கும் அதிக பெறு மதியான தங்கத்தை கடத்திச் செல்ல முயன்ற பெண்கள் இருவர் உட்பட மூவர் கட்டு நாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் நேற்றுமுன்தினம் இரவு இந்தியா நோக்கிப் பய ணிக்கத் தயாரானபோது கைது செய்யப்பட்டனர் என்று சுங்க ஊடகப் பேச்சாளர் லெஸ்லி காமினி தெரிவித்தார்.

கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து ஒரு கிலோ கிராமுக்கும் அதிகமான தங்கம் கைப்பற்றப்பட்டுள்ளது. (ச)

கடை வாடகைக்கு
இல. 403 மணிக்கூட்டுக் கோபுரவீதியில் (பெருமாள் கோயிலடி) அமைந்துள்ள புதிதாக கட்டப்பட்ட கடை ஒன்று வாடகைக்கு / குத்தகைக்கு விடப்படும்.
தொடர்பு : 077 8445932, 077 2100909

## மரண அறிவித்தல்

### வல்லிபுரம் கணேசானந்தன் (பண்டாரவளை வல்லிபுரம் அன் சன்ஸ்)



மூளாயைப் பிறப்பிடமாகவும், குரும்பசிட்டி மற்றும் கனடா ரொறன்ரோவை வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் கணேசானந்தன் (07.03.2014) வெள்ளிக்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் - நாகம்மா தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்ற நாகலிங்கம் (வெலிமடை நாதன் ஸ்ரோர்ஸ்(முன் னாள் உரிமையாளர்) - மீனாட்சி தம்பதியரின் மருமகனும் புஷ்பராணி அவர்களின் பாசமிகு கணவரும் பிரதீபன், நிருபா ஆகியோரின் அன்புத்தந்தையும் மங்கையற்கரசி, ஞானாம்பிகை, கிருஷ்ணவேணி, கோபாலச்சந்திரன் ஆகியோரின் அன்புச்சகோதரரும் காலஞ்சென்ற அ.அமிர்தலிங்கம் (முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர்), திகம்பரலிங்கம் காலஞ்சென்ற தங்கராசா, ஹேமமாலினி (அமுதா) ஆகியோரின் அன்புச்சகலனும் சுமன் அவர்களின் அன்புமாமனும் தனலட்சுமி, குணரத்தினம், கமலாதேவி, விவேகானந்தராசா, பராசக்தி, கிருஷ்ணன் காலஞ்சென்ற குகமணி, காராளசிங்கம், நாகலிங்கம், பத்மநாதன் ஆகியோரின் அன்புமைத்துனரும் ஆவார் அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் (11.03.2014) நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மங்களகிரி மூளாய் சுழிபுரம்.
077 7279238

தகவல்:
தங்க முகுந்தன் (மருமகன்)

## மரண அறிவித்தல்

### வைத்திலிங்கம் திரவியலிங்கம்



அராலி கிழக்கை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் திரவியலிங்கம் நேற்று (09.03.2014) ஞாயிற்றுக்கிழமை காலமானார்

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - அன்னம்மா தம்பதியரின் அன்புமகனும் சுப்பிரமணியம் - காலஞ்சென்ற மீனாட்சி தம்பதியரின் அன்புமருமகனும் அருட்சோதி உருத்திரபூபதியின் அன்புக் கணவரும் அருள்சோதி, சுகந்தினி, அகிலன், உதயதர்சினி, சுஜீ, மோகனவாணி, ஜனகா ஆகியோரின் அன்புத்தந்தையும் ரவிச்சந்திரன், இராசநாயகம், நகுலேஸ்வரன், அரிகரன், சஜிந்துபிரியா ஆகியோரின் அன்புமாமனும் விஸ்ணுதாசன், கிஷாந்தினி, கெங்காதரன், சிவசங்கர், சிவகௌரி, சக்திதாசன், லூசிகா, பராயகுப்தன் நலேயினி, அமுதஜோதி ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று(10.03.2014) திங்கட்கிழமை அராலி மினங்குபிட்டி இந்து மயானத்தில் காலை 11 மணியளவில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அராலி கிழக்கு

தகவல்:
குடும்பத்தினர்

## 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அன்னைமடியில்
04.04.1959

இறையடியில்
25.01.2014

அமரர் ஆதிசிவம் இராசகுமாரன்
(மானிப்பாய் பல நோக்கு கூ.சங்க முகாமையாளர்)

கடந்த 25.01.2014 இல் அகால மரணமடைந்த மாகியப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட எமது குடும்பகுல தெய்வத்தின் வீட்டுக்கிருத்தியம் இன்று (10.03.2014) திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற உள்ளது என்பதை உற்றார் உறவினர் துயரில் பங்கு கொண்டோர் அனைவரையும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மாசியப்பிட்டி, சண்டிலிப்பாய்

குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### திருமதி சந்தானலட்சுமி திருநாவுக்கரசு (வேவி)

குப்பிளானைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சந்தானலட்சுமி திருநாவுக்கரசு (வேவி) (06.03.2014) காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நமசிவாயம் திருநாவுக்கரசின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான நல்லையா - இராசம்மா தம்பதியரின் மூத்தமகளும் சீவரத்தினம், முருகையா காலஞ் சென்றவர்களான சிவபாதம், சிவனேசன், அச்சயபாதம், தங்கவடிவேல், சிவயோகம் ஆகியோரின் அன்புச்சகோதரியும் செல்வரட்ணம் (பிரான்ஸ்), சாந்தகுமாரி (சுவிஸ்), கருணாகரன் (கனடா), வசந்தகுமாரி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத்தாயும் நடராசா (பத்தர்), உதயகுமார், சுபத்திரா, நிலா ஆகியோரின் அன்புமாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.03.2014) திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக குப்பிழான் காடக்கடம்பை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காளிகோயிலடி, குப்பிளான் வடக்கு
021 4909536

தகவல்
தி. கருணாகரன் (மகன்)

## மரண அறிவித்தல்



### திருமதி இராசமணி வைரமுத்து

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் கோப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசமணி வைரமுத்து நேற்று (09.03.2014) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைரமுத்துவின் அன்பு மனைவியும், சிவலிங்கராஜா, சிவராணி, விஜயகுமார், தேவிகா ஆகியோரின் பாசமிகு தாயும், வசந்தராணி, குமாரசாமி, உமாசாந்தினி, சாந்தரூபன் ஆகியோரின் அன்பு மாமியும், கனிஸ்ரா, சுஜீபன், சுஜீந்தன், அஜந்தன், நிர்மல்ராஜ், அனோஜா, வர்சினி, தனுஜா, மிலானி, சஞ்சீவ்றாஜ், சுவர்ணிஜா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.03.2014) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ந.ப. 12 மணிக்கு உரும்பிராய் இளங்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


கிருஷ்ணன் கோயில் வீதி,
கோப்பாய் வடக்கு, கோப்பாய்.

தகவல்:
- குடும்பத்தினர்.

( 45629)(45.6.3)

## மரண அறிவித்தல்

### அன்னலிங்கம் சத்தியமூர்த்தி



கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், கல்வியங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட அன்னலிங்கம் சத்தியமூர்த்தி (09.03.2014) ஞாயிற்றுக்கிழமை அகால மரணமடைந்து விட்டார்.

அன்னார் அன்னலிங்கம் (கனடா) சற்குணலீலரம்பிகை (பூமணி -கனடா) தம்பதியரின் பாசமிகு மகனும் காலஞ்சென்ற அமிர்தலிங்கம் (சீனித்துரை) - மகேஸ்வரி தம்பதியரின் மருமகனும் லோகேஸ்வரியின் அன்புக்கணவரும் சஞ்சீவ், றஜீவ் (யா/ கொக்குவில் இந்துக்கல்லூரி கலைப்பிரிவு 2014), நிரோஜ் (கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி தரம் - 10), சஜித்தா (தரம் - 8 யா /கொக்குவில் இந்துக்கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுசிலா (கனடா), கிருஷ்ணமூர்த்தி (கனடா) காலஞ்சென்ற ஆனந்தமூர்த்தி, செந்தில் (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.03.2014) திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் விளையாட்டரங்க வீதி கல்வியங்காட்டில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் கட்டை ஆலடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

விளையாட்டரங்கு வீதி, கல்வியங்காடு

தகவல்:
மனைவி, பிள்ளைகள்

# பத்திரிகை வழங்குவதற்கு மாநகர சபை நிதி குறித்து கலந்துரையாடல்

## நலிவடைந்த ச.ச.நிலையங்களுக்கு

யாழ்ப்பாணம்.மார்ச் 10
நலிவடைந்த சனசமூக நிலையங்களுக்கு பத்திரிகை வழங்குவதற்கு வருடாந்தம் 5 ஆயிரம் ரூபா நிதியை சபை நிதியில் இருந்து வழங்குவது தொடர்பில் சபை உறுப்பினர்கள் மத்தியில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

யாழ். மாநகர சபை எல்லைக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட சனசமூக நிலையங்களில் தினப் பத்திரிகைகளைப் போட முடியாத நிலையில் உள்ள சனசமூக நிலையங்களுக்கு இந்த நிதியை வழங்குவதன் ஊடாக குறித்த சனசமூக நிலையங்களைச் சார்ந்த மக்களும் பாடசாலை மாணவர்களும் பயனடையக்கூடியதாக இருக்கும்.

இதுதொடர்பாக ஏற்கனவே சனசமூக நிலையங்கள் மாநகர சபையிடம் கோரியுள் ளதால் சபை நிதியில் இருந்து அதனை வழங்குவதற்கு உறுப் பினர்கள் ஆள்சேபிக்க வேண்டி இருப்பதால் இது தொடர்பில் சபையில் பிரே ரணை முன் வைக்கப்பட்டது. அதற்கமைவாக உறுப்பினர்கள் ஆட்சேபிக்கும் பட்சத்தில் வருடாந்தம் 5 ஆயிரம் ரூபாவை வழங்க முடியும் எனவும் கலந்துரையாடப்பட்டுள்ளது. (வ-14)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### யானை

துள்ளது என்பதை அறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்தனர். இவ்வாறு சென்ற நால்வரும் யானையின் பிடிக்குள் மாட்டிக் கொண்டனர். கொலை வெறியுடன் துரத்திய யானையிடமிருந்து தப்ப ஆளுக்கொரு பக்கமாக அவர்கள் சிதறி ஓடினர். ஆனால் மூவர் மட்டுமே தப்பிக் கிராமத்திற்கு வந்து சேர்ந்தனர்.

ஒருவர் காணாமற்போயிருந்தார். இதையடுத்து அவரைத் தேடி கிராம மக்கள் காட்டுக்குள் இறங்கினர். ஓரிடத்தல் மரத்தில் தொங்கிக் கொண்டிருந்தது காணாமற்போனவரின் சட்டையின் ஒரு துண்டு. அந்த மரத்தில் சிலர் ஏறிப் பார்த்தபோது, காணாமற்போயிருந்த இளைஞரின் சடலத்தை வைத்துக் கொண்டு, அருகிலுள்ள ஓர் இடத்தில் யானை நிற்பதைக் கண்டனர்.

பெரும் பிரயத்தனப்பட்டு யானையை விரட்டிவிட்டுப் பார்த்தபோது காணாமற் போயிருந்த இளைஞர் உயிரிழந்திருந்தார். பழையகமம், முரசுமோட்டை, கிளிநொச்சியைச் சேர்ந்த சிவசுப்பிரமணிய கஜானன் (வயது -18) என்கிற கிளிநொச்சி முரசுமோட்டை முருகானந்தா கல்லூரியில் 2014 கலைப் பிரிவில் பயிலும் மாணவனே இவ்வாறு பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

இரவு 6.30 மணியளவில் அவரது சடலம் மீட்கப்பட்டு கிளிநொச்சி வைத்தியசாலையில் வைக்கப்பட்டது. விசாரணைகளைப் புதுக்குடியிருப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, விசுவமடுவை அடுத்துள்ள தர்மபுரத்தில் தேங்காய் வியாபாரத்துக்காக அதிகாலையில் வீதியில் சென்று கொண்டிருந்தவரை யானை தாக்கியதில் அவர் காயமடைந்தார். வள்ளுர் முருகன் வீதி, கல்மடுநகர், வட்டக்கச்சியைச் சேர்ந்த சோமசுந்தரம் சபாபதிப்பிள்ளை (வயது-64) என்பவரே இவ்வாறு யானையால் மிதிபட்டார்.

தேங்காய் கொள்வனவுக்காக காலை 6.30 மணியளவில் சைக்கிளில் தர்மபுரத்துக்குச் சென்றுகொண்டிருந்த இவரை யானை கீழே தள்ளி வீழ்த்தி காலால் மிதித்து நசுக்கிக் கொல்லப் பார்த்தது. எனினும் யானையின் பிடியில் இருந்து தப்பி ஓடியதால் மயிரிழையில் உயிர் பிழைத்தார் அவர்.

வீதியில் வந்தவர்களின் உதவியுடன் தருமபுரம் மருத்துவமனைக்குச் சென்ற அவர் அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி பொது மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

இந்தப் பகுதிகளில் எப்போதுமே யானைத் தொல்லை இருந்ததில்லை என்கிறார்கள் ஊரவர்கள். குறித்த யானை வேறு பகுதியில் இருந்து கொண்டு வந்து இரவோடு இரவாக இந்தப் பகுதியில் விடப்பட்டிருக்கலாம் என்று அவர்கள் அச்சம் வெளியிட்டனர்.

ஊர் மனைக்குள் திடீரென புகும் இந்த யானை பெரும் அச்சத்தை எற்படுத்துகிறது என்றும் அவர்கள் கூறுகின்றனர். அந்த யானையைத் துரத்த முற்பட்ட பலரை அது திரும்பத் துரத்தியது என்றும் அவர்கள் கூறுகின்றனர். இதில் ஒருவர் காயமடைந்த தாகவும், பிரதேசவாசிகள் தெரிவித்துள்ளனர்.

போர் முடிந்த பின்னர் பொலன்னறுவைக் காட்டுப்பகுதியில் இருந்து விரட்டப்படும் யானைகள் இவ்வாறு வன்னிக்குள் நுழைகின்றன என்றும் சொல்லப்படுகிறது. (உ-14-21-55)

### யாழ்.மாநகர

வீட்டுக்காணிகளது ஆதன இலக்கமும் பொருத்தப்பட வுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த வேலைத்திட்டங்களை மாநகர சபை உத்தியோகத்தர்களும் சனமூக நிலையங்களின் அங்கத்தவர்களும் இணைந்து மேற்கொள்ள வுள்ளனர் என மாநகர சபை அறிவித்துள்ளது. (ஐ-14)

### இலங்கை

பா.ஜ.கவின் மூத்த தலைவர்களுள் ஒருவருமான யஸ்வந்த் சின்ஹா நிகழ்த்தவுள்ளார்.

கருத்துரையை பொன். இராதாகிருஸ்ணன் மற்றும் தமிழருவி மணியன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (5)

### நலன்புரி

வலி. வடக்கிலிருந்து இடம் பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மயிலிட்டி மற்றும் பலாலி ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்களைக் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட வளலாயில் குடியேற்றுவதே கட்டளைத் தளபதியின் நோக்கம். குடியேற இணக்கம் தெரிவிக்கும் மக்களுக்கு தலா 2 பரப்புக் காணியும், ஆரம்பத்தில் தற்காலிக கூடாரமும், பின்னர் நிரந்தர வீடும் அமைத்துக் கொடுக்கப்படும் என்றும் கட்டளைத் தளபதி அங்கு தெரிவித்துள்ளார்.

அத்துடன் அவர்கள் பரவைக் கடலில் தொழில் செய்வதற்குரிய வாய்ப்புக்களும் ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என்றும் உறுதியளித்துள்ளார். இது தொடர்பில் நலன்புரி நிலையங்களிலுள்ள மக்களிடம் சம்மதம் கேட்டுப் பெறுமாறு யாழ். மாவட்ட அரச அதிபருக்கு அவர் அறிவுறுத்தலும் வழங்கியுள்ளார்.

வளலாயில் மக்களை முழுமையாகக் குடியேற்ற முடியாவிட்டால், தற்போது மக்கள் தங்கியுள்ள நலன்புரி நிலையக் காணிகளையே, காணி உரிமையாளர்களுடன் கலந்துரையாடி, சுவீகரித்து அவர்களுக்கு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் மேற்படி கலந்துரையாடலில் இராணுவத்தினரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட முன்னாள் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்கவினாலும் இதேபொன்று நலன்புரி நிலைய மக்களை கடந்த வருடம் குறித்த வளலாய் பிரதேசத்தில் மீளக்குடியமர்த்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. ஆனால் அது வெற்றியளிக்கவில்லை. (உ-5)

### ஈழத் தமிழருக்கு

ரிக்கா கொண்டுவரும் பிரேரணையை இந்தியா முன்னின்று செயற்படுத்த வேண்டும் எனக் கோரி நாம் தமிழர் கட்சியினர் பெங்களூரில் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட அந்தக் கட்சியின் மாநில செயலாளர் ராஜு செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கையில்,

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 25 ஆவது கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா, பிரிட்டன் உள்ளிட்ட நாடுகள் பிரேரணையைக் கொண்டுவரவுள்ளன. இந்தப் பிரேரணையை இந்தியாவே முன்னின்று செயற்படுத்த வேண்டும் என நாம் வலியுறுத்துகிறோம். அத்துடன் தனித் தமிழீழம் குறித்து ஈழத்தமிழர்கள் மற்றும் புலம் பெயர்ந்த தமிழர்கள் மத்தியில் பொது வாக்கெடுப்பு நடத்த, ஐ.நா உள்ளிட்ட சர்வதேச அமைப்புக்களை இந்தியா வலியுறுத்த வேண்டும். இலங்கையில் தமிழர்கள் பகுதியிலிருந்து ராணுவத்தை வெளியேற்ற இந்தியா நிர்ப்பந்திக்க வேண்டும். இந்திய மீனவர்களை தொழில் ரீதியாக தடுக்கும் இலங்கை கடற்படையினர் மீது இந்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் போன்ற கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோம் என அவர் தெரிவித்தார்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கர்நாடக தமிழ் மக்கள் இயக்கத் தலைவர் இராஜன், கர்நாடக கன்னட தமிழ் கூட்டமைப்பு நிறுவன தலைவர் ஐ.எம்.எஸ் மணிவண்ணன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இதேவேளை,

ஈழத் தமிழருக்கு ஆதரவு வேண்டி முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில் உண்ணாவிரதப் போராட்டத்தை முன்னெடுத்துள்ள தமிழக மாணவர்கள் ஐவர் நேற்று மூன்றாவது நாளாகவும் தமது போராட்டத்தைத் தொடர்ந்தனர். தமிழக சட்ட சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை ஜெனிவா மாநாட்டில் இந்தியா முன்மொழிய வேண்டும், தனி ஈழம் அமைய, ஈழத் தமிழர்கள், புலம் பெயர்ந்த தமிழர்களிடம் ஐ.நா. மன்றம் பொது வாக்கெடுப்பு நடத்த வேண்டும் ஆகிய கோரிக்கைகளை வலியுறுத்தி, சென்னை அம்பேத்கர் சட்டக் கல்லூரி மாணவர் ஜி. யுவராஜ், மீனம்பாக்கம் ஏ.எம். ஜெயின் கல்லூரி மாணவர்கள் பா. கார்த்திக், எஸ். அருண்குமார், சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழகப் பொறியியல் கல்லூரி மாணவர்கள் செ. ஜெயப் பிரகாஷ், ஆ. சிவராஜ் ஆகிய 5 பேரும், சென்னை கோயம் பேட்டில் உள்ள தனியார் இடத்தில் கடந்த வெள்ளிக்கிழமை காலை 5 மணிக்கு உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்தனர் எனினும் இதற்கு அனுமதி மறுத்த பொலிஸார் மாணவர்களை அங்கிருந்து வெளியேற்றினர். இந்த நிலையில் அவர்கள் நேற்று முன்தினம் சனிக் கிழமை தஞ்சை முள்ளிவாய்க் கால் நினைவு முற்றத்தில் உள்ள தியாகிகள் மண்டப வாயிலில் அமர்ந்து கால வரையற்ற உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தை தொடர்வதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

### வழிபாடு

வழிபட முடியாதநிலை ஏற்பட்டுள்ளதாக வடமாகாண சபை உறுப்பினரிடம் அந்தப் பகுதி மக்கள் முறையிட்டனர். இதனையடுத்து கடந்த வியாழக் கிழமை அங்கு சென்ற உறுப்பினர் து.ரவிகரன் நிலைமைகளை அவதானித்ததோடு மக்களையும் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன் பின்னர் கருத்து தெரிவித்த அவர்,

1983 ஆம் ஆண்டு நிலவரப்படி ஏறத்தாழ 200க்கு மேற்பட்ட குடும்பங்கள் ஒதிய மலைக் கிராமத்தில் வாழ்ந்துள்ளன. 1984 ஆம் ஆண்டு அங்கு நடைபெற்ற படுகொலையின் பின்னர் மக்கள் அங்கிருந்து இடம்பெயர்ந்து வெளியேறினர். இறுதிப்போரின் பின்னர் தற்போது எஞ்சி யுள்ள குடும்பங்கள் குடியேறி வசிக்கின்றன.

தற்போது பழமை வாய்ந்த பிள்ளையார் கோயிலில் பூசை வழிபாடுகளில் அந்த மக்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

இதனைவிட ஏறத்தாழ 200 வருடங்களுக்கு மேலாக ஒதியமலையில் சூலம் வைத்து பாரம்பரிய முறைப்படியே வழிபாடியற்றி வந்தனர். ஒட்டுசுட்டான் வாவட்டி மலைக்கும் ஒதியமலைக்கும் இடைப்பட்ட பகுதியை மலையடி வைரவர் தான் காவல் காத்து வருவதாக ஐதீகக் கதைகளை அடிப்படையாகக் கொண்டு இவர்கள் வழிபாட்டில் ஈடுபட்டு வருகினறனர்.

தற்போது மீள்குடியேறி உள்ள மக்கள் தமது குல தெய்வமான வைரவரை வழிபடும் நோக்கில் மலை அடிவாரத்தை துப்புரவு செய்ய எடுத்து முயற்சியை இராணுவத்தினர் தடுத்துள்ளனர். அத்துடன் மக்களை அந்தப் பகுதிக்கு செல்லக்கூடாது என எச்சரித்துள்ளனர். அத்துடன் மலைப் பகுதியில் பௌத்த விகாரை ஒன்றை அமைப்பதற்கு இராணுவத்தினர் திட்டமிட்டு வருவதாகவும் ஊர் மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

இந்த நிலையைஅடுத்தே சம்பவ இடத்துக்கு சென்றே நிலைமைகளை அவதானித்தேன். இவை தொடர்பில் சம்பந்தப்பட்டவர்களின் கவனத்திற்குகொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (ஐ-435)

### மனித

பொதுநலவாய சாசனம் மற்றும் ஐ.நா. மனித உரிமைகள் சாசனம் ஆகிய ஏற்பாடுகளுடன் முற்று முழுதாக இசைந்து நடக்க வேண்டும். மொரீஷியஸ் பிரதமர் நவீன் சந்திரா ராம்கூலம் கனேடிய பிரதமருடன்சேர்ந்து இலங்கை பொதுநலவாய மாநாட்டைப் புறக்கணித்தார்.

தற்போது விவாத மட்டத்தில் இருக்கும் இலங்கை மீதான தீர்மானத்தின் முன் வரைவில் மாற்றங்கள் ஏற்படக் கூடும் என்றாலும் மனித உரிமை விழுமியங்களைப் பாதுகாத்தல் என்ற முக்கிய கடப்பாட்டில் கருத்தொற்றுமை ஏற்படும். இலங்கையில் போர்க் காலத்தில் நடந்த மனித உரிமை மீறல்களை விசாரிப்பதில் இலங்கை அக்கறை காட்ட வில்லை என்றே மொரீஷி யஸ் பிரதமர் நவீன் ராம் கூலம் அப்போது சுட்டிக் காட்டி யிருந்தார்.

இலங்கையில் சில விடயங்களில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக அந்த நாட்டு அரசு கூறுவதை ஏற்றுக்கொண்டாலும் சில முக்கிய மனித உரிமை விவகாரங்கள் மற்றும் நல்லிணக்க நடவடிக்கைகளில் முன்னேற்றம் ஏற்படாத காரணத்தினாலேயே இலங்கை மீதான தீர்மானத்தை முன்னின்று கொண்டுவருவதற்கு நாம் திட்டமிட்டுள்ளோம்.

மொரீஷியஸ் எந்தவொரு நாட்டின் அழுத்தத்திற்கும் உள்ளாகி செயற்படவில்லை. மனித உரிமைகளுக்காக முன்னிற்பதே தமது நாட்டின் தலையாய கடமை.

இலங்கை மீதான தீர்மானம் ஒட்டுமொத்த இலங்கைப் பிரஜைகளுக்கும் பொதுவான - உலக மக்களுக்கே பொதுவான மனித உரிமை விழுமியங்களுக்காக கொண்டுவரப்பட்டுள்ளதால் அந்தத் தீர்மானத்தை நிறைவேற்றுவதில் சிக்கல் இருக்காது - என்றார். (ஐ)

### அமெ.

டமைப்பின் உத்தியோகபூர்வ அறிவிப்பு அதன் தலைவர் ஆர். சம்பந்தன் மற்றும் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன் ஆகியோரின் கையெழுத்துக்களுடன் நேற்றிரவு வெளியிடப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இலங்கையில்உள்ள அனைத்து மக்களும் மதிப்புடனும் சமத்துவத்துடனும் நீதியுடனும் வாழ்வதை உறுதிப்படுத்துகின்ற நிரந்தரமான அமைதியையும் நல்லிணக்கத்தையும் எட்டுவது குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அர்ப்பணிப்புடன் இருக்கிறது. ஒன்றிணைந்த அமைதியான இலங்கையை உருவாக்குவதற்கு நேர்மையான நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக் கூறல் ஆகியவற்றில் நம்பகத் தன்மைவாய்ந்த நடவடிக்கைகள் அவசியம் என்று நாம் கருதுகிறோம். இந்த அடிப்படையில் உண்மைகளை வெளிக்கொண்டு வரவும் ஏற்றுக்கொள்ளத்தக்க அரசியல் தீர்வு ஒன்றை உருவாக்குவதற்கும் என அரசு மேற்கொண்டுள்ள பாதகமான நடவடிக்கைகள் நிறுத்தப்படுவது அவசியமாகிறது.

இராணுவத்தினரால் பெருமெடுப்பில் நிலங்கள் கையகப்படுத்தப்படுவது, பொது மக்கள் வாழ்வில் இராணுவத்தினரின் அத்துமீறிய பிரசன்னம், வடக்குக் கிழக்கில் தமிழ் பெண்களுக்கு எதிராக அதிகரித்து வரும் பாலியல் வன்கொடுமைகள் போன்றவை தொடர்பில் தமிழ் மக்கள் கவலை அடைகின்றனர்.

வடக்குக் கிழக்கில் இனப் பரம்பலை மாற்றியமைப்ப தற்கும் கலாசார மற்றும் மொழி அடையாளங்களைச் சிதைப்பதற்கும் இலங்கை அரசு மூர்க்கமாக முனைந்து நிற்பதும் கவலையளிப்பதாக உள்ளது. இத்தகைய நடவடிக்கைகள் நல்லிணக்கத்துக்கான சூழலை இல்லாமல் செய்கின்றன. அத்துடன் அரசு மீது தமிழ் மக்களுக்கு நம்பிக்கையும் அற்றுப்போய் உள் ளது. இதற்கும் அப்பால் மதச் சிறுபான்மையினர் மீதான துன்புறுத்தல்கள் மற்றும் பல வகைப்பட்ட வன்முறைகள் என்பன அதிகரிப்பதற்கும் அரசு மறைமுக உந்து சக்தியாக இருக்கிறது.

சாட்சிகளைப் பாதுகாக்கும் சட்டத்தை தாமதப்படுத்துவதன் மூலம் சட்டத்தின் ஆட்சி, நீதியின் சுயாதீனம் என்பன செயலிழந்து உள்ளன. எனவே ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் தலைமையில் சர்வதேச விசாரணை ஒன்று இடம்பெறுவதை உருவாக்கும் தீர்மான வரைவை நாம் வரவேற்கிறோம்.

வரவிருக்கும் இந்த விசாரணையை தெளிவுபடுத்தி வலுப்படுத்தும் வகையில் இந்தத் தீர்மான வரைவினை இணை அனுசரணை நாடுகள் மீளாய்வுக்கு உட்டுபடுத்துவதையும் நாம் எதிர்பார்க்கிறோம். இதனை அடைவதற் காக சர்வதேச சமூகத்துடன் நாம் தொடர்ந்து கலந்துரை யாடி வருகிறோம். இந்தத் தீர்மானம் அனைத்து இலங்கையர்களுக்கும் சாதகமாக இருப்பதையும், குறிப்பாக போரின் போது போரின் பின்னரும் பெருமளவில் துன் புறுத்தல்களுக்கு உள்ளான வர்களுக்கு சாதகமாக இருப் பதையும் இந்தத் தீர்மானம் உறுதிப்படுத்த வேண்டும்.

கடந்த காலத்தில் இரு தரப் புக்களாலும் மேற்கொள்ளப்பட்ட மீறல்கள் குறித்தும் தற்போது நாடுமுழுவதும் நடந்து கொண்டிருக்கும் வன்முறைகள் குறித்தும் சர்வதேச விசாரணைக்காக சர்வதேச விசாரணை ஆணைக் குழு ஒன்றை நோக்கி சர்வ தேச சமூகம் தமது கட்ட ளையை வழங்க வேண்டும் என நாம் கோரி நிற்கிறோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-ஐ)

# கிண்ணம் சுவீகரித்தனர் கார்மேல் போய்ஸ் வி.க.

யாழ்ப்பாணம், மார்ச் 10
செல்ரனின் அதிரடி ஆட்டத்தின் மூலம் ஸ்ரீ காமாட்சி விளையாட்டுக்கழக அணியை வீழ்த்தி வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது குருநகர் கார்மேல் போய்ஸ் விளையாட்டுக்கழக அணி.


கார் மேல் போய்ஸ் அணிக்கு வெற்றிக் கிண்ணம் வழங்கப்படுகிறது.

மானிப்பாய் சூப்பர் கிங்ஸ் விளையாட்டுக்கழகத்தால் நடத்தப்பட்ட 7 பேர் பங்கு கொள்ளும் 5 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட மென்பந்துச் சுற்றுத் தொடரின் இறுதியாட்டம் கடந்த வாரம் மானிப்பாய் செல்ல முத்து விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றது.
இறுதியாட்டத்தில் கொக்குவில் ஸ்ரீ காமாட்சி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து குருநகர் கார்மேல் போய்ஸ் விளையாட்டுக்கழக அணி களமிறங்கியது.
நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற கொக்குவில் ஸ்ரீ காமாட்சி விளையாட்டுக்கழக அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.
முதலில் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் ஸ்ரீ காமாட்சி விளையாட்டுக்கழக அணி 4 இலக்குகளை இழந்து 77 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.
இதில் மோகன் 43 ஓட்டங்களையும், நேரு 14 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றுக் கொண்டனர்.
பந்து வீச்சில் குருநகர் கார்மேல் போய்ஸ் விளையாட்டுக்கழக அணி சார்பாக பபி 2 இலக்குகளையும் அயன் ஒரு இலக்கையும் வீழ்த்தினர்.
78 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய குருநகர் கார்மேல் போய்ஸ் விளையாட்டுக் கழக அணி 4.3 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 3 இலக்கு களை மட்டும் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.
இதில் செல்ரன் 43 ஓட்டங்களையும், அயன் 18 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றுக் கொண்டனர்.
பந்து வீச்சில் கொக்குவில் ஸ்ரீ காமாட்சி விளையாட்டுக்கழக அணி சார்பில் சிந்து, அயன், அருண் ஆகியோர் தலா ஒரு இலக்கை வீழ்த்தினர்.
தொடர் ஆட்ட நாயகன் விருது கொக்குவில் ஸ்ரீ காமாட்சி விளையாட்டுக்கழக அணி வீரன் மோகனுக்கு வழங்கப்பட்டது.

**பந்து வீச்சில் குருநகர் கார் மேல் போய்ஸ் விளையாட்டுக்கழக அணி சார்பாக பபி 2 இலக்குகளையும் அயன் ஒரு இலக்கையும் வீழ்த்தினர்.**

சிறந்த பந்து வீச்சாளர்களுக்கான விருது குருநகர் கார்மேல் போய்ஸ் விளையாட் டுக் கழக அணி வீரன் அயனுக்கும் ஆட்ட நாயகன் விருது அதே அணியைச் சேர்ந்த செல்ரனுக்கும் வழங்கப்பட்டது. (ற-23)

## மன்னார் உதைபந்தாட்ட லீக் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், மார்ச் 10
மன்னார் உதைபந்தாட்ட லீக் தனது அங்கத்துவக் கழகங்களின் முதல் தர அணிகளுக்கு இடையே நடத்தும் 11 பேர் பங்கு பற்றும் லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரை நடத்தி வருகின்றது.
அதில் நேற்று முன்தினம் சனிக்கிழமை பள்ளிமுனை சென். லூட்சியா விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில், மன்னார் சென். சேவியர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பள்ளிமுனை சென். லூட்சியா விளையாட்டுக்கழக அணி மோதியது.
அதில் பள்ளிமுனை சென். லூட்சியா விளையாட்டுக்கழக அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ற-23)

**பள்ளிமுனை சென். லூட்சியா விளையாட்டுக்கழக அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.**


குப்பிளான் விக்னேஸ்வரா இ.க. மற்றும் சுன்னாகம் காந்திய இ.க. என்பவற்றுக்கு இடையிலான ஆட்டத்தில் ஒரு காட்சி

## வலைப்பந்தாட்டத்தில் வெற்றி பெற்றன விக்னேஸ்வரா, இணுவில் கலையொளி

வலி.வடக்கு, மார்ச் 10
உடுவில் பிரதேச இளைஞர் சம்மேளனத்தால் இளைஞர் கழகங்களுக்கு இடையே சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் நேற்று நடைபெற்ற ஆட்டங்களில் விக்னேஸ்வரா இளைஞர் கழகம் மற்றும் கலையொளி இளைஞர் கழகம் என்பன வெற்றி பெற்றுள்ளன.
குப்பிளான் விக்னேஸ்வரா இளைஞர் கழகத்துக்கும் சுன்னாகம் காந்திய மன்றம் இளைஞர் கழகத்துக்கும் இடையே நடைபெற்ற போட்டியில் விக்னேஸ்வரா இளைஞர் கழகம் 17:02 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது.
உடுவில் புளூஸ் இளைஞர் கழகத்துக்கும் இணுவில் கலையொளி இளைஞர் கழகத்துக்கும் இடையே நடைபெற்ற போட்டியில் இணுவில் கலையொளி இளைஞர் கழகம் 8:7 என்ற புள்ளிகள் அடிப் படையில் வெற்றி பெற்றது. (ற-86)

## அருணோதய, காந்திஜி கரப்பந்தில் சம்பியன்




யாழ்ப்பாணம், மார்ச் 10
ஊர்காவற்றுறை பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடத்தப்பட்ட கரப்பந்தாட்டச் சுற்றுத் தொடரில் ஆடவர் பிரிவில் அனலைதீவு அருணோதய விளையாட்டுக் கழகமும் மகளிர் பிரிவில் தம்பாட்டி காந்திஜி விளையாட்டுக் கழகமும் சம்பியனாகத் தெரிவாகின.
இந்த இறுதியாட்டங்கள் அண்மையில் ஊர்காவற்றுறை சென். அன்ரனிஸ் கல்லூரி கரப்பந்தாட்டத்திடலில் இடம் பெற்றது.
ஆடவருக்கான இறுதியாட்டத்தில் அனலைதீவு அருணோதய விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஊர்காவற்றுறை சென். ஜேம்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதியது.
அதில் அனலைதீவு அருணோதய விளையாட்டுக் கழக அணி 23:23, 25:21 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்று சம்பியனாகத் தெரிவானது.
தொடர்ந்து இடம்பெற்ற மகளிருக்கான இறுதியாட்டத்தில் தம்பாட்டி காந்திஜி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அனலைதீவு மணிகண்டான் விளையாட்டுக்கழக அணி மோதியது.
அதில் தம்பாட்டி காந்திஜி விளையாட்டுக்கழக அணி 25:18, 25:19 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றுச் சம்பியனாகத் தெரிவானது. (ற-23)

## வல்வை வி.க. உதைபந்து தொடர் இறுதி ஆட்டம் இன்று



யாழ்ப்பாணம், மார்ச் 10
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் வல்வை விளையாட்டுக் கழகம் நடத்திய உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டம் இன்று திங்கட்கிழமை வல்வை றெஜின்போ விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது.
அதில் பி.ப.3.30 மணிக்கு இடம்பெறும் மூன்றாமிடத்துக்கான ஆட்டத்தில் கம்பர் மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வதிரி பொம்மர்ஸ் கழக அணி மோதவுள்ளது.
மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் இறுதியாட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பலாலி விண்மீன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.
இந்த இறுதியாட்ட நிகழ்வுகளுக்கு பிரதம விருந்தினராக கப்பல் கப்டன் சிவநேசனும், சிறப்பு விருந்தினராக வடமராட்சி உதைபந்தாட்ட லீக் தலைவர் டி.எம்.வேதாபரணம், கௌரவ விருந்தினராக வல்வை விளையாட்டுக் கழகத்தின் முன்னாள் தலைவர் மு.தங்கவேல் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ற-23)



## உதைபந்து போட்டிகள் இன்று

யாழ்ப்பாணம், மார்ச் 10
கண்டாவளை கோட்டப் பாடசாலைகளுக்கு இடையே நடத்தப்படவுள்ள 15 வயது, 17 வயது, 19 வயது பிரிவு ஆண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டிகள் இன்று திங்கட்கிழமை தர்மபுரம் பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளன.
அதேவேளை 15 வயது, 17 வயது, 19 வயது பிரிவு ஆண், பெண் இருபாலாருக்குமான எல்லே போட்டிகள் நாளை செவ்வாய்க்கிழமை தர்மபுரம் பொது விளையாட்டு மைதானத்தில் காலை 8 மணிக்கு இடம்பெறவுள்ளன. (ற-23)

* * *

யாழ்ப்பாணம், மார்ச் 10
யாழ்.பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடத்தப்பட்ட ஆண்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுத் தொடர் இன்று திங்கட்கிழமை யாழ்.துரையப்பா விளையாட்டு அரங்கில் ஆரம்பமாகின்றது.
அதில் பி.ப. 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் குருநகர் சென்.றோக்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஒட்டுமடம் வானவில் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.
மாலை 4.30 மணிக்கு இடம்பெறும். ஆட்டத்தில் நாவாந்துறை கலைவாணி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து யாழ்.முஸ்லிம் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (ற-23)

## இன்றைய ஆட்டங்கள்



யாழ்ப்பாணம், மார்ச் 10
யாழ்.உதைப்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழகம் நடத்தும் "வடக்கின் சூப்பர் கிங்" உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.
அதில் இன்று திங்கட்கிழமை இடம்பெறும் ஆட்டத்தில் பி.பி. 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் புத்தூர் எவறெஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.
மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கொலின்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து யாழ். ஐக்கிய விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (ற-23)



# முதலிடத்தில் இலங்கை




**அணிகள் தர வரிசையில் இலங்கை அணி 129 புள்ளிகளுடன் தொடர்ந்து முதலிடத்தில் நீடிக்கிறது.**

சர்வதேச 20/20 கிரிக்கெட் போட்டியின் அடிப்படையில் அணிகள் மற்றும் வீரர்களின் தர வரிசைப்பட்டியலை சர்வதேச கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ளது.

இதன்படி அணிகள் தர வரிசையில் இலங்கை அணி 129 புள்ளிகளுடன் தொடர்ந்து முதலிடத்தில் நீடிக்கிறது. இந்தியா, தென்னாபிரிக்கா அணிகள் தலா 123 புள்ளிகள் பெற்றாலும், சமீபத்தில் சர்வதேச 20/20 போட்டியில் விளையாடாத இந்திய அணி விகிதாசாரப் புள்ளி அடிப்படையில் இரண்டாவது இடத்தில் நீடிக்கிறது.

துடுப்பாட்ட தர வரிசையில் நியூசிலாந்து வீரர் பிரன்டன் மக்கலம் முதலிடத்தில் தொடருகிறார். இந்திய வீரர்கள் விராட் கோஹ்லி, சுரேஷ் ரெய்னா, யுவராஜ் சிங் ஆகியோர் முறையே நான்காம் முதல் ஆறாம் இடங்களை பிடித்துள்ளனர்.

பந்து வீச்சில் மேற்கிந்திய தீவுகள் அணியின் சுழற்பந்து வீச்சாளர் சுனில் நரைன் முதலிடத்தில் நீடிக்கிறார். சகலதுறை ஆட்டக்காரர் வரிசையில் முகமது ஹபீஸ் (பாகிஸ்தான்) முதலிடத்திலும், ஷேன் வொட்சன் (ஆஸ்திரேலியா) இரண்டாவது இடத்திலும், யுவராஜ்சிங் மூன்றாவது இடத்திலும் உள்ளனர். (கு)



## வீரர்களின் கூட்டு முயற்சியே காரணம்

இலங்கை அணி 5 இலக்குகள் வித்தியாசத்தில் பாகிஸ்தானை வீழ்த்தி 5ஆவது முறையாக ஆசிய கிண்ணத்தை கைப்பற்றியது.

வெற்றி குறித்து இலங்கை அணியின் அணித்தலைவர் மத்தியூஸ் கூறுகையில், முக்கியமான ஆட்டங்களில் இறுதிப்போட்டிகளில் தோல்வி அடைந்து வந்தோம். அதற்கு முற்றுப்புள்ளி வைக்க விரும்பினேன். தற்போது ஆசியக் கிண்ணத்தை வென்றது மகிழ்ச்சி அளிக்கிறது.

**இந்த வெற்றிக்கு நான் மட்டும் காரணம் அல்ல வீரர்கள் அனைவரது கூட்டு முயற்சியால் வென்றோம். நாணயச் சுழற்சி முக்கிய பங்கு வகித்தது என்று கருதவில்லை, மலிங்கவின் பந்து வீச்சு மிகவும் அபாரமாக இருந்தது என்று தெரிவித்துள்ளார். (கு)**



## யுவராஜ் இல்லாத அணியா?



சமீபத்தில் ஐ.பி.எல் ஏழாவது சீசனுக்கான வீரர்களின் ஏலம் நடந்தது. இதில் கடந்த தொடர்களில் பஞ்சாப் அணிக்காக விளையாடிய யுவராஜ் சிங்கை பெங்களூர் அணி ரூபா 14 கோடி கொடுத்து ஏலத்தில் எடுத்தது.

இது குறித்து பஞ்சாப் அணிக்கு புதிதாக நியமிக்கப்பட்ட துணை பயிற்சியாளர் சஞ்சய் பங்கா கூறியது. சகலதுறைவீரர் யுவராஜ் சிங்கை மீண்டும் பஞ்சாப் அணிக்காக தெரிவு செய்ய முடியாதது ஏமாற்றம் அளிக்கிறது. பெங்களூர் அணி நிர்வாகம் அதிக விலை கொடுத்து வாங்கியதால், பஞ்சாப் அணியால் வாங்க முடியாமல் போனது.

யுவராஜ் இல்லாத பஞ்சாப் அணியை நினைத்துக்கூட பார்க்க முடியவில்லை, இருப்பினும் பெங்களூர் அணிக்காக சிறப்பாகச் செயல்பட வாழ்த்துகிறேன். இந்த முறை பஞ்சாப் அணியில் திறமையான வீரர்கள் இடம்பெற்றுள்ளனர், ஆஸ்திரேலிய வேகப்பந்து வீச்சாளர் மிட்சல் ஜோன்சனை தெரிவு செய்தது கூடுதல் பலம். இவர் தவிர ஷான் மார்ஷ், ஜோர்ஜ் பெய்லி, மக்ஸ்வெல், டேவிட் மில்லர், புஜாரா என சிறந்த துடுப்பாட்ட வீரர்கள் இடம் பெற்றிருப்பது அணியை வலுப்படுத்தி உள்ளதென தெரிவித்துள்ளார். (கு)

## எங்கள் அணி கிண்ணம் வெல்லாது



**பங்களாதேஷில் நடக்கும் 20/20 உலகக் கிண்ணத் தொடரில் சாதித்து மீண்டும் கிண்ணத்தை கைப்பற்றினால் நன்றாகத் தான் இருக்கும். ஆனால் மற்ற அணி வீரர்களின் திறமையைப் பார்க்கும் போது கிண்ணத்தைத் தக்க வைப்பது மிகவும் கடினம்**

20/20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் நடப்புச் சம்பியனான மேற்கிந்தியதீவுகள் தொடர்ந்தும் வெற்றியைத் தக்க வைப்பது கடினம் என அதிரடி மன்னன் கிறிஸ் கெய்ல் தெரிவித்துள்ளார்.

20/20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் வரும் மார்ச் 16ஆம் திகதி முதல் ஏப்ரல் 9ஆம் திகதி வரை பங்களாதேஷில் நடக்கவுள்ளது.

கடந்த 2012 இல் இலங்கையில் நடந்த தொடரில் யாரும் எதிர்பார்க்காத வகையில் மேற்கிந்தியத் தீவுகள் அணி சம்பியன் பட்டம் வென்றது.

இதன்பின் பங்கேற்ற 10 சர்வதேச 20/20 போட்டிகளில் ஐந்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணி தோற்றுள்ளது.

இதில் கடந்தஆண்டு பங்கேற்ற கடைசி 6 போட்டிகளில் ஐந்தில் தோல்வியடைந்தது.

இம்முறை மேற்கிந்திய தீவுகள், இந்தியா, பாகிஸ்தான் மற்றும் ஆஸ்திரேலியா என வலுவான அணிகள் உள்ள இரண்டாவது பிரிவில் இடம் பெற்றுள்ளது.

இது குறித்து மேற்கிந்திய தீவுகள் அணியின் அதிரடி ஆட்டக்காரர் வீரர் கிறிஸ் கெய்ல் தெரிவிக்கையில், பங்களாதேஷில் நடக்கும் 20/20 உலகக் கிண்ணத் தொடரில் சாதித்து மீண்டும் கிண்ணத்தைக் கைப்பற்றினால் நன்றாகத்தான் இருக்கும். ஆனால் மற்ற அணி வீரர்களின் திறமையைப் பார்க்கும் போது கிண்ணத்தைத் தக்கவைப்பது மிகவும் கடினம் என்றே தெரிகிறது. முதலில் முதல் சுற்றினை தாண்டுவது தான் முதல் லட்சியமாக இருக்க வேண்டும். இதில் சாதித்து விட்டால் பின் அரையிறுதி அடுத்து இறுதிப் போட்டிக்கு செல்ல முடியும் என்ற நம்பிக்கை உள்ளது.

அதேநேரம் சமீபத்திய 20/20 போட்டிகளில் எங்கள் அணி சரியாக செயல்படவில்லை, பல போட்டிகளில் தோற்றுள்ளோம். இங்கிலாந்துக்கு எதிரான 20/20 தொடரில் அசத்தி நாங்கள் அபாயகரமான அணி என்ற எண்ணத்தை மீண்டும் ஏற்படுத்த முடியும் என நம்புகிறேன் என கிறிஸ் கெய்ல் தெரிவித்துள்ளார். (கு)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

# மிக மோசமாக நடந்து கொண்ட ஆஸ்திரேலிய வீரர்கள்

கிரிக்கெட் போட்டிகளின் போது ஆஸ்திரேலிய வீரர்களின் நடத்தை மிக மோசமாக உள்ளது என பல் வேறு ஊடகங்கள் விமர்சித்துள்ளன.

தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் தொடரை ஆஸ்திரேலியா 2-1 என்ற கணக்கில் வென்றது.

கேப்டவுனில் நடைபெற்ற கடைசி டெஸ்ட் போட்டியின் கடைசி நாளில் ஆட்டத்தை தோல்வியில் முடிக்கக் கூடாது என்று தென்னாபிரிக்க வீரர்கள் போராடிக் கொண்டிருந்த போது, ஆஸ்திரேலிய வீரர்களின் மோசமான நடத்தை நன்கு வெளிப் பட்டது.

அணியை வழிநடத்த வேண்டிய அணித்தலைவர் கிளார்க்கே, ஒரு கட்டத்தில் நடுவரிடம் கடும் வாக்கு வாதத்தில் ஈடுபட்டது ரசிகர்களை முகம் சுழிக்க வைத்துள்ளது.

அந்த அணி வீரர்களின் நடத்தை குறித்து நியூஸ் லிமிடெட் கிரிக்கெட் எழுத்தாளர் ராபர்ட் கிரடாக் கூறுகையில், ஆஸ்திரேலிய அணியை முதலிடத்துக்குக் கொண்டு வரும் பொறுப்பு பயிற்சியாளர் டேரன் லீமேனுக்கு உண்டு.

அதேசமயம் அவருக்கு உள்ள அடுத்த சவால், அணி வெற்றி பெறும் போது வீரர்களைக் கட்டுப்படுத்துவது தான் என்று தெரிவித்துள்ளார்.

முக்கியமான கட்டத்தில் தென்னாபிரிக்காவின் டுபிளெஸ்ஸிஸ் ஆட்டமிழந்து வெளியேறும்போது ஆஸ்திரே லிய வீரர்கள் நாயைப் போல ஊளையிட்டதாகக் கருத்துகள் தெரிவிக்கப் பட்டிருந்தன.

இதுபோன்று ஆஸ்திரேலிய வீரர்கள் நடந்து கொண்டது சிறுபிள்ளைத் தனமானது என்று ஆஸ்திரேலியாவின் தலைமை அலுவலர் ஜேம்ஸ் சதர்லாண்டு சுட்டிக்காட்டியுள்ளார். (400)

# நிச்சயம் வித்தியாசத்தை உணர்வீர்கள்: சுரேஷ் ரெய்னா

உலக கிண்ண 20/20 போட்டிகளில் நிச்சயம் வித்தியாசத்தை காண முடியும் என இந்திய அணியின் வீரர் சுரேஷ் ரெய்னா தெரிவித்துள்ளார்.

20-20 பந்துப்பரிமாற்ற உலக கிண்ண கிரிக்கெட் போட்டி பங்களாதேஷில் எதிர்வரும் 16ஆம்திகதி ஆரம்பமாகிறது. ஆசிய கிண்ணப் போட்டிக்கான இந்திய அணியில் இடம் கிடைக்காத சுரேஷ்ரெய்னா, 20/20 உலக கிண்ணப் போட்டியில் அணியில் இடம் பிடித்துள்ளார்.

இந்த போட்டிக்கான தன்னை தீவிரமாக தயார் படுத்தி வரும் ரெய்னா அளித்த பேட்டியில், ஆசிய கிண்ணப் போட்டிக்கான அணியில் இடம் பிடிக்க முடியாமல் போனது கஷ்டமாக தான் இருந்தது

எனவே உள்ளூர் போட்டிகளில் விளையாடி உடல் தகுதியில் முன்னேற்றம் காண கடுமையாக உழைத்து வருவதாகவும், கவனத்தை அதிகப்படுத்த தியான பயிற்சிகள் செய்து வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

மேலும் முன்னாள் அணித் தலைவர் கங்குலி ஆலோசனைகள் செய்ததாகவும், உலக கிண்ணப் போட்டியில் நிச்சயம் வித்தியாசத்தை காண முடியும் எனவும் தெரிவித்துள்ளார். (400)

Diploma in Mobile Phone Repairing
சகல வகையான கைத்தொலைபேசிகளையும்
நீங்களே திருத்துவதற்கான சுயதொழில் வாய்ப்பு கற்கைநெறி
யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, நெல்லியடி, மானிப்பாய்
ஆகிய இடங்களில் புதிய பிரிவுகள்
ஆரம்பமாக உள்ளதால் இக் கற்கைநெறியில்
இணைய விரும்பும் மாணவர்கள் உடன்
தொடர்புகொள்ளவும். முடிவில் அரச சான்றிதழ்
வழங்கப்படும். (காலம் - 2 மாதங்கள்)
இன்றுவரை என்னிடம் 2050 மேற்பட்ட மாணவர்கள்
கற்றுவெளியேறி உள்ளதுடன் உரிய தொழில்
வாய்ப்பையும் பெற்றுள்ளனர். பிரிவு 05 ஆரம்பமாகி
20 மாணவர்கள் பயிற்சி பெற்றுக்கொண்டிருக்கின்றனர்.
குறிப்பு :- இதுவரைகாலமும் யாழ்ப்பாணத்தில் எவரும் கற்பிக்காத நுணுக்கங்கள் தெளிவாக கற்பிக்கப்படும்.
மேலதிகவிபரங்களுக்கு :- 0777 110 862

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
அரச ஊழியர்கள், தனியார் ஊழியர்கள், தொழில் தேடுவோர்
வெளிநாடு செல்வோர், இளைஞர், யுவதிகள் இணையமுடியும்.
"எமது 3 மாத பயிற்சி நிறைவில் சரளமாக ஆங்கிலத்தில் பேசமுடியாதுவிடின் முழுப்பணமும் திருப்பிவழங்குவதற்கான உத்தரவாதம் வழங்கப்படும்"
சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் 15.03.2014 சனிக்கிழமை
பிரிவு : 4 03.00-05.00
வாரநாள் பிரிவுகள் ஆரம்பம் 11.03.2014 செவ்வாய்
1. காலை 9.00-11.00 2. காலை 11.00-01.00
SAAMSON LANGUAGE SCHOOL
179, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
077 621 4567

# குற்றப் பத்திரிகை வழங்க வேண்டும்

ஸ்ரீசாந்த், சண்டிலா உள்ளிட்ட அனைவருக்கும், குற்றப்பத்திரிகை நகலை வழங்க வேண்டும் என, டில்லி பொலிஸாருக்கு நீதிமன்றம் உத்தரவிட்டது.

ஆறாவது பிரிமியர் கிரிக்கெட்டி போட்டியில் சூதாட்டத்தில் ஈடுபட்ட ராஜஸ்தான் வீரர்கள் ஸ்ரீசாந்த், சண்டிலா, அங்கித் சவான் மற்றும் 19 பேர், டில்லி பொலிஸிடம் சிக்கினர். இவர்கள் மீது மொகோகா' எனும் பயங்கரவாத தடுப்பு சட்டத்தின் கீழ் வழக்கு பதியப்பட்டது.

இவர்கள் கடந்த ஜூன் 10 இல் பிணையில் வெளி வந்தனர். இவர்கள் மீது 6000 பக்க குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

டில்லி மொகோகா' , நீதிமன்றம் கூடுதல் பிரிவு நீதிபதி பாரத் பிரஷார் முன், நேற்று முன்தினம் இந்த வழக்கு மீண்டும் விசாரணைக்கு வந்தது. ஸ்ரீசாந்த், சண்டிலா, அங்கித் சவான் உள்ளிட்ட பலர் நீதிமன்றத்தில் சமுகமளித்திருந்தனர்.

அப்போது குற்றவாளிகள் தரப்பில், தங்களுக்கு குற்றப்பத்திரிகை நகல் வழங்கப் படவில்லை, இதை ஆராயவில்லை என, வாதிட்டனர்.

இதையடுத்து நீதிபதி பாரத் பிரஷார் கூறியது:

குற்றப்பத்திரிகை தரவில்லை என்ற காரணத்துக்காக, ஒவ்வொரு முறையும் இந்த வழக்கு ஒத்தி வைக்கப்படுவது வருத்தமாக உள்ளது.

வழக்கில் சம்பந்தப்பட்ட அனைவருக்கும், குற்றப்பத்திரிகை நகலை பொலிஸார் விரைவில் வழங்கவேண்டும். இதை விசாரணை அதிகாரி உறுதி செய்ய வேண்டும்.

இதன் பின் வழக்கின் மீது விவாதங்கள் ஆரம்பமாகும். இந்த வழக்கு எதிர்வரும் மார்ச் 26 இல் மீண்டும் விசாரணைக்கு வரும்.

இவ்வாறு நீதிபதி பாரத் பிரஷார் தெரிவித்தார். (400)

# மரண அறிவித்தல்

## திருமதி மங்கையர்க்கரசி கந்தசாமி



மாவிட்டபுரத்தை பிறப்பிடமாகவும், ஞான பண்டிதா வீதி கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட மங்கையர்க்கரசி கந்தசாமி (9/03/2014) ஞாயிற்றுக்கிழமை இயற்கை எய்தியுள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற இளயதம்பி கந்தசாமி (விவசாயத் திணைக்கள உத்தியோகத்தர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற திரு திருமதி சிற்றம்பலம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற திரு திருமதி இளயதம்பி தம்பதியரின் அன்பு மருமகளும் மஞ்சுளா, மாலினி, காலஞ்சென்ற மைதிலி, மற்றும் முருகதாசன் (பிரான்ஸ்), மலர்வண்ணன் (மேற்பார்வையாளர் யாழ்கோ), முகுந்தன் (U.N.H.C.R )ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஈஸ்வரகுமார் (ஸ்ரீ முருகன் ஸ்ரோர் சுன்னாகம்), இந்திரகலா (பிரான்ஸ்)மனோகரி ( (T.O நல்லூர் பிரதேச சபை), இந்திரா ( ஆசிரியை மு/ சுதந்திரபுரம் அ.த.க.பாடசாலை) ஆகியோரின் பாசமிகு மாமியும் அகரன், அனிக்கா (பிரான்ஸ்), டஸ்வினி, மாதங்கி (பிரான்ஸ்), ஜாதவி ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் காலஞ்சென்றவர்களான கனசபை, சிவப்பிரகாசம், தங்கரத்தினம் மற்றும் செல்வநாயகம், வன்னியசிங்கம், மகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான கந்தையா, பூரணம், வைத்திலிங்கம் ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ( 10.03.2014) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணி அளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

ஞான பண்டிதா வீதி,
கொக்குவில் மேற்கு.

தகவல் :
பிள்ளைகள்

கணனி உலகில் நம்பகமான சேவையில்
10 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
northern PC PARK




TOWN SHOW ROOM
10-14, STANLY ROAD
JAFFNA
021 222 2050
TECHNICAL DIVISION
288, PALALY ROAD.
KANTHARMADAM, JAFFNA.
021 222 9581
MAIN SHOW ROOM
269E, PALALY ROAD,
KANTHARMADAM, JAFFNA
021 222 0388

சர்வதேச ஆங்கில பரீட்சைகள்
ஆங்கிலத்திற்கு No.1 பயிற்சி மையம்
IELTS
(Duration: 40 hrs with free 4 mock exams)
• Latest training materials.
• Skills development in all four categories.
• Personalised guidance and ample of opportunities to interact with the lecturer.
• Depend on individual needs, the student can access other English Modules FREELY.
விரிவுரைகள் Oxford University UK postgraduate ஆல் வழங்கப்படும்
IELTS பரீட்சை பதிவுகளை எந்தக்கிளையிலும் இலகுவாக மேற்கொள்ள முடியும்
Spoken English
அனுபவம் வாய்ந்த ஆசிரியர்கள்.
அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்.
அச்சடித்த பாடப்புத்தகங்கள்.
மல்ரிமீடியா ஊடான கற்பித்தல்.
நவீன வசதிகளுடன் கூடிய வகுப்பறைகள்.
புதிய பிரிவுகள் ஆரம்பம்
City & Guilds A1, A2, B1, B2
(ESOL) Diploma International English for Speakers of other Languages
சித்தியடைவதற்கான 100% உத்தரவாதம்
திருமணம் செய்து நிரந்தர விசாவில் London செல்பவர்கள், உயர்கல்விக்கு UK செல்வோருக்கு பிரித்தானிய அரசால் கோரப்படும் ஆங்கில பரீட்சைகள் எமது நிறுவனத்திலே கற்று எமது நிறுவனத்திலேயே பரீட்சைக்கு இலகுவாக தோற்றமுடியும்.
DMI COMPUTER EDUCATION
யாழ்ப்பாணம் No.113, கஸ்தூரியார் வீதி, Tel.: 021-222 4403
நெல்லியடி M.M.V வீதி, Tel.:021-226 2470
சாவகச்சேரி கண்டி வீதி, (HNB அருகில்) Tel.:021-227 0775
சுன்னாகம் Tel.:021-224 1970

வெற்றி பெற்ற விசாக்களை ஆய்வு செய்த பின்னர் மீதியைப் பேசிக்கொள்ளலாம்
★ கனடாவில் படிக்க உழைக்க வெறும் 23 இலட்சம் போதும்
★ இத்தாலி சட்டரீதியாக இலகுவில் செல்லலாம்
★ நியூசிலாந்தில் படிக்க IELTS வேண்டாம்
★ சைப்பிரஸ்சில் படிக்க 1 இலட்சம் வரை உழைக்க IELTS தேவையே இல்லை
★ VisitVisa ஆலோசனைகளும் பெறலாம்
(நிபந்தனைகளுடன்)
7 நாள்களும் திறந்திருப்போம்
திசைகாட்டி பிறைவேற் லிமிற்
175 பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி யாழ்ப்பாணம்.
021 2219016, 021 5689090
www. thisaivisa.com

தொழில்நுட்பக்கல்லூரி எதிரில்
BIT 13 வருடங்களாக உங்களுடன்...
கொழும்புப் பல்கலைக்கழகத்திடமிருந்து
கணினிப் பட்டக் கற்கைநெறி
Semester 2,4 & 6
MIS
கணினிக்கல்வி நிறுவனம்
# 26, Brown Road, Jaffna.
புதிய கல்வியாண்டிற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன
A/L 3 pass அல்லது
O/L உடன் FIT கற்பதன் மூலம்
Call Us: 077 6577359, 021 222 0288
BIT இணைப்பாளர்
MIS BIT CAMPUS

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 10.03.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.